
# தர்மசக்கரம்





பிங்கள ௵ ஆனி ௴ சக்கரம் 26 ஆரம் 6

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை – 639 115 திருச்சி ஜில்லா

*திருநெல்வேலி ஜில்லா*

# பாபநாசத்தில் அந்தர்யோகம்-14

## 5, 6 & 7—8—77

பொதியமலை அடிவாரத்தில் இருக்கும் பாபநாசம் க்ஷேத்திரத்தில் 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5ஆம் தேதி வெள்ளி, 6ஆம் தேதி சனி, 7ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய மூன்று நாட்களிலும் கீழ்க்கண்ட வாழ்க்கை முறைப்படி திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் **ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர் அவர்கள்** தலைமையில் அந்தர்யோகம் நடைபெறும். அம்பாசமுத்திரம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஆறு மைல் தூரத்தில் பாபநாசம் என்னும் இந்த க்ஷேத்திரம் இருக்கிறது.

அந்தர்யோகத்தில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள், நபர் ஒன்றுக்கு ரூ. 18-00 வீதம், திருநெல்வேலி ஜில்லா, அம்பாசமுத்திரம், நூல் ஜவுளி வியாபாரம், **திரு. Sv. Rm. A. நடராஜ முதலியார்** அவர்களுக்கு மணியார்டர் மூலமோ, நேரிலோ செலுத்திப் பெயர்களைப் பதிவு செய்து, அனுமதி கார்டு பெற்றுக்கொள்ளவேண்டும். பதிவு பெற்ற முதல் 200 பேர்கள் மட்டுமே எடுத்துக்கொள்ளப்படுவார்கள். கலந்து கொள்ளாத அன்பர்களுக்குத் தொகை வாபஸ் செய்ய இயலாது. பதிவு செய்யப் பெற்றவர்களுக்குப் பதிலாக வேறு ஒருவர் எடுத்துக்கொள்ளப்படமாட்டார். பதிவு செய்துகொண்டவர்கள் அனைவரும் ஆகஸ்ட் மாதம் 4ஆம் தேதி வியாழக்கிழமை மாலையே பாபநாசத்திற்கு வந்துசேரவேண்டும்.

தாய்மார்களும் இதில் கலந்துகொள்ளலாம். பன்னிரண்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும், கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், நடைமுறையைப் பின்பற்ற இயலாதவர்களும் இதில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள். தங்கள் சௌகரியத்திற்குத் தேவையான படுக்கை முதலியவற்றைத் தாங்களே கொண்டுவரவேண்டும்.

திருநெல்வேலி, நாகர்கோவில், திருக்குற்றாலம், தென்காசி, சங்கரன்கோவில் முதலிய இடங்களிலிருந்து பாபநாசத்திற்குப் போக பஸ்கள் கிடைக்கும். அம்பாசமுத்திரத்திலிருந்து பாபநாசத்திற்கு அடிக்கடி பஸ்கள் கிடைக்கும்.

### வாழ்க்கை முறை

| | மணிமுதல் | மணிவரை | | மணிமுதல் | மணிவரை |
|---|---|---|---|---|---|
| துயில் எழுந்திருத்தல் | 5-00 | | போஜனம், ஓய்வு | 12-30 | 3-00 |
| எல்லாரும் ஒன்றுகூடி நாமஜபம் | 5-30 | 6-00 | மாலை உபந்யாசம் | 3-00 | 4-00 |
| நீராடல் முதலியன | 6-00 | 7-30 | தனியாக வாசித்தல் | 4-00 | 4-30 |
| காலை தியானம் | 7-30 | 8-00 | பானம், உலாவல், | | |
| சிற்றுண்டி | 8-00 | 9-00 | நீராடல் முதலியன | 4-30 | 6-15 |
| காலை உபந்யாசம் | 9-00 | 10-00 | நாம ஜபம் | 6-15 | 6-45 |
| மௌனம் | 10-00 | 11-00 | தியானம் | 6-45 | 7-15 |
| பஜனை | 11-00 | 11-45 | இரவு போஜனம் | 7-15 | 8-30 |
| கோவில் வழிபாடு | 11-45 | 12-30 | சத் சம்பாஷணை | 8-30 | 9-30 |

குறிப்பு:— மூன்றுவது நாள் ஞாயிறு மாலை 5 மணியுடன் அந்தர்யோகம் முடிவுபெறும்.

*காரியதரிசி*
**Sv. Rm. A. நடராஜ முதலியார்**, *அம்பாசமுத்திரம்.*

**சாந்தானந்த**
*ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்*

**பாபநாசம் அந்தர்யோகத்தில் தபோவன வெளியீடுகள் விலைக்குக் கிடைக்கும்.**

# தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

| சக்கரம் 26 | பிங்கள ஹு ஆனி மீ | ஆரம் 6 |
|---|---|---|

## பொருளடக்கம்



## சந்தா விவரம்

**1. ஆண்டு சந்தா ரூ. 10**

ரூ. 10 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

**2. சகாய சந்தா ரூ. 5**

தர்ம சக்கரம் அடக்க விலைக்கு வெளியிடப்படுகிறது. ஆண்டு சந்தா ரூபாய் பத்து செலுத்த இயலாதவர்கள் ரூபாய் ஐந்து மட்டும் அனுப்பலாம். பாக்கி ரூபாய் ஐந்தைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவி நிதி' யினின்று ஈடுசெய்துகொள்கிறோம். தெய்வீக விஷயமாதலால் ரூபாய் பத்து செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்த வேண்டாம்.

**3. டிபாஸிட் சந்தா ரூ. 100**

ரூ. 100 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்மசக்கர பத்திரிகை தங்களுக்கு வந்துகொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்தி புதுப்பிக்க வேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும் பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

**உள்நாடு தனி இதழ் ரூ. 1-00 வெளி நாடு வருட சந்தா ரூ. 20-00**

## அந்தர்யோக விவரங்கள்

**பாண்டிச்சேரியில் 19—6—77 ஞாயிற்றுக்கிழமை**

*இடம்: சொசியத்தே புரோகிரேசியத் உயர்நிலைப்பள்ளி*

*நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை*

*நடத்துபவர்:* ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

**திருநெல்வேலி ஜில்லா—கோவில்பட்டியில் 19—6—77 ஞாயிற்றுக்கிழமை**

*இடம்: ரயில்வே ஸ்டேசனுக்கருகிலுள்ள லாயல் மில் துவக்கப்பள்ளி*

*நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை*

*நடத்துபவர்:* ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

**மதுரை ஜில்லா—திருமங்கலத்தில் 19—6—77 ஞாயிற்றுக்கிழமை**

*இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண விவேகானந்த தபோவனம்*

*நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-15 மணிவரை*

*நடத்துபவர்:* ஸ்ரீமத் சுவாமி ஸதானந்தர்

**சென்னையில் 26—6—77 ஞாயிற்றுக்கிழமை**

*இடம்: புரசவாக்கம் ஸர்.M.CT. முத்தையாசெட்டியார் மாணவர் உயர்நிலைப்பள்ளி*

*நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை*

*நடத்துபவர்:* ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

**திருநெல்வேலி ஜில்லா—கல்லிடைக்குறிச்சியில் 3—7—77 ஞாயிற்றுக்கிழமை**

*இடம்: அகஸ்தியர் கோவில்*

*நேரம்: காலை 9-30 மணிமுதல் மாலை 4-30 மணிவரை*

*நடத்துபவர்:* ஸ்ரீமத் சுவாமி பரானந்தர்

**தர்மபுரி ஜில்லா—பாப்பாரப்பட்டியில் 9—7—77 சனிக்கிழமை**

*இடம்: பழைய சுப்பிரமணிய சுவாமி கோவில்*

*நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-45 மணிவரை*

*நடத்துபவர்:* ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

**மதுரை ஜில்லா—திருவேடகத்தில் 10—7—77 ஞாயிற்றுக்கிழமை**

*இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம்*

*நேரம்: காலை 10-00 மணிமுதல் இரவு 4-30 மணிவரை*

*நடத்துபவர்:* ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

*உணவு வசதி: நேரில் பகல் உணவிற்கு 90 பைசாவும், மாலை சிற்றுண்டிக்கு 60 பைசாவும் செலுத்தி சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.*

**சேலம் ஜில்லா—கனககிரியில் 10—7—77 ஞாயிற்றுக்கிழமை**

*இடம்: வேம்படிதாளம் கனககிரி கோவில்*

*நேரம்: காலை 10-00 மணி முதல் 4-30 மணிவரை*

*நடத்துபவர்:* ஸ்ரீமத் சுவாமி நித்யானந்தர்

**விருதுநகரில் 17—7—77 ஞாயிற்றுக்கிழமை**

*இடம்: பெரிய காளியம்மன் கோவில்*

*நேரம்: காலை 9-30 மணிமுதல் மாலை 4-30 மணிவரை*

*நடத்துபவர்:* ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

**மதுரை ஜில்லா—கம்பத்தில் 17—7—77 ஞாயிற்றுக்கிழமை**

*இடம்: ஸ்ரீ வாசவி கன்னிகா பரமேஸ்வரி கல்யாண மஹால்*

*நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை*

*நடத்துபவர்:* ஸ்ரீ மத் சுவாமி அசலானந்தர்

प्रज्ञानं ब्रह्म

# தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

| சக்கரம் 26 | பிங்கள ௵ ஆனி ௴ | ஆரம் 6 |
|---|---|---|

## பிரார்த்தனை

यदिदं किंच जगत् सर्वं प्राण एजति निःसृतम् ।
महद्भयं वज्रमुद्यतं य एतद् विदुरमृतास्ते भवन्ति ॥

— कठोपनिषत्

யதிதம் கிஞ்ச ஜகத் ஸர்வம் ப்ராண ஏஜதி நி:ஸ்ருதம்।
மஹத்பயம் வஜ்ரமுத்யதம் ய ஏதத் விதுரம்ருதாஸ்தே பவந்தி॥

— கடோபநிஷதம்

ஜகத் முழுதும் பரமனிடத்திருந்து வந்துள்ளது. ஓங்கிய வஜ்ராயுதம் போன்று இருந்து கொண்டு அவன் ஜகத்தை நடாத்துகிறான். இதை அறிபவர் அமிர்தசொருபமாகின்றனர்.

பார்க்கின் அண்டபிண்டப் பரப்பனைத்தும் நின் செயலே
யார்க்குஞ் செயலில்லையே ஐயா பராபரமே.

— தாயுமானவர்

# அருள் விருந்து

ஞானவானுக்கு அமைதி தானுக வந்தமைகிறது.

மிகைபடப் பேசுபவர்கள் பெருங்காரியத்துக்கு உதவமாட்டார்கள்.

பக்தன் ஒருவனுடைய பாங்கை அவனுடைய செயலே விளக்குகிறது.

ஊக்கமும் அன்பும் அடக்கமும் உடையவனுக்கு ஞானம் வளருகிறது.

அருளை நாடுபவனை ஆதரிக்க அருள் யாண்டும் ஆயத்தமாய் இருக்கிறது.

பொய்க்கும் புன்மைக்கும் என் உள்ளத்தில் இடம் தராது இருப்பேனுக.

பிரபஞ்சம் முழுதும் பரமனுடைய மகிமையை விளக்கிக் கொண்டிருக்கிறது.

நல்வழியில் முன்னேற முயலுபவனுக்கு அந்த நல்வழியே என்றென்றும் உதவுகிறது.

இறைவா, நீ உயிர்க்கு உயிர். என் உடலை உன்னுடைய ஆலயமாக வைத்திருப்பேனுக.

பொருளை நல்வழியில் பயன்படுத்துதற்கு ஏற்ப ஒருவனிடம் பொருள் மேலும் வளர்கிறது.

நலிந்தவன், நோயாளி முதலியவர்க்கு நயந்து பணிவிடைசெய்வது நல்ல தேவாராதனையாகிறது.

பெருநெறி பிடித்து ஒழுகுகிறவர்களுக்குக் கடவுளை அடைதற்குரிய மேலாம் அறிவு தானுக உதயமாகிறது.

உண்மையைக் கடைப்பிடிப்பவனுக்குச் சோதனை எவ்வளவு வந்தாலும் அதற்கு அவன் ஆயத்தமாய் இருக்கிறுன்.

தற்பெருமை படைத்தவன் இழிவுக்கு இலக்கு ஆகிறுன்; தன்னடக்கம் படைத்தவன் தகைமையில் மேலோங்குகிறுன்.

பிறர் உனக்குச் செய்த தீங்கை உடனே மறந்துவிடு. அவர்கள் செய்த நலனை யாண்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள்.

அருள் ஒளியை உடைத்திருப்பவர்கள் அடியார்கள் ஆகின்றனர். அன்னவர்களை நாடுபவன் இறைவனையே நாடுபவன் ஆகிறுன்.

### பரமஹம்சர் புகட்டிய

# பெருநெறி விளக்கம்

ஈசானனேடு பரமஹம்சர் மேலும் தொடர்ந்து சம்பாஷித்துக்கொண்டிருக்கிருர்: ''மூங்கில் பரி வைத்து மக்கள் மீன் பிடிக்கிருர்கள். மூங்கில் இயல்பாக நேராக இருக்கிறது. ஆனல் அதைக்கொண்டு பரி அமைக்கின்றபொழுது அதன் நுனி வளேந்திருக்கிறது. அதற்காக நிமிர்ந்து நேராக இருக்கும் மூங்கில் தப்பைகள் வளேத்து அமைக்கப்படுகின்றன. தப்பைகளே வளேத்தால்தான் பரியின் ஒருபக்கம் மூடப்பெறும். மூடப்பட்டிருக்கிற பக்கத்துக்கு மீன் சென்ருல் திரும்பி வர அதற்கு இயலாதுபோய் விடும். மீன் பிடிப்பதற்கு மூங்கில் பரி இங்ஙனம் பயன்படுகிறது. அதே பாங்கில் மக்களிடத்து மீனுக அமைந்திருப்பவைகள் ஆசைகள். ஆசைக்கு உட்பட்டு மனதானது உலக பந்த பாசங்களில் வளேந்திருக்கிறது. ஆசைகளே அகற்றினல் வளேந்திருக்கிற மனது நிமிர்ந்து நிற்கிறது. அங்ஙனம் நிமிர்ந்திருக்கிற மனதுக்குக் கடவுள்பால் திரும்புவது எளிதாகிறது.

''ஆசை எத்தகையது என்பது உனக்குத் தெரியுமா? தராசில் அமைக்கப் பெற்றிருக்கிற முள் நடுநிலே வகிக்கிறது. காமம், காசு ஆசை ஆகிய எடைகளேப் போட்டால் தராசின் முள்ளானது நேரே நிற்பதற்கு மாருக எடையின் பக்கம் சாய்கிறது. அதே விதத்தில் காமமும் காசு ஆசையும் மனிதனுடைய மனதை உலக விஷயங்களில் சாயும்படி செய்கிறது. நிமிர்ந்து நேரே இருக்கிற மனது யோகசாதனத்துக்குத் தகுதியுடையதாகிறது. விஷயாதிகளில் சாய்ந்திருக்கிற மனது யோக சாதனத்துக்கு உதவாது. ஆத்மசாதனத்துக்குரிய மற்ெருரு சான்றினிடத்துக் கருத்தைச் செலுத்துவாயாக. விளக்கு ஒன்றின் ஒளிப்பிழம்பு அசைவற்று நேரே நிமிர்ந்திருக்கிறது. சிறிதளவாவது காற்றடிக்குமானல் ஒளிப்பிழம்பு இப்பக்கமும் அப்பக்கமும் ஆடுகிறது. யோக சாதனத்திலே ஈடுபட்டிருக்கும் மனது அசையாத ஒளிப்பிழம்பு போன்றது. உலக ஆசைகளில் மூழ்கியிருக்கிற மனது அசைகின்ற ஒளிப்பிழம்பு போன்றது.

''மனிதனுடைய மனது சிதறடைந்து கிடக்கிறது. அந்த மனதினுடைய ஒருபகுதி பணம் சம்பாதிக்கிற தொழிற்சாலேக்குச் செல்லுகிறது. மற்ெருரு பகுதி உத்தியோகம் பண்ணுகிற காரியாலயத்துக்குச் செல்கிறது. இன்னுமொரு பகுதி இன்பமூட்டுகிற நாடகம் நிகழ்கிற கொட்டகையின்கண் செல்லுகிறது. இங்ஙனம் பலப்பல குறிகளே நோக்கி மனது சிதறடைந்து கிடக்கிறது. இப்படிச் சிதறடைந்து கிடக்கிற மனதை வாரியெடுத்து ஒருமுகப்படுத்த வேண்டும். ஒரே லக்ஷியத்தில் செல்லவல்லதாக அதைத் திருத்தியமைக்க வேண்டும். பதினறு அணு பெறுமான துணியை நீ வாங்க விரும்பினல் அத்துணியின் பொருட்டு அதை விற்கிற வியாபாரிக்கு நீ பதினறணு செலுத்தியாகவேண்டும். எப்பொருளேப் பெறுவதாக இருந்தாலும் அதற்கேற்ற விலேயைக் கொடுத்தாக வேண்டும். யோகத்தைப் பெற நீ விரும்பினல் அதற்கேற்ற தகுதியை நீ பெற்ருக வேண்டும். மனதை முற்றிலும் யோகசாதனத்தினிடத்திலேயே செலுத்தியாகவேண்டும். மனதானது சிறிதளவாவது ஏனேய பொருள்களே நாடிச் செல்லுமாகில் யோகம் கைகூடாது. மனச்சஞ்சலமே யோகசாதனத்துக்கு இடைஞ்சலாகிறது. தந்தியின்கண் சமாசாரத்தைச் சொல்லுதற்கு நெடுந்தூரத்துக்குக் கம்பியானது பிளவுபடாது இருக்க வேண்டும். எவ்விடத்திலாவது கம்பியில் சிறிது பிளவு ஏற்பட்டால் அதன் வாயிலாக சமாசாரத்தை அனுப்பமுடியாது. அதே விதத்தில் உலக ஆசையை முன்னிட்டு உள்ளத்தில் ஏதேனும் பிளவு ஏற்பட்டால் யோகசாதனத்துக்கு அந்த உள்ளம் பயன்படாது போய்விடும்.

''நீ உலக வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிருய் என்பது உண்மை. அதனலென்ன? அதில் தோஷமொன்றுமில்லே. நீ புரிகின்ற பலப்பல கிருத்தியங்களின் பயனே இறைவனிடத்து நீ ஒப்படைக்க வேண்டும். உனக்காக வென்று கிருத்தியங்களே நீ நிறைவேற்றுவாயாகில் பந்தத்துக்கு நீ ஆளாகின்ருய். அங்ஙனம்

பந்தப்பட்டிருக்கும்பொழுது யோகம் உனக்குக் கைகூடாது. மற்றெரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள். ஆசை பொல்லாதது. ஆனல் பக்தியைப் பெற ஆசை கொள்வது மிக நன்று. அது உலக ஆசையோடு சம்பந்தப் பட்டதன்று. உன்னிடத்து பக்தி பெருக வேண்டுமென்று நீ பேராசை கொண்டவனுக இருக்கலாம். அதை நாடிப் பரமனிடம் நீ பிரார்த்தனை பண்ணலாம். பக்தியைப் பெறும் விஷயத்தில் நீ வன் தொண்டனுக மாறியமைய லாம். வன் தொண்டனெருவன் தெய்வத்தோடு தீவிரமாகப் போராடுகின்றன். நீயும் உன் போக்கில் நீ வழிபடுகிற தெய்வத்தோடு முரட்டுத்தனமாகச் சண்டைபோடு. உனக்கு பக்தி வாய்த்தாக வேண்டுமென்று நீ வழிபடும் தெய்வத்திடத்து சதா நச்சிக்கொண்டிரு. பக்தியை நாடி நச்சுப்பூணுதல் மிக நன்று. அப்படி நச்சுகின்றவர்களுக்குக் கடவுள் இனியன் ஆகின்றன். நச்சினர்க்கினியன் என்னும் சிறப்புப் பெயர் பரமனுக்கு உரியதாம்.

"உலக விவகாரங்களைக் குறித்து மக்கள் நீதி மன்றத்தில் வழக்காடுகின்றனர். அதே விதத்தில் தெய்வத்தோடு பக்தியை நாடி நீ வழக்காடு.' தெய்வத்தோடு வழக்காடுவது போற்றுதற்குரிய போராட்டமாகிறது. 'இறைவா, உன்னை நான் எளிதில் விடமாட்டேன். உனக்குச் சதா தொந்தரவு விளைவித்துக் கொண்டேயிருப்பேன். இத்தகைய வழக்கிலே நான் வெற்றியடையும் வரையில் போராடிக்கொண்டே இருப்பேன். என்னுடைய போராட்டத்துக்கு இசைந்து இறுதியில் நீ என்னை வாரியெடுத்துத் தழுவிக் கொள்வாய். நீ அப்படிச் செய்யும் வரையில் உன்னேடு நான் போராடிக் கொண்டே இருப்பேன்'— இந்த விதத்தில் வழிபடு தெய்வத்தை உபத்திரவப் படுத்துவது பாராட்டத்தக்க போராட்டமாகும். அது உலக ஆசையோடு சம்பந்தப்பட்டது ஆகாது.

"திரைலோக்கியர் ஒரு தடவை பகர்ந்ததாவது: 'ஒரு குடும்பத்தின் அங்கத்தினனுக நான் பிறந்தவன். ஆதலால் அந்தக் குடும்பத்துக்குரிய சொத்தில் எனக்கு உரிய பங்கு உண்டு.'

"கடவுள் தாமே உன்னுடைய தாயும் ஆகின்ருர். அத்தகைய தாய் உனக்கு மாற்ருந்தாய் ஆவாளா? உனக்கும் தாய்க்குமிடையில் உள்ள இணக்கம் செயற்கையாக அமைந்ததன்று. தெய்வம் உன்னுடைய சொந்தத் தாயாக இருப்பதால் நீ வேண்டியதை உரிமையோடு தாயிடம் கேட்கலாம். சொந்தத் தாயோடு போராடி உனக்கு வேண்டியதை நீ பெருவிடில் வேறு யாரோடு போராடி நீ அதைப் பெறப் போகின்ருய். உனக்குத் தாயாகச் சொந்தமாயுள்ள தெய்வத்திடத்து இங்ஙனம் பிரார்த்தனை பண்ணு: 'தாயே நான் உன்னுடைய குழந்தை. எட்டு மாசத்திலேயே பிறந்த வலிவற்ற குழந்தைபோல் நான் இல்லை. உன்னேடு நல்லிணக்கம் கொள்ளாத மாந்தரைப் பயமுறுத்தும் பாங்கில் சிவந்த கண்களை நீ உடைத்திருக்கின்ருய். ஆனல் உன் குழந்தையாகிய நான் உன்னுடைய சிவந்த கண்களைக் கண்டு பயப்படமாட்டேன். தாயே, உனக்கும் எனக்குமுள்ள இணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கான சாசனம் ஒன்றை என் உள்ளத்திலே நான் வைத்திருக்கிறேன். என் தந்தை சிவனர் அந்தச் சாசனத்தை ஆமோதிக்கிருர். தாயே, உன்னேடு நான் வழக்குத் தொடுப்பேன். எனக்குரியதை நீ கொடுத்தே ஆகவேண்டும். எனக்குரியதைப் பெறும் விஷயத்தில் போராடி நான் வெற்றியடைவேன்.'

"இந்தப் பாங்கில் அன்னை பராசக்தியோடு போராடுதற்கு உனக்கு உரிமை உண்டு. அன்னை பராசக்தி உனக்குச் சொந்தமான தாய் ஆகின்ருள். அவளுடைய அருள் என்னும் பேறு அதனைப் பெற உனக்கு உரிமை உண்டு. அதை வற்புறுத்திக் கேள். அன்னை பராசக்தியாகிய பெரிய பொருளின் ஒரு அம்சமாக நீ இருக்கின்ருய். ஆதலால் அம்சமாக இருக்கிற நீ நிறை பொருளாய் இருக்கிற அவளிடத்துக் கவர்ந்து இழுக்கப்படுவதை நீ உணர்கின்ருய். அன்னை பராசக்தியின் ஓர் அம்சமாக என்னை நான் உணர்கிறேன். ஆதலால் அவளிடத்துக் கவர்ந்து இழுக்கப் படுகிற பாங்குடையவனுக நான் இருக்கிறேன். நல்ல சைவன் ஒருவனிடத்துச் சிவனுருடைய அம்சங்கள் சில அமைந்திருக்கின்றன. சிவனுருடைய இயல்பே அன்னவனிடத்து நன்கு இலங்குகின்றது. உண்மையான

வைஷ்ணவன் ஒருவனிடம் நாராயணனுடைய பேர் அம்சங்கள் சில அமையப் பெற்றிருப்பதைக் கண்கூடாகக் காணலாம்.

"உலகக் கடமைகளில் நீ இப்பொழுது ஈடுபடவேண்டிய அவசியமில்லை. கடவுள் சிந்தனையிலேயே ஈடுபட்டிருப்பவனாக சில நாட்களைக் கழித்துவா. இவ்வுலக வாழ்க்கையில் நித்தியமானது ஒன்றுமில்லை என்பதை நீ இப்பொழுது நன்கு அறிந்திருக்கிறாய்.''

பரமஹம்சதேவர் பாடினார். அப்பாடலில் அடங்கியுள்ள கருத்துக்கள் வருமாறு: "ஓ மனமே, இதை நீ ஞாபகத்தில் வைத்துக் கொள். இவ்வுலகிலே யாருமே உனக்குச் சொந்தமானவர் அல்லர். இவ்வுலகிலே நீ அலைந்து திரிவதில் பொருளொன்றுமில்லை. மாயையின் நுண்ணிய கண்ணியில் நீ அகப்பட்டுக் கொண்டிருக்கிறாய். அதை முன்னிட்டு அம்பிகையின் நாமத்தை ஓதுதலை மறந்து விடாதே.

''இரண்டொரு நாளைக்கு மக்களால் நீ பெரியவன் என்றும், பாராட்டத்தக்கவன் என்றும் போற்றப்படுகின்றாய். அங்ஙனம் கண்ணியப் படுத்தப்பட்டுள்ள நீ அதிவிரைவில் புறக்கணிக்கப்படுவாய். உனக்குத் தலைவனாகத் திகழ்கின்ற மரணம் உன்னை வந்து பிடித்துக் கொள்கிறபொழுது உலகத்தவர் யாரும் உனக்கு உதவிபண்ணமாட்டார்கள். அதிவிரைவில் பிறகு உன்னை மறந்துவிடுவார்கள்.

''நீ உயிர் வாழ்ந்திருக்கின்றபொழுது உன்னுடைய அன்புக்குரிய மனையாள் என்று அவள் பொருட்டு உயிரைக் கொடுக்கிற பாங்கில் நீ தத்தளிக்கின்றாய். நீ இவ்வுலகை விட்டுப் போகின்ற பொழுது உன் மனையாள் உன்னோடு வரமாட்டாள். கண்ணீரும் கம்பலையுமாக அவள் உனக்கு விடைகொடுத்து அனுப்புவாள். எஞ்சியிருக்கின்ற சடலத்தைத் தீட்டுடையதென்று அதை ஒதுக்கித் தள்ளுவாள்.''

மேலும் பரமஹம்சதேவர் மொழிவாராயினர்: ''தலைவனாயிருப்பது, வியவகாரங்களில் மத்தியஸ்தனாய் இருப்பது ஆகிய விஷயங்களில் நீ கண்ணும் கருத்துமாய் இருக்கிறாய். இச்செயல்களின் பாங்குதான் என்ன என்பதை நீ எண்ணிப் பார்க்கின்றாயா? மக்களுக்கிடையிலுள்ள சண்டை சச்சரவுகளையும் வியவகாரங்களையும் மத்தியஸ்தனாய் இருந்துகொண்டு நீ ஒழுங்குபடுத்துகிறாய் என்று நான் கேள்விப்படுகிறேன். நெடுநாளாக இத்தகைய செயல்களில் நீ ஈடுபட்டிருந்திருக்கின்றாய். இத்தகைய செயல்களில் பிரயோஜனம் ஏதாவது இருக்கிறதென்று எண்ணுகிறவர்கள் இச்செயல்களைச் செய்து கொண்டிருக்கட்டும். நீ இச்செயல்களினின்று உன்னை விடுவித்துக் கொள். மேலும் மேலும் இறைவனுடைய தாமரைத் திருவடிகளிலே உன்னுடைய கருத்தைச் செலுத்திவா. அதுவே உனக்குப் பொருந்தும். பழமொழி ஒன்று உண்டு. அதாவது: 'ராவணன் முன்பொருகால் தென்னிலங்கையில் மாண்டுபோனான். பின்பொருகால் நெடுந்தூரத்துக்குஅப்பால் வட இந்தியாவில் வாழ்ந்து வந்த பெகுலன் என்பவன் தலைதலையாகப் போட்டுக்கொண்டு கண்ணீரும் கம்பலையுமாக அவனைக் குறித்து அழுதான்!' அத்தகைய அழுகையில் பொருளொன்றுமில்லை. அதே விதத்தில் மக்கள் உலக வியவகாரங்களில் உழல்வதில் பொருளொன்றுமில்லை.''

''நான் ஆஸ்பத்திரிகளும், மருத்துவசாலைகளும் அமைப்பேன் என்று சம்பு ஒருநாள் இயம்பினான். ஆகையால் நான் அவனுக்கு இயம்பியதாவது: கடவுளின் தரிசனம் நீ அடையப்பெறும்பொழுது ஆஸ்பத்திரிகளையும் மருத்துவசாலைகளையும் கட்டுவதற்கு நீ தெய்வத்திடத்தில் வேண்டிக்கொள்வாயா?

''கேசவசந்திரசேனர் கேட்டதாவது, 'நான் ஏன் கடவுள் தரிசனம் அடையப்பெறாது இருக்கிறேன்?' அதற்கு நான் இயம்பிய மறுமொழியாவது: 'உனக்குப் பேரிலும் புகழிலும், பாண்டித்தியத்திலும் நாட்டம் இருப்பதால் கடவுளைக் காண இயலாதவராயிருக்கிறீர்.' குழந்தை பொம்மைகளை வைத்து விளையாடிக் கொண்டிருக்கையில் தாய் அதனைக் கவனிப்பதில்லை. சில நிமிஷங்களுக்குப் பிறகு பொம்மைகளைத் தூர எறிந்துவிட்டுக் குழந்தை அழுகிறது. அவ்வேளையில் தாய் கஞ்சி வடித்துக் கொண்டிருக்கும் பாத்திரத்தை அப்படியே போட்டுவிட்டு குழந்தையிடம் ஓடி வருவது போன்று கடவுள் நாட்டம்கொள்ளுகிறவர்களிடம் கடவுள் வருகிறார்.

# பராபரக் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

317. விண்கருணை பூத்ததென்ன
மேவிஉயிர்க் குயிராய்த்
தண்கருணை தோன்ற அருள்
தாய்நீ பராபரமே.

மேவுதல்—அடைதல்; தண்கருணை—இனிய அருள்.

விண்கருணை பூத்தல் என்பது சித் ஆகாசத்தில் கருணை என்னும் புஷ்பம் மலர்தல் எனப் பொருள்படுகிறது. கருணை ததும்பியுள்ள புஷ்பத்தை சித் ஆகாசமானது யாண்டும் தூவிக்கொண்டேயிருக்கிறது. அதற்கு ஒய்வு ஒழிச்சல் கிடையாது. இத்தகைய கருணையைப் பரமஹம்சதேவர் வேறொரு பாங்கில் பகருகிறார். இறைவனுடைய அருள் என்னும் தென்றல் சதா வீசிக் கொண்டேயிருக்கிறது. அதில் எப்பொழுதாவது குறைவு ஏற்படுவது கிடையாது. எப்பொழுது வேண்டுமானாலும் ஆத்ம சாதகன் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அருள் பூமாரியை இறைவன் சதா வாரி வழங்கிக் கொண்டே இருக்கிறான். அது நமக்குப் புலப்படாவிட்டால் அது நம்முடைய குற்றமாகும். அதைப் பயன்படுத்தத் தெரிந்து கொள்ளாதிருந்தாலும் அது நம்முடைய குறைபாடாகும். நம்முடைய ஆணவத்தையும், அகங்காரத்தையும் ஒதுக்கித் தள்ளிவிட்டுப் பரம்பொருளிடத்து நாம் விண்ணப்பிக்கின்ற பொழுது கருணை என்னும் பூமாரிக்கு நாம் சொந்தமாகிறோம். சந்திர வெளிச்சத்துக்கு மூலகாரணமாய் சூரிய பிரகாசம் இருப்பது போன்று நம்முடைய உயிர்க்குயிராய் இறைவனுடைய இனிய கருணை நம்மை யாண்டும் தாங்கிக்கொண்டே இருக்கிறது. சாதனத்தில் நாம் பக்குவமடைகின்ற பொழுது அவ்வுண்மை நமக்கு விளங்குகின்றது. இறைவன் யாண்டும் நமக்குத் தந்தையாயும், தாயாயும், இலங்குகின்றார். மெய்ப்பொருளின் கருணைக்கு நாம் இலக்காகின்ற பொழுது அப்பரம் பொருளைத் தாய் எனக் கருதுவதில் நமக்குத் திருப்தி மிக உண்டாகிறது. உயிருக்குயிராயிருக்கும் தாயே, நான் உய்வடைதல் பொருட்டு உன்னிடத்தில் சதா விளங்கிக்கொண்டிருக்கிற பேரருளை எனக்கு எடுத்து வழங்குவாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

318. தன்மயமாய் நின்றநிலை
தானேதா னாகிநின்றால்
நின்மயமாய் எல்லாம்
நிகழும் பராபரமே.

தன்மயம் என்பது பரவஸ்துவுக்குச் சொந்தமாயுள்ள பேரின்பப் பெருநிலையாகும். அப்பெருநிலையை உணர்ந்து உய்வடைவதற்கு இடைஞ்சலாயிருப்பது நான் என்னும் அகங்காரம். அகங்காரம் பிடித்து அஞ்ஞானத்தில் உழல்கின்ற ஜீவாத்மன் தன் செயலுக்குத் தானே கர்த்தாவாக எண்ணிக்கொள்ளுகிறான். அதனால் அவன் இன்ப துன்பங்களுக்கு ஆளாகிறான். பரமன் தானே பிரபஞ்சமாகவும், அதில் இருக்கும் எண்ணிறந்த ஜீவகோடிகளாகவும் இலங்குகின்றான். இவ்வுண்மையை அறியாதிருக்கும் பரியந்தம் ஜீவாத்மன் எத்தனை எத்தனையோ இன்ப துன்பங்களுக்கு ஆளாகிறான். நெடுங்காலம் அவன் அல்லல் பட்டான பிறகு தன்னுடைய ஜீவவியக்தியைப் பரமனிடம் ஒப்படைக்கின்றான். அச்செயல் தஞ்சமடைதல் எனவும், அடைக்கலம் புகுதல் எனவும், சரணாகதி அடைதல் எனவும் பிரபத்தி அடைதல் எனவும் பெயர் பெறுகிறது. பிரபஞ்சத்தில் நிகழ்வனயாவும் பரமன் செயல் எனவும், பிரபஞ்சமாகவும், உயிர்வகைகளாகவும் இலங்குபவன் பரமனே என்னும் மெய்யுணர்வு உதயமாகும் பொழுது ஜீவாத்மன் இன்ப துன்பங்களுக்கு அப்பாலுள்ள பெருநிலையை அறிய வருகிறான். அவ் உண்மையை அனுபூதியில் அறிகிறவன் ஜீவன் முக்தன் ஆகின்றான் என்பது இக்கண்ணியின் கருத்து.

319. ஏங்கிஇடை யும்நெஞ்சம்
ஏழையைநீ வாவென்றே
பாங்குபெறச் செய்வதுன்மேற்
பாரம் பராபரமே.

ஏங்குதல் — அருள் தாகம் பிடித்திருத்தல்; இடைதல் — சோர்வுற்று இருத்தல்; பாங்கு பெறுதல் — நன்மையடைதல்.

ஜீவப்பிரயத்தனமும், இறைவனுடைய திரு

வருளும் ஒன்றிக்குமிடத்து ஆங்கு யோகநிலை பூர்த்தியாகிறது. ஜீவாத்மன் செய்கின்ற முயற்சிகள் அனைத்திலும் மிக முக்கியமாயிருப்பது பரம்பொருளிடத்துத் தன் குறைகளை எடுத்துரைத்து அவை யாவையும் நிறைநிலையாகச் செய்து அருளவேண்டும் என விண்ணப்பிப்பதாம். சிறு குழந்தை ஒன்று ஏதேனும் ஒன்றைத் தன்போக்கில் பெற முயலுகிறது. அதை அடையப்பெற அக்குழந்தையால் முடியாது போய்விட்டால் அது தன் தாயிடம் சென்று பரிந்து அழுது அதைத் தனக்கெடுத்து வழங்க வேண்டுமென்று கேட்கிறது. ஆத்ம சாதகனொருவன் அதே மனநிலையைத் தன் வழிபடு தெய்வத்திடத்துக் கண்ணீரும் கம்பலையுமாக வரவழைத்துக்கொள்ளவேண்டும். 'வல்வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே' என்கின்றார் மாணிக்கவாசகர். பக்தர்கள் எல்லார்க்கும் அதுவே கோட்பாடாகிறது. ஜீவாத்மன் பக்திபூண்டு பரமாத்மாவிடம் ஓரடி போவானாகில் பரமாத்மாவானவர் அருள்சுரந்து பத்து அடி அந்தப் பக்தனை நோக்கி வருகிறார் என்று பரமஹம்சதேவர் பகருகிறார். அப்படி அவர் பகருவது அவருடைய அனுபூதியின் விளைவு. அருள்தாகம் பிடித்துள்ள அவ் அரிய கூற்று பெரிய ஆறுதலைத்தருகிறது. அதே அருள்தாகம் இக்கண்ணியிலும் பொலிகிறது. 'அருள் தாயே, என்னைக் காப்பாற்றுவது உன்னுடைய பொறுப்பு' என்று ஆத்ம சாதகன் பாரத்தையெல்லாம் பரமனிடத்தில் ஒப்படைக்கின்றான்.

இறைவா, நீ ஆண்டவன். நாங்கள் உன்னுடைய அடிமைகள். உனக்கும் எங்களுக்கும் உள்ள இணக்கத்தை ஓர் உபமானத்தால் இயம்பலாம். கடல் இருக்கிறது. அந்தக் கடலுக்கு நிகரானவன் நீ. கடலில் வடிவெடுக்கின்ற எண்ணிறந்த அலைகளுக்கு நிகரானவர்கள் நாங்கள். அலைகள் என்றைக்குமே கடலுக்குப் புறம்பாக இருக்கமுடியாது. காற்று வீசுவதால்அலைகள் வடிவெடுக்கின்றன. காற்று அடியாதிருக்கும் பொழுது கடலும் அலையற்று இருக்கிறது. அலைகளுக்கு நிகரான ஜீவர்களாகிய எங்களுக்கு ஆணவம் எப்படி வந்தது? ஆணவம் படைத்தவர்களிடத்துக் கர்மமும் சதா இருந்துகொண்டிருக்கிறது. ஆணவத்தினின்று கர்மம் வந்ததா? அல்லது கர்மத்தினின்று ஆணவம் வந்ததா? என்பது எங்களுக்கு விளங்கவில்லை. ஆணவம் என்பதற்குச் செருக்கு என்பது வருவிக்கப்பட்ட விளக்கமாகிறது. அணுத்தன்மை எய்துவது ஆணவம் என்பதன் மூலக் கருத்து. வடிவம் அற்று இருப்பதற்கு வடிவம் கொடுப்பது அணுவின் செயலாகும். அலைக்கு வடிவம் உண்டு. கடலுக்கு வடிவமில்லை. அலை படைத்திருக்கிற வடிவம் பொருளற்றது. ஆகாய விமானத்தினின்று கீழே பார்க்கிறபொழுது கடல் மட்டும் தென்படுகிறது. அலைகள் தென்படுவதில்லை. பெயரளவில் உள்ள அலைகள் கடலுக்குப் பக்கத்திலிருந்து பார்க்கிறபொழுது வடிவுடைத்திருக்கின்றன. வானத்தில் உயரத்திலிருந்து பார்க்கிறபொழுது அலைகள் இருந்தும் அவைகள் தென்படுவதில்லை. அதே விதத்தில் ஜீவாத்மன் ஒருவன் தன்னை ஒரு தனி வியக்தியாக அபிமானிக்கும்பொழுது அது ஆணவமாகிறது. அபிமானத்தை ஒடுக்குமிடத்து ஆணவமுமில்லை. ஜீவவியக்தியுமில்லை. பரபோதத்தில் ஊறி இருக்கிறபொழுது உடலைக்கொண்டும், உள்ளத்தைக் கொண்டும் செய்கிற கர்மங்கள் தம்போக்கில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. கர்மத்துக்குத் தன்னைக் கர்த்தாவென்று அபிமானிக்கின்றபொழுது மட்டும் கர்மம் அந்த ஜீவனுக்குச் சொந்தமாகிறது. ஆக தன்னை ஒரு ஜீவன் என்று ஜீவாத்மா அபிமானிக்கின்றபொழுது அவன் ஜீவனாகின்றான். கர்மத்துக்கும் அவன் கர்த்தாவாகின்றான். அபிமானத்தை ஒடுக்கியவிடத்து ஜீவபோதமில்லை. கர்த்ருத்துவம் அல்லது கர்மம் என்கிற உணர்வும் இல்லை. இதற்கு அயர்ந்த நித்திரையே சான்று ஆகிறது. அயர்ந்த நித்திரையில் ஜீவவியக்தியுமில்லை. சரீரத்தில் நிகழுகிற கர்மங்களுக்குக் கர்த்ருத்துவமுமில்லை. அங்ஙனம் ஜாக்ரதாவஸ்தையில் ஜீவனுக்கு எப்படியோஜீவபோதம்வருகிறது. ஜீவபோதத்தை ஒழித்தால் கர்மமும் ஒழிகிறது. அப்படியிருக்க அனாவசியமாக ஜீவ வியக்தியை எனக்கு நான் உண்டுபண்ணிக்கொள்ளுகிறேன். அதை ஒழிப்பதற்கு இறைவா, நீ உபாயம் கொடுத்தருள்வாயாக என்பது இக் கண்ணியின் கருத்து.

# பரபோதம்

( ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருட்செல்வரான சுவாமி பிரமானந்தரின் போதனை )

சமயத்துறையில் யாவரும் பின்பற்றவேண்டிய பொதுவிதிகளும் உள்ளன; தனிப்பட்டவர்கள் பின்பற்றவேண்டிய விதிகளும் உள்ளன. பொதுவிதிகளை எல்லார்க்கும் உபதேசிக்கலாம். யார் யார் எந்த மார்க்கத்தைப் பின்பற்றுகிறார்களோ அந்த மார்க்கத்துக்கேற்ற தனிவிதிகளை அந்த அந்த மார்க்கத்துக்குரியவர்களுக்குத்தான் புகட்டவேண்டும். தனிப்பட்ட மனிதனுக்குப் புகட்ட வேண்டியதை எல்லாருடைய முன்னிலையிலும் புகட்டக்கூடாது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே அவர் அவர்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளைப் போதிப்பார். நீ பின்பற்றுகின்ற மார்க்கத்தில் ஏதாவது உனக்கு ஐயங்கள்எழுமானால் நீ உன்குருவைத் தனியாக அணுகி உனக்குற்ற ஐயங்களைப் போக்கிக்கொள்ளலாம். எல்லாரும் பின்பற்றக்கூடிய பொது உபதேசங்கள் சிலவற்றைக் காண்போம்.

முதலாவதாகக் கடவுள் நம்பிக்கைவேண்டும். கடவுள் சாக்ஷாத்காரம் செய்வது வாழ்க்கையின் ஒரே லக்ஷியம் என்பதை உறுதிப்படுத்திக்கொள். அதைத் தவிர வாழ்க்கையில் உனக்கு வேறு எந்த எண்ணமும் இருக்கக்கூடாது. கடவுளை அறியும்பொழுதுதான் நித்திய வாழ்வும் பேரானந்தமும் உனக்குரியவையாகின்றன. அநித்திய வாழ்விலிருந்து நித்திய வாழ்வையும், சிற்றின்பத்தை ஒதுக்கி பேரின்பத்தையும் பெறுவதற்காக வாழ்ந்து வருகின்றாய் என்பதை ஞாபகப்படுத்திக்கொள். அழிந்துபோகும் உடல் வாழ்விலும் அற்பமாகிய உலக சுகத்திலும் மோகம் உனக்கு இருக்குமளவு நீ நித்திய வாழ்வையும், பேரானந்தத்தையும் பெறமுடியாது. நீ இவ்வுண்மையை மனதுக்கு அடிக்கடி எடுத்துப்புகட்டி மனதை உலக வாழ்விலிருந்து பிரித்தெடுத்துக் கடவுள் நினைவில் நிலைநிறுத்து. பேரின்பம் உனக்கு உரியதாகவிருக்க சிற்றின்பத்தை ஏன் நீ நாடுகின்றாய்? நித்திய வாழ்வு உனக்குரியதாகவிருக்க அநித்திய வாழ்வில் நீ ஏன்மோகம் கொண்டுள்ளாய்? உலகை நம்பினால் நீ அழிவது திண்ணம். கடவுளை நம்பினால் நீ அழியாப் பெருவாழ்வை அடைவது திண்ணம்.

இரண்டாவதாகப் பிரமச்சரியத்தை யாவரும் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரவேண்டும். பூரண தூய்மையில்லாது ஆத்மீகக்கருத்துக்களில் மனதை உறுதியாக நிலைநிறுத்தமுடியாது. உடலையும், உள்ளத்தையும், ஆரோக்கியமாகவும், திண்மையாகவும் வளர்ப்பதற்குப் பிரமச்சரியம் இன்றியமையாதது. பிரமச்சரியத்தை முறையாக அனுஷ்டிக்கும்பொழுது உடலில் மேதை நாடி என்பது உண்டாகிறது. அதன் விளைவாக ஞாபகசக்தியும், ஆத்மீகக் கருத்துக்களை அறிந்துகொள்ளும் திறமையும் கடவுள் விசுவாசமும் அதிகரிக்கின்றன. ஆத்மீக அனுபவங்கள் இந்திரிய உணர்ச்சிக்கு எட்டாதவை. மனம் தூயதாகும்பொழுது இந்திரிய உணர்வை அது கடந்து செல்லுகிறது. அப்பொழுது அது ஆத்மீக உணர்வைப் பெறுகிறது. இந்திரிய உணர்வில் மயக்கமுறாது ஆத்மீக உணர்வில் நிலைத்து நிற்கும் மனமே ஆத்மீக உண்மைகளை அறிகிறது. ஆகையால்தான் ஆத்மீக உண்மைகளைத் தரிசித்தவர்கள் பிரமச்சரியத்தை மிகவும் வலியுறுத்திச் சொல்லுகிறார்கள். உலக அறிவைப் பெறுவதற்கோ, உலக அறிவைப் புகட்டுவதற்கோ பிரமச்சரியம் தேவையில்லை. ஆனால் பிரமச்சரியத்தைக் கடைப்பிடிக்காது ஆத்ம ஞானத்தைப் பெறமுடியாது.

மூன்றாவதாக உணவு விஷயத்தில் நீ சில விதிகளை அனுசரிக்கவேண்டும். உபவாசமிருந்து பழகுதல் நல்லது. சத்துள்ள உணவையும் எளிதில் ஜீரணமாகக்கூடிய உணவையும் எடுத்துக்கொள்ளவேண்டும். தமோகுணத்தை வளர்க்கும் உணவு வகைகளை எடுத்துக்கொள்ளக்கூடாது. மூளை குளிர்ச்சியாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் தியானம் கைகூடும். உடம்பை ஆரோக்கிய நிலையில் வைத்திருக்க இவ் உணவு விதிமுறைகளை நீ அனுசரிப்பது நல்லது. சித்திரம் வரைவதற்குச் சுவர் அவசியமாயிருப்பதுபோன்று சாதனைபுரிவதற்குச் சரீரம் அவசியமாக இருக்கின்றது.

சாதனைபுரிவதற்கு ஆரோக்கியமாக உடலை வைத்திருக்கக் கற்றுக்கொள்.

இரவில் உணவின் அளவைக் குறைத்துக் கொள். அப்பொழுதுதான் நீ இரவு நேரத்தைத் தியானத்துக்குப் பயன்படுத்தலாம். இரவு நேரத்தில் இயற்கை அமைதியாக இருக்கும். உன் மனதைக்கலைக்கும்புறச்சூழ்நிலையும் இரவு நேரத்தில் உனக்கு இருக்காது. பகல்நேரத்தில் உன் மனதைக் கலைக்கக்கூடிய சூழ்நிலைகள் புறவுலகில் அமையலாம். ஆகையால் தியானப் பயிற்சி பெறுவதற்கு இரவு நேரமே நல்ல நேரமாகிறது. நள்ளிரவில் நீ தியானம் செய்வாயானல் தியானம் நன்கு கைகூடும். எளிதில் நீ மனதைக் கடவுளிடம் திருப்புவதற்கு நள்ளிரவு பொருத்தமான நேரமாகும்.

நீ செய்யும் ஆத்மசாதனைகளை விளம்பரப் படுத்துகிற பாங்கில் மற்றவர்கள் முன்னிலையில் செய்ய வேண்டாம். தனித்திருந்து தியானம் செய்து பழகு. சந்தியா வேளைகள் பிரார்த்தனைக்கும், தியானத்துக்கும் பொருத்தமான வேளைகளாகும். அதிகாலை, நண்பகல், சூரிய அஸ்தமனவேளை, நடுஇரவு ஆகியவை சந்தியா வேளைகளாகின்றன.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் இரவு நேரத்தை உறக்கத்தில் கழிக்கமாட்டார். இரவு நேரத்தில் இயற்கை முழுவதும் அமைதியாக இருப்பதால் அந்நேரத்தை அவர் தியானத்துக்குப் பயன்படுத்துவார். அவர் தம்முடைய சிஷ்யர்களையும் இரவு நேரத்தில் அதிகம் தூங்குவதற்கு அனுமதிக்கமாட்டார். யாராவது அதிக நேரம் தூங்கிக்கொண்டிருந்தால் அவர்களை எழுப்பி தியானத்தின் அவசியத்தைப்பற்றி அவர்களுக்குப் புகட்டி பஞ்சவடிக்கோ, பராசக்தியின் சந்நிதிக்கோ, சிவசந்நிதிக்கோ சென்று தியானம் செய்யும்படி வற்புறுத்துவார். அவர்களும் இரவில் நீண்ட நேரம் ராமகிருஷ்ணரின் அறிவுரைப்படி சாதனைகள் செய்து பகல் நேரத்தில் ஓய்வு எடுத்துக் கொள்வார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் வெவ்வேறு சமய சாதனைகளைச் செய்யும் பொழுதெல்லாம் இங்ஙனம் இரவு நேரத்தைச் சாதனைக்குப் பயன்படுத்தி வந்தார். "பரநாட்டம்கொண்டிருக்கும் யோகிகள், சிற்றின்பத்தை நாடும் போகிகள், நோய்வாய்ப்பட்டிருக்கும் ரோகிகள் ஆகிய மூன்று குழுவினரும் இரவில் தூங்கமாட்டார்கள். நீங்கள் யாவரும் யோகிகள். ஆகவே நீங்கள் யாவரும் இரவில் தூங்காது ஆழ்ந்து சாதனை செய்யவேண்டும்" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம்முடைய சிஷ்யர்களிடம் பகர்வதுண்டு.

காலம் மிக அருமையானது. சென்ற காலம் திரும்பிவராது. அறிவு வராத குழந்தைப் பருவத்தை விளையாட்டில் கழித்துவிடுகின்றோம். உடலும் உள்ளமும் முதுமைப் பருவத்தில் தளர்ச்சி அடைந்து விடுகின்றன. ஆகவே முதுமைப் பருவத்தில் தீவிரமாகச் செயல்பட முடியாது. நம்மைத் திருத்தி அமைப்பதற்கு யௌவனப் பருவமே சிறந்தது. அப்பொழுது உடலும் உள்ளமும் உறுதியாக இருக்கின்றன. ஆனல் அப்பருவத்தில் உன் மனது கட்டில் அடங்காததாக உலக சுகத்தை அனுபவிக்க வேண்டும் என்று விரும்பும். காம மயக்கம் மனதைக் கவ்விக்கொள்ளாது நீ பார்த்துக் கொள்ளவேண்டும். யௌவனத்தில் உன் உடல் சக்தியையும், மனேசக்தியையும் காம இச்சையைப் பூர்த்திசெய்வதில் கழிப்பாயானல் உன் வாழ்க்கையை நீ வீணாக்கினவன் ஆகின்ருய். கடவுள் வழிபாடு செய்வதற்கு யௌவனமே சிறந்த பருவம். இறை இன்பத்தை அனுபவிப்பதற்கு நீ யௌவனமாக இருக்கும்பொழுதே தீவிரமாகப் பாடுபடு. சிறிதளவாவது இறை இன்பத்தை நீ அனுபவித்துப் பழகிவிட்டால் அவ்வின்பத்தை உன்னல் விட்டுவிடமுடியாது. அவ்வின்பத்தை விட்டு நீ எங்கே போகமுடியும்? 'கற்கண்டுகட்டியைச் சுவைத்தவனுக்குக் கருப்பட்டிகட்டி சுவைக்குமா?' என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கேட்கின்ருர். இறை இன்பத்தை உன் உள்ளம் அனுபவிக்கத் தெரிந்துகொண்டால் அது ஒரு நாளும் சிற்றின்பத்தை நாடிப்போகாது. தெய்வப்பற்றை வளர்த்துவா. தெய்வப்பற்று ஓங்கும்பொழுது உலகப்பற்று உன் உள்ளத்தை விட்டு நீங்கிவிடும். மனது ஏககாலத்தில் இரண்டினிடத்தில் பற்றுதல் வைக்கமுடியாது. தெய்வப்பற்றை வளர்க்கவும், உலகப் பற்றைக் குறைக்கவும் நீ சாதனை செய்யவேண்டும். தெய்வப்பற்று வளரும்பொழுது உன் உள்ளம் பேரின்பத்தையே நாடிச் செல்லும்.

# என் குருநாதர்

(சுவாமி விவேகானந்தர் நியூயார்க் நகரில் நிகழ்த்திய சொற்பொழிவு)

[173 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நீ உண்மையான சீர்திருத்தக்காரனுக இருக்கவிரும்புவாயானுல் உன்னிடத்தில் மூன்று இயல்புகள் அமைந்திருக்கவேண்டும். முதலாவதாக மக்களைப்பற்றிய உணர்வுவேண்டும். மக்கள் யாவரும் உன் உடன் பிறந்த சகோதரர்கள் என்று உன் உள்ளம் உணர்கிறதா? உலகம் துன்பமயமானது என்றும் அறியாமையும் மூடக்கொள்கைகளும் உலகைப் பற்றிப் பிடித்திருக்கின்றன என்றும் நீ உண்மையிலேயே உணர்கின்ருயா? மக்களைப் பற்றிய உணர்ச்சி உன் உள்ளத்தில் எழுகிறதா? உன் அமைப்பு முழுவதும் இத்தகைய உணர்வு மயம் ஆகிவிட்டதா? உன் குருதி ஓட்டத்தில் இவ்வுணர்வு கலந்துவிட்டதா? நாடி நரம்புகளில் எல்லாம் இவ்வுணர்ச்சி ஏறியிருக்கிறதா? உன் உடலின் ஒவ்வொரு நாடி நரம்பிலும் இவ்வுணர்வு ஓடிக்கொண்டு இருக்கிறதா? உன் உள்ளம் இரக்கம் நிறைந்ததாக இருக்கிறதா? இத்தகைய மனநிலை உனக்கு ஏற்படுமானுல் நீ சீர்திருத்தக்காரனுவதற்கு இது முதற்படியாகும். அடுத்த படியாக இவைகளுக்கு விமோசனம் கண்டுபிடிக்க நீ சிந்திக்கவேண்டும். பழைய கொள்கைகள் குருட்டு நம்பிக்கை உடையவைகளாக இருக்கலாம். ஆனுல் அவைகளுக்குள்ளும் அரிய கருத்துக்கள் புதைந்து கிடக்கின்றன. பொருந்தாத கருத்துக்களை நீக்கிவிட்டு உயர்ந்த கருத்துக்களைக் காப்பாற்றுவதற்கு நீ வழிகண்டுபிடித்திருக்கின்ருயா? இதைச் செய்து முடிப்பது இரண்டாவது படியாகும். மூன்ருவது இயல்பு பாக்கியிருக்கிறது. அது உன் மன அமைப்பைப் பற்றியதாகும். பொருளுக்காகவோ, பேர் புகழுக்காகவோ நீ வசப்படாது இருக்கிருயா? நீ எடுத்துக்கொண்ட காரியத்தில் உறுதியுடன் இருக்கிருயா? உன்னை உலகமே நசுக்க உனக்கு எதிராக இருப்பினும் நீ எடுத்துக்கொண்ட காரியத்தைச்சாதிப்பதில் உறுதியாக இருக்கின்ருயா? உன் உயிரே போவதாக இருந்தாலும் உன் கடமையைச் செய்வதில் உனக்கு உறுதி இருக்கிறதா? உயிர் உள்ளளவும் இருதயத் துடிப்பு உள்ளளவும் நீ உழைப்பதற்கு ஆயத்தமாக இருக்கின்ருயா? அப்பொழுதுதான் நீ உண்மையான சீர்திருத்தக்காரனுகின்ருய். மனித சமுதாயத்திற்கு நீ தலைவனுகின்ருய். மக்களுக்கு நீ நன்மைசெய்தவன் ஆகின்ருய். ஆனுல் மனிதனுக்குப் பொறுமை இல்லை. மனிதன் உடனுக்குடன் பயன் எதிர்பார்க்கின்ருன். அமைதியோடு காரியம் பார்ப்பதற்கு மனிதனுக்குப் பொறுமை இல்லை. மனிதன் ஆட்சிபுரிய விரும்புகின்ருன். உடனுக்குடன் பலன் எதிர்பார்க்கின்ருன். தனக்கு என்ன பயன் கிடைக்கும் என்று நினைக்கின்ருனே ஒழிய பிறருக்கு என்ன நன்மை செய்யமுடியும் என்பதைப்பற்றி கவலைப்படுவதில்லை. கடமையைக்கடமைக்காகவே செய்வதை மனிதன் விரும்புவதில்லை. ''கடமையைச் செய்வதற்கு உனக்கு உரிமை உண்டு. பலனுக்கு உனக்கு உரிமையில்லை'' என்பது கிருஷ்ணனுடைய போதனை. பயனை ஏன் எதிர்பார்க்கவேண்டும்? கடமையைச் செய்வதோடு நம் பணி முடிந்தது. பலன் வருகிறபடி வரட்டும். ஆனுல் மனிதனுக்குப் பொறுமை இல்லை. உலகம் முழுவதும் உள்ள பெரும்பாலான சீர்திருத்தக்காரர்கள் பெயரளவில் தான் சீர்திருத்தக்காரர்களாக இருக்கிருர்கள்.

நம் நாட்டு பண்டைய ரிஷிகள் அரிய விஷயங்களைப் போதித்துள்ளார்கள். உலகாயதம் புகுந்து அவைகளை அழித்து விடும்போல் இருந்த நிலையில் மக்களுக்குச் சீர்திருத்தம் வேண்டும் என்ற எண்ணம் உதித்தது. ஆனுல் இது போன்ற பல்லாயிரக்கணக்கான தாக்குதல்களை நம் நாடு எதிர்த்து நின்றிருக்கின்றது. அவைகளோடு இதை ஒப்பிடும்பொழுது இது சாதாரணமானதாகும். தாக்குதலுக்குமேல் தாக்குதல்கள் ஏற்பட்டு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நம் நாட்டை அவை சின்னபின்னப் படுத்தி வந்திருக்கின்றன. பட்டாகத்திகள் நம் நாட்டைத்தாக்கின. அல்லாவுக்கு வெற்றி என்ற ஒலி வானைப் பிளந்துகொண்டு எழுந்தது. ஆனுல் அவையாவும் நம் நாட்டின் லட்சியத்தை

ஒரு சிறிதும் மாறுபடுத்த முடியவில்லை. அவைகளின் வேகங்கள் ஒடுங்கின. நம் நாட்டு லட்சியம் அழிக்கப்படவில்லை.

இந்திய சமுதாயத்தை யாரும் அழிக்க முடியாது. அது யாண்டும் அழியாத சனாதன தர்மம் ஆகும். ஆத்ம தத்துவம் அதன் உயிர் நாடியாக இருக்குமளவு மக்கள் தெய்வீக வாழ்க்கையைக் கைவிடாத வரையிலும் இந்தியாவை யாரும் அழிக்கமுடியாது. இந்நாட்டுமக்கள் ஏழைகளாக இருக்கலாம். வறுமையும், அசுத்தமும், ஆபாசமும் அவர்களை எப்பொழுதும் சூழ்ந்திருக்கலாம். ஆனால் அவர்கள் மட்டும் கடவுள் கொள்கையைக் கைவிடாது இருக்கட்டும். அவர்கள் தாங்கள் ரிஷிகளின் சந்ததிகள் என்பதை மறவாது இருக்கட்டும். மேநாட்டில் தெருவில் செல்லும் ஒருவன் கொள்ளைக்கார தலைவனது சந்ததியில் தான் வந்தவன் என்பதைச் சொல்லிக் கொள்வதில் ஆசைப்படுகின்றான். அங்ஙனம் இந்தியாவில் சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் சக்கரவர்த்தி மரவுரிதரித்து, காய்கனிகளை உண்டு கடவுள் எண்ணத்தில் மூழ்கிக் காட்டில் திரியும் சாது ஒருவனுடைய சந்ததியில் இருந்து வந்தவன் என்று சொல்லிக்கொள்கிறான். இத்தகைய சந்ததியைத்தான் இந்தியர்களாகிய நாங்கள் விரும்புகிறோம். புனித தெய்வீகத் தன்மையை இந்தியா போற்றுகின்றவரையிலும் அது அழியாது.

பத்தொன்பதாம் நூற்றாண்டு என்னும் தலைப்பில் ஒரு பத்திரிகை வெளிவருகிறது. சமீபத்தில் வந்த அதன் இதழ் ஒன்றில் உண்மையான மகாத்மா என்னும் கட்டுரையை நீங்கள் வாசித்திருப்பீர்கள். பேராசிரியர் மாக்ஸ்முல்லர் அக்கட்டுரையை எழுதியுள்ளார். ஸ்ரீ ராமகிருஷ்ணர்தான் அவ்வுண்மையான மகாத்மா ஆவார். அவருடைய வாழ்க்கை படிப்பதற்குச் சுவை உடையதாக இருக்கும். அவர் எதைப்போதித்தாரோ அப்போதனைக்கு அவருடைய வாழ்க்கையே சான்றாக இருந்தது. மேனாட்டுச் சூழ்நிலை இந்திய நாட்டின் சூழ்நிலைக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். மேல் நாட்டுச் சூழ்நிலையில் வசிக்கும் உங்களுக்கு இந்தியர்களுடைய வாழ்க்கை நூதனமாகத் தோன்றும். பரபரப்பும், சுறுசுறுப்பும் உள்ள மேல் நாட்டு வாழ்க்கையின் நடைமுறைகளும் ஒழுங்குப்பாடுகளும் இந்தியாவிற்கு முற்றிலும் மாறுபட்டவையாகத்தான் இருக்கின்றன. எனினும் இம்மகானுடைய வாழ்க்கை உங்களுக்குப் புத்துணர்வை ஊட்டுவதாக இருக்கும். ஏனென்றால் நீங்கள் ஏற்கனவே கேட்டுள்ள பல விஷயங்களுக்குப் புது விளக்கம் தருவதாக அவருடைய வாழ்க்கை அமைந்திருக்கும்.

இந்தியாவில் பலவகையானசீர்திருத்தங்கள் ஆரம்பித்த காலத்தில் ஏழை பிராமணப் பெற்றோர்களுக்கு 1836 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18 ஆம் தேதி ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அவர் பிறந்த ஊர் வங்காள தேசத்தில் உள்ள ஒரு சிறு கிராமம் ஆகும். தாயும் தந்தையும் மிகவும் வைதீகப்பற்றுடையவர்களாக இருந்தார்கள். உண்மையான வைதிகப் பிராமணர்களுடைய வாழ்வு தியாக வாழ்வாக இருக்கும். உலக விஷயங்களில் தங்களை அதிகம் உட்படுத்திக் கொள்ளமாட்டார்கள். பிறரிடம் இருந்து எப்பொருளையும் தானமாக வைதிகப் பிராமணர்கள் பெறமாட்டார்கள். அந்த வாழ்க்கை மிகவும் கடினமான வாழ்க்கையாகும். புரோகிதர்களைப்பற்றியும் பிராமணர்களைப்பற்றியும் நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் அவர்களுடைய சக்தி என்ன என்பதை உங்களில் சிலரே சிந்தித்து அறிந்து கொள்ளமுடியும். மக்களில் பலரை அவர்கள் ஆட்சிபுரிந்து வருகிறார்கள். நாட்டிலேயே அவர்கள் ஏழை வகுப்பினர்கள் ஆவார்கள். அவர்களுடைய பலம் அவர்களுடைய தியாகத்தில்தான் இருக்கிறது. யாருடைய செல்வத்திலும் அவர்கள் ஆசை வைக்கமாட்டார்கள். அவர்கள் வறுமை உடையவர்கள் ஆனாலும் சக்திபடைத்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் ஏழ்மையில் இருப்பினும் பிராமணனுடைய மனைவி அவ்வூருக்கு வந்த எந்த மனிதனையும் பசியோடு செல்ல அனுமதிக்கமாட்டாள். அவனுக்கு ஏதாவது உண்ண கொடுத்துத்தான் அனுப்புவாள். இந்தியத் தாயினுடைய உயர்ந்த தருமமாக அது கருதப்படுகிறது. அவள் தாய் ஆகையால் அனைவருக்கும் கொடுத்துத்தான் கடைசியில் அவள் உண்பாள். எல்லாரையும் உண்ணவைத்துக் கடைசியாக உண்பவள் தாய். ஆகையால்தான்

தாயைப் பராசக்தியாகப் பாராட்டுவது இந்தியாவில் இருந்துவருகிறது. நம்முடைய கதாநாயகருடைய தாயார் அத்தகைய வைதிகக் குடும்பத்தில் வந்த ஒரு இந்தியத் தாய் ஆவாள். குலம் உயர உயர வாழ்க்கையில் அவர்களுக்குக் கட்டுப்பாடு அதிகம் உண்டு. கீழ்க் குலத்தைச் சேர்ந்த மக்கள் அவர்கள் விருப்பம்போன்று எதை வேண்டுமென்ருலும் எப்பொழுது வேண்டுமென்ருலும் பருகலாம், உண்ணலாம். சமுதாயத்தில் அந்தஸ்து உயர்வதற்கேற்ப கட்டுப்பாடுகள் அதிகமாகும். பிராமணர்களுடைய நிலைக்கு உயரும்போது அதுவும் புரோகிதர்களாக ஆகும்போது அவர்களுடைய வாழ்க்கை கட்டுப்பாடு நிறைந்தது ஆகின்றது. மேனுட்டு வாழ்க்கையோடு ஒப்பிடும்பொழுது அவர்களுடைய வாழ்க்கை தியாகம் நிறைந்தது ஆகிறது. உலகத்தில் உள்ள மற்ற நாடுகளைக் காட்டிலும் இந்துக்கள் தனிப்பட்டவர்கள் எனலாம். ஆங்கிலேயர்களைப்போன்று செயலாற்றுவதில் அவர்கள் உறுதியுடையவர்கள். ஆங்கிலேயர்களைவிட அவர்கள் பரந்த நோக்கம் உடையவர்கள். ஒரு கொள்கையை அவர்களிடம் கொடுத்துவிட்டால் கடைசிவரையிலும் அதை அனுசரிப்பார்கள். அதிலிருந்து ஏதாவது பயன்பெறும் வரையில் தலைமுறை தலைமுறைக்கு அதைக் காப்பாற்றி வைப்பார்கள். ஒரு கருத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டுவிட்டார்களானல் அதிலிருந்து அவர்களை மாற்றுவது கஷ்டம். ஒரு புதுக்கருத்தை அவர்களை ஏற்கச் செய்வதும் கஷ்டம்.

வைதிக இந்துக்கள் மற்றவர்களைவிட்டு ஒதுங்கியே இருப்பார்கள். தங்களுக்கான எல்லைக்குள்ளேயே அவர்களுடைய உணர்ச்சியும் எண்ணமும் கட்டுப்பட்டிருக்கும். அவர்களுடைய வாழ்க்கை எத்தகையதாக இருக்க வேண்டும் என்பது எங்களுடைய பழைய நூல்களில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. அந்நூல்களில் கூறப்பட்ட சிறு விஷயத்தைக் கடைப்பிடிப்பதிலும்அவர்கள் உறுதியாக இருப்பார்கள். தங்களுடைய ஜாதியைச் சேராத ஒருவனல் சமைக்கப்பட்ட உணவை உண்ண மாட்டார்கள். பட்டினிகிடப்பதானலும் அவ்வுணவை உண்ணமாட்டார்கள். இவற்றை எல்லாம்விட சிரத்தையும் தீவிரமுயற்சியும் உடையவர்கள். ஆழ்ந்த விசுவாசமும் சமய உணர்ச்சியும் அவர்களுடைய வாழ்க்கையில் பலமுறை வெளியாகின்றன. அப்படி அவர்கள் இருப்பதற்குக் காரணம் தங்களுடைய கொள்கை சரியானது என்பதில் உள்ள உறுதியேயாகும். அவர்கள் கடைப்பிடிப்பது சரியானது அன்று என்று நாம் நினைக்கலாம். ஆனல் அவர்கள் அது சரியானது என்பதில் உறுதியுடையவர்களாக இருக்கிருர்கள். மற்றவர்களுடைய உயிரைக் காப்பாற்றுவதற்கு ஒருவன் பட்டினி கிடந்து தன் உயிரையும் கொடுக்கலாம் என்று எங்கள் நூல்களில் கூறப்பட்டிருக்கின்றது. ஒரு மனிதனுடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக ஒருவன் பட்டினிகிடந்து உயிர்விட்டாலும் அது சரியானது என்று கருதப்படுகிறது. ஒருவன் அப்படித்தான் வாழவேண்டும் என்றும் இந்துக்கள் கருதுகின்றனர். பிராமணன் ஒருவன் இந்த லட்சியத்தை உயிர் போகும் தருணத்திலும் காப்பாற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிருன். இந்திய இலக்கியங்களைப் படித்தவர்களுக்கு உயர்ந்த தானத்தைப் பற்றிக் கூறும் அழகான கதை ஒன்று ஞாபகத்துக்கு வரலாம். மகாபாரதத்தில் அதிதி ஒருவனுக்கு உணவு கொடுத்து ஒரு குடும்பமே உயிர் துறந்த கதை இருக்கிறது. இது மிகைபடக்கூறிய கருத்தன்று. அத்தகைய செயல் இன்றும் நிகழ்ந்து வருகிறது. என்னுடைய குருநாதருடைய தாயாரும் தந்தையாரும் அத்தகைய பண்புடையவர்கள். அவர்கள் மிகவும் ஏழைகள். இருந்தபொழுதிலும் என்னுடைய குருநாதருடைய தாயார் ஒரு ஏழை மகனுக்கு உதவிபுரிவதற்காக ஒரு நாள் முழுவதும் எத்தனையோ தடவை பட்டினி இருந்திருக்கிருர். அத்தகைய பெற்ருேர்களுக்கு என் குருநாதர் பிள்ளையாகப் பிறந்தார். பிறந்தது முதல் அவருடைய வாழ்க்கை விசித்திரமுடையதாக இருந்தது. தாம் எங்கிருந்து வந்தவர் என்பதையும், எதற்காக வந்திருக்கிருர் என்பதையும் பிறந்தது முதல் அவர் தெளிவாக உணர்ந்திருந்தார். அவர் தாம் வந்த காரியத்தைப் பூர்த்தி பண்ணுவதற்காகவே தம் ஆற்றல் முழுவதையும் பயன்படுத்தினர். அவர் வாழ்வைக் கணப்பொழுதும் வீணக்கவில்லை. (தொடரும்)

# தெய்வீக மகிமைகள்

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1972ஆம் ஆண்டு திருவேடகம் அந்தர்யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

[186ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஈசுவர மகிமைகளுள் ஐசுவரியம் ஒன்றாகும். ஐசுவரியம் என்பதற்கு இறைமை என்பது பொருள். இறைவன் என்னும் சொல் கடவுளை யும், குருவையும், அரசனையும் குறிக்கின்றது. பிரபஞ்சம் முழுவதையும் கடவுள் ஆண்டு வருவதால் அவர் ஈசுவரன் என்று அழைக்கப்படுகிறார். ஐசுவரியம் என்பதற்குச் செல்வம் என்றும் பொருள் கொள்கின்றார்கள். ஆளும் தன்மை உள்ள இடத்து செல்வம் தானாக வந்து சேருகிறது. உலக நிலையில் வைத்துப் பார்க்குமிடத்து ஆளும் பண்புள்ளவன் அரசனாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஆளுகின்றவனாக இருக்கின்றான். இந்தியா சுதந்தரம் பெறுவதற்கு முன்பு ஜவஹர்லால் நேருவை முடிசூடா மன்னன் என்று அழைத்தனர். முடிசூட்டிய மன்னர்க்கு உரிய சம்பத்து எல்லாம் அவர் அமையப் பெற்றவராக இருந்தார். கோசன் பிரபு சென்னை கவர்னராக இருந்த போது ஒருமுறை ஊட்டியில் தங்கியிருந்தார். ஊட்டியில் இருந்து சென்னைக்குத் திரும்புவதற்கு முன்பு மைசூரைப் பார்த்துப் போகத் திட்டமிட்டிருந்தார்கள். மைசூருக்குள் நுழைந்த போது பிரமாண்டமான வளைவுகள் அமைத்து அலங்கரிக்கப்பட்டிருந்தன. நமக்கா இவ்வளவு ஆடம்பரம் செய்திருக்கிறார்கள்? என்று கோசன்பிரபு தம் காரியதரிசியைக் கேட்டார். ''இவைகள் நமக்காகப்போட்டவைகள் அல்ல. ஜவஹர்லால் நேரு நேற்றைய தினம் வந்திருந்தார். அவருக்காகப் போட்டவற்றை இன்னும் கலைக்காமல் வைத்திருக்கிறார்கள்'' என்று காரியதரிசி பகர்ந்தார். ஜவஹர்லால் நேரு எங்கு போனாலும் அவருக்கு அலாதியான மதிப்பு இருந்தது. அவரிடம் ஆளுகின்ற தன்மை இருந்ததனால் அவர் முடிசூடா மன்னராக விளங்கினார். கௌரவர்கள் பாண்டவர்களுக்கு இடையில் ராஜா என்னும் பதவி யுதிஷ்டிரருக்குத்தான் பொருந்தும். அவர் நாடு ஆண்டாலும் வனவாசம் பண்ணினாலும் ஆளும் தன்மை அவரிடம்தான் இருந்தது. ஆளும் தன்மை எல்லாருக்கும் அமைகின்ற பண்பு அன்று. தலைவனாவது தகைமையால் ஆகும். நரேந்திரன் மாணாக்கனாக இருந்த பொழுது எப்பொழுதும் மாணாக்கர்கள் கூட்டத்திற்குத் தலைவனாக இருந்தான். ஐசுவரியம் என்பது அத்தகைய ஆளும் தன்மை படைத்திருப்பதாகும். ராமன் இருக்கும் இடம் அயோத்தி என்பார்கள். ராமன் எங்கிருந்தாலும் ஆளும் தன்மை உடையவனாக இருந்தான். அது ராமனுடைய ஐசுவரியம் ஆகும்.

ஐசுவரியத்துக்குச் செல்வம் என்ற பொருளும் வைத்துக்கொள்ளலாம். கையில் பணம் இல்லாது மனதில் ஐசுவரியம் படைத்தவர்களாக இருக்கலாம். பொருள் ஏராளமாகப் படைத்திருப்பதற்கிடையில் மனநிலையில் தரித்திரர்களாக இருக்கலாம். மனநிலை சரியாக இருக்குமானால் செல்வம் அவனுக்கு அடிமையாக இருக்கிறது. செல்வத்துக்கு அவன் அடிமையாவதில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்வதாவது: ''குடும்பி ஒருவன் பொருள் தேடத் தெரிந்துகொள்ள வேண்டும். பொருள் தேடத் தெரிந்துகொள்ளாதவன் குடும்பி அல்லன். பணம் சம்பாதிப்பதைத் தொழிலாகக்கொண்டிருப்பவன் சந்நியாசி அல்லன். குடும்பஸ்தனுடைய தர்மம் வேறு; சந்நியாசியினுடைய தர்மம் வேறு. அவரவர்களுக்கேற்ற தர்மத்தில் அவரவர்கள் பிரவேசிக்கவேண்டும்.''

பழனியில் சாது சுவாமி என்ற துறவி ஒருவர் இருந்தார். அவர் பணத்தைப்பற்றி நினையாது பெரிய அளவில் அன்னதானம் செய்துகொண்டிருந்தார். அவர் அடைந்திருந்த மனபரிபாகம் போற்றுதற்குரியது. அவர் கடைக்காரனிடம் பகர்ந்திருந்ததாவது: ''நீ தருகின்ற சாமான்களுக்குச் சரியாகக் கணக்கு வைத்துக்கொள். கணக்கு வைத்துக்கொள்ள வேண்டியது உன் பொறுப்பு. அதைத் தண்டபாணி பார்த்துக் கொள்வார். நான் அதைக் கவனிக்கமாட்டேன். அரிசி, பருப்பு முதலிய உணவுப்பொருள்களை நான் கேட்கின்றவளவு கொடுத்துக்கொண்டே

இருக்கவேண்டும். அவற்றிற்குரிய பணத்தை அன்பர்கள் உன்னிடம் கொண்டுவந்து தருவார்கள். அதை நீ பெற்றுக்கொள்." சாது சுவாமியிடம் வந்து "நாங்கள் இன்றைக்கு இவ்வளவு பேருக்குச் சாப்பாடு போடவேண்டும்" என்று அன்பர்கள் விருப்பம் தெரிவிப்பார்கள். அதற்குரிய தொகையைக் கடைக்காரனிடம் செலுத்திவிடும்படி சொல்லிவிடுவார். அவர்கள் அங்ஙனமே செய்வார்கள். அன்னதானம் முறையாக நடக்கும். அங்ஙனம் அவர் செல்வத்தைக் கையாண்டார். அவர் செல்வத்தைக் கையாண்டதுபோன்று அரசன்கூட கையாள முடியாது.

ராமன் வனவாசத்துக்குப் போனபொழுது சொத்து சுகங்களோடும், மந்திரி பிரதானிகளோடும் போகவேண்டுமென்று தசரதன் கேட்டுக்கொண்டான். அதற்கு ராமன் "ராஜ்யம் பரதனுக்குரியது. அதிலிருந்து நான் ஒன்றையும் தொடமாட்டேன்; என் கையிலுள்ள கோதண்டமே எனக்குப் போதும்" என்று கூறி வெறும் ஆளாகத்தான் புறப்பட்டுப்போனான். ராமன் வெறும் ஆளாகப் போனாலும் ஆரண்யத்தில் எவ்விதக் குறையுமில்லாத நிறைநிலை உடையவனாகவே இருந்தான். நிறைமனம் படைத்தவர்கள் எந்த இடம் சென்றாலும் அங்கு நிறை செல்வமாக இருக்கிறது. ராமன் இருந்த இடமெல்லாம் அயோத்தியாகத் திகழ்ந்தது. ரிஷிகள் முறை வைத்துக்கொண்டு ராமனை உபசரித்தார்கள். ராமன் அரக்கர்களை அழித்து ரிஷிகளுக்குப் பாதுகாப்பாகவிருந்து அவர்களைத் தவத்தில் ஈடுபடும்படி செய்தான். அயோத்தியில் மக்களைப் பாதுகாக்கின்ற ஆட்சியைவிட ஆரண்யத்தில் ரிஷிகளைப் பாதுகாக்கின்ற ஆட்சியில் ராமன் ஈடுபட்டுச் சிறந்த ஆட்சிபுரிந்தான். ராமன் எங்குச் சென்றாலும் ஆளுகின்ற பாங்குடையவனாகவே இருந்தான். எவ்வித மனக் குறையுமில்லாது ஆட்சியைச் சிறப்பாகச் செய்ததினால் ஐசுவரியம் என்ற சொல்லுக்கு ராமன் சிறந்த விளக்கமாக அமைகின்றான்.

"பலமஸி பலமயி தேஹி; வீர்யமஸி, வீர்யமயிதேஹி." என்பது வேத வழிபாடாகும். பலத்துக்கும் வீர்யத்துக்குமுள்ள வித்தியாசம் என்னவென்று அறிந்து கொள்ளவேண்டும். ஒருவன் தான் படைத்துள்ள பலத்தை நல்லதைக் காப்பதற்கும், கெட்டதை ஒழிப்பதற்கும் பயன்படுத்துவானாகில் அவன் வீர்யம் நிறைந்தவனாகின்றான். வீரன், சூரன் என்ற இரண்டு பதங்கள் இருக்கின்றன. பத்மாசூரன் குமரக் கடவுளால் அழிக்கப்பட்டவனாவான். அவன் வலிவு படைத்தவன் ஆகின்றான். அவன் தன் வலிவை துஷ்பிரயோகம் பண்ணினான். தன் வலிவின் மூலம் அவன் உலகத்துக்குத் துன்பம் தந்தான். அவனை சூராதி சூரன் என்று சொல்லலாம். ராமன் வீராதி வீரனாகிறான். தர்மத்தை விட்டுப் பிசகாதவன் வீராதி வீரனாகின்றான். தாய் தந்தையர் முன்னிலையில் ராமன் குழந்தை போன்று தலை வணங்கினான். ரிஷிகள் முன்னிலையில் ராமன் அடங்கி ஒடுங்கி சிஷ்யன் போன்று தலை வணங்கினான். ராமனை அவதார மூர்த்தி என்று அறிந்திருந்த ரிஷிகள் போற்றுதற்குரிய பொருள் என்று அவனை வழுத்தினார்கள். ராமனைப் போற்றுகின்ற செயல் அகஸ்தியர் ஆசிரமத்தில் உச்சநிலைக்கு வருகிறது. ராமன், லட்சுமணன், சீதை ஆகிய மூவரும் முறைப்பிரகாரம் அகஸ்தியரை வீழ்ந்து வணங்கினார்கள். அவர்களைத் தம்முடைய செல்வர்கள்செல்விபோன்று அகஸ்தியர் அன்போடு ஏற்றுக் கொண்டார். வணங்குதற்குரிய பெரிய பொருளாக ராமன் இருக்கின்றான். அவன் விஷ்ணுவின் அவதாரம் என்பது ஐதிகம். விஷ்ணு மானுட வடிவத்தில் ராமனாக வந்துள்ளார். எனவே ராமனை வணங்குவதும் விஷ்ணுவை வணங்குவதும் ஒன்று. மூல தத்துவத்துக்கு விளக்கமாக ராமன் விளங்குகின்றான். ராமனுடைய வடிவம் உபாசனைக்குரிய வடிவமாகிறது. ராம நாமம் ஜபிப்பதற்குரிய நாமமாகிறது. அகஸ்தியர் பகர்ந்ததாவது: "ராமன் எந்தக் காரியத்தை எடுத்துக் கொண்டாலும் அதில் ராமனுக்குத் தோல்வி இல்லை; அவன் எடுத்துக்கொண்ட காரியத்திலெல்லாம் வெற்றியே அடைவான்." ராமன் வீரன் என்பதற்கு அவன் எடுத்துக்கொண்ட காரியங்களிலெல்லாம் வெற்றி அடைந்ததே சிறந்த சான்றாகிறது. ராவணன் சீதையைத் தூக்கிக்கொண்டு போனபொழுது தனக்கு எல்லா வெற்றியும் வந்து விட்டதாக எண்ணினான். ஆனால் தேவர்கள் "ராவணன் ஒழிந்

தான்'' என்று கூறினர்கள். ராவணனை அழிப்பதற்கு ராமன் பெருமுயற்சி எடுத்துக் கொண்டான். ராமனுக்கு இடையிடையே தோல்வி போன்று ஏற்பட்டது. மோசனுஸ் திரத்தில் ராமன் மயங்கிக் கிடந்தபொழுது அது தோல்வி போன்று தென்பட்டது. ஆனல் அது மாறி அமைந்து வெற்றியாக முடிந்தது. தீமையை எதிர்த்து முழு பராக்கிரமத்தோடு வீர்யம் படைத்திருக்கின்ற ஒருவன் போராடு கின்றான். வீரனுக்குத் தோல்வி என்பது ஒரு நாளும் வருவதில்லை. குஸ்தி போடுகின்ற இரண்டு பயில்வான்கள் தங்களுடைய முழு பலத்தையும் காட்டாது எதிரியாக இருப்பவ னுக்குச் சிறிது சந்தர்ப்பம் அளிப்பார்கள். அந்த நிலையில் ராமன் இராவணனுக்குச் சந்தர்ப்பம் அளிக்கின்றான். ராமனைச் சேர்ந் தவர்கள் அனைவரும் மயங்கிக் கிடக்கின்றார் கள். ராமன் இராவணனைப்பார்த்து பகர்ந்த தாவது: ''இராவணா! இன்றைக்கு நீ நன்றாகப் போர்புரிந்தாய்! அதை நான் மிகவும் பாராட்டு கின்றேன். ஆனல் உன்னை ஒழிக்க நான் தீர் மானம் செய்து விட்டேன். இன்றைக்கு நீ உன் அரண்மனைக்குப் போய் நன்றாக ஓய்வு எடுத்துக்கொண்டு நாளை நன்கு தீர்மானம் செய்துகொண்டு போருக்கு வா. இப்பொழுது நீ உன் மனதை மாற்றி அமைத்துக் குற்றத்தை உணர்ந்து சீதையை நீ என்னிடம் ஒப்படைத்து விட்டால் உயிர் தப்பலாம்.'' இங்ஙனம் ராமன் எதிரிக்குச் சந்தர்ப்பம் கொடுத்து கண்ணியமான முறையில் நடந்து கொள்கின் றான். வீரன் எப்படி நடந்து கொள்வான் என் பதை ராமன் தன் வாழ்க்கையில் காட்டித் தருகிறான்.

ஸ்ரீ என்பது பகவானுடைய விபூதிகளில் ஒன்றாகும். ஸ்ரீ என்பதைத் தமிழில் திரு என்று கூறுவார்கள். திரு என்பதற்குச் செல்வம் என்பது ஒரு பொருளாகவும், அழகு என்பது மற்றொரு பொருளாகவும் இருக்கின்றன. ஸ்ரீ என்பது செல்வத்தையும், அழகையும் குறிக் கின்றது. அழகு என்ற பொருளை இங்கு எடுத் துக்கொள்வோம். கடவுள் தம் மகிமையை அழகு மூலமாகவும் விளக்கிக் கொண்டிருக் கிறார். கடவுள் அழகே வடிவெடுத்தவர். மதுரையிலிருந்து இமயமலையிலுள்ள கேதார நாத், பத்ரிநாத் பரியந்தம் சிவன், விஷ்ணு ஆகிய இரண்டு மூர்த்திகளுக்குரிய ஸ்தலங்கள் பக்கம் பக்கமாக அமைந்திருக்கின்றன. சுந்தர ராஜன் என்பது விஷ்ணுவுக்குப் பெயர். சுந்த ரேசுவரன் என்பதுசிவனுக்குப் பெயர். அரங்க நாதன், சபாபதி என்பன ஒரே பொருளைக் குறிக்கின்றன. அரங்கநாதன், சபாபதி என்ற பெயர்கள் அரங்கம், சிதம்பரம் ஆகிய இரண்டு ஸ்தலங்களின் மூர்த்திகளைக் குறிக்கின்றன. ஜகந்நாதன், விசுவநாதன் என்றும் பெயர்கள் பிருந்தாவனம் காசியிலுள்ள மூர்த்திகளைக் குறிக்கின்றன. ஹரித்துவார், ஹரத்துவார் என்பன பக்கம் பக்கம் அமைந்துள்ள பத்ரி நாத், கேதாரநாத் ஸ்தலங்களைக் குறிக்கின்றன. கைலாசத்தில் இரண்டும் ஒன்றாகிவிடுகின்றன. பிரபஞ்சத்தில் எங்கெல்லாம் அழகு பொலி கின்றதோ அங்கெல்லாம் பரமனுடைய மகிமை யைக் காண்கின்றோம். அழகை, பரமனுடைய மகிமையை ரசிக்கின்ற பாங்கில் ரசிக்கலாம். அழகைப்போகத்துக்குரியது என்று கருதினல் பண்பில் கீழே போய்விடுகிறோம். அழகைக் குற்றமற்ற பாங்கில் ரசிப்பது ஈசுவர வழிபாடு ஆகிறது. ராமன் கட்டழகே வடிவெடுத்த வனாகத் திகழ்கின்றான். அவனை மிதிலாபுரிக் குள் விசுவாமித்திரர் அழைத்து வந்தபொழுது அவன் மேனியின் அழகைப்பார்த்தவர்கள் அதி லேயே லயித்துப்போய் விட்டார்கள். ராமன் மேனியில் எந்த அங்கத்தை யார் பார்த்தார் களோ அந்த அங்கத்திலேயே அவர்கள் லயித்து நின்று விட்டார்கள். ராமனின் முகத்தைப் பார்த்தவர்கள் முகத்தையே பார்த் துக் கொண்டிருந்தார்கள். ராமனின் தோளைக் கண்டவர்கள் தோளையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். பாதத்தைப் பார்த்த வர்கள் பாதத்தையே பார்த்துக் கொண் டிருந்தார்கள். இங்ஙனம் வர்ணித்திருப்பது கம்பனுடைய கற்பனை என்று சிலர் நினைக் கலாம். சரித்திர பூர்வமான நிகழ்ச்சி ஒன்றை ஈண்டு எடுத்துக்கொள்ளலாம். செங் கற்பட்டு ஜில்லாவில் மதுராந்தகம் என்ற ஊர் உண்டு. அவ்வூரில் ஏரிகாத்த ராமன் என் னும் கோயில் உள்ளது. அவ்வூரில் ஒருசமயம் பெரும் மழைபெய்து ஏரியில் நீர் நிரம்பி ஏரி உடைந்து போகும் நிலையில் இருந்தது. ஊர்

மக்கள் ஏரி உடையாதிருக்கவேண்டுமென்று அவ்வூர் கோயிலிலுள்ள ராமனை வழுத்திக் கொண்டிருந்தார்கள். அவ்வமயம் அம் மாவட்ட அதிகாரியாகவிருந்த ஆங்கிலேயன் "ராமன் காப்பாற்றுவானு?" என்று கேட் டார். அதற்கு அவ்வூர் மக்கள் "நாங்கள் செய்யவேண்டிய முயற்சியெல்லாம் செய்தாகி விட்டது. இனி ராமன்தான் காப்பாற்றவேண் டும்" என்றனர். ஏரி நிறைந்து தண்ணீர் வழியும் நிலையில் இருந்தது. மாவட்ட அதி காரி கையில் தீபம் எடுத்துக்கொண்டு ஒரு ஆளையும் துணையாக அழைத்துக்கொண்டு இரவு நேரத்தில் ஏரியின் நிலைமையைப் பார்க் கப் போனுர். கட்டழகு வாய்ந்த இரண்டு மூர்த்திகள் ஏரியைக் காத்துக்கொண்டிருப் பதை மாவட்ட அதிகாரி பார்த்தார். அவ் வழகில் ஈடுபட்ட அவர் "அவ்வழகை என் னென்று சொல்வேன்; அவ்விரண்டு இளைஞர் களுடைய அழகும் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுபோய்விட்டது" என்று கூறினர். ராமன், லட்சுமணன் ஆகிய இரண்டு மூர்த்திகள் அவ் ஏரியைக் காத்துக் கொண்டிருந்தனர் என்பது அவருக்குத் தெரியாது. அம்மூர்த்திகள் கடவுள் என்பதை அறியாதிருந்தும் அவர்களின் அழகை அவர் ரசித்தார். எதிரியாக இருந்த இராவணன் மனதுக்குள் ராமனின் அழகை ரசித்தான். ஆனல் வெளியில் அவன் அதைக் காட்டிக் கொள்ளவில்லை. ராமனின் மேனியின் பொலி வைக் கண்டவர்களின் உள்ளம் அவ்வழகில் மூழ்கிப் போயிற்று. ராமனுடைய மகிமை தான் உலகில் இத்தனைவிதமான அழகாகத் திகழ்கிறது. அவன் பாலகிருஷ்ணனுக மேனி தாங்கிவந்தபொழுது கோபிமார்கள் எல்லாரும் தங்களை மறந்து அவனுடைய அழகில் ஈடு பட்டுப் பிரபஞ்சத்தை மறந்து அவனோடு கொஞ்சி விளையாடினர்கள். இயற்கையில் உள்ள யாவும் கண்ணனுடைய அழகாக அவர் களுக்குத்தெரிந்தன. அப்படி அவர்கள் அழகை ரசித்தது நல்ல வழிபாடாகும்.

பூமிமேல் புகழத்தக்க பொருளே என்று இறைவன் போற்றப்படுகின்ருர். இறைவனைப் போற்றுவது பொருள் சேர்ந்த புகழ் ஆகின் றது. இறைவனைப் போற்றவேண்டும். நரஸ்துதி பண்ணக்கூடாது. நரஸ்துதி செய்தால் நா தூய்மையை இழக்கின்றது. உலக காரியம் நிறைவேறுவதற்காக ஒருவன் மற்ருெருவனைப் புகழ்வது நரஸ்துதி ஆகும். நரஸ்துதி பண்ணு கின்றவன் தன்னையும் கெடுத்துக்கொள்கின் ருன். தான் யாரை நரஸ்துதி பண்ணுகிருனே அவனிடம் அகங்காரத்தை வளர்த்து அவனை யும் கெடுக்கின்ருன். கடவுளைத் துதிக்கின்ற வளவு நாவுக்குத் தூய்மை உண்டாகிறது. பக்தர்கள் யாண்டும் பரமனைத்தான் துதிப் பார்கள். தியாகராஜ சுவாமிகள் ராமனைக் குறித்துத்தான் பாடுவார். சோழராஜன் தன் னைக்குறித்துப் பாடும்படி கேட்டுக்கொண்ட பொழுது தியாகராஜசுவாமி "ராமா, உன் னைப்பாடிய நாவு வேருெருவரைப்பற்றிப் பாடுமா?" என்று பாடினர். அதைக் கேட்ட சோழ அரசன் அவர் முன்னிலையில் வீழ்ந்து நமஸ்காரம் செய்து தன்னைக் குறித்துப்பாடும் படி கேட்டதற்கு மன்னிப்புக் கேட்டுக்கொண் டான். கீர்த்தி அல்லது புகழுக்கு உரியவர் பரம்பொருள் ஒருவரே. அவரிடத்தில் எல்லா மகிமைகளும் இருக்கின்றன. அவருக்குப் புறம்பாகக் கீர்த்திக்குரிய பொருள் வேறு ஒன்றும் இல்லை. பக்தன் இதை நன்கு உணர் வதால் பரமனைப்பாடி பரவசமடைகின்ருன்.

ஆறுவித சம்பத்துக்களோடு பரம்பொருள் பூலோகத்துக்கு வந்திருக்கிறபொழுது நமது வழிபாட்டுக்குச் சுலபமாக இருக்கின்றது. ஞானக்கண் பெற்றவர்களுக்கு மன அதீதத்தி லுள்ள இறைவன் பெருமை விளங்குகிறது. இறைவன் பிரபஞ்சமாக இருக்கும்பொழுது பஞ்சேந்திரியங்களின் துணைகொண்டு பர வஸ்துவின் மகிமைகளைக் காண்கின்ருேம். நம் சிற்றறிவைக் கொண்டு பாராட்டுதற்குரிய ஷட்குண சம்பன்னனுகப் பரவஸ்து தம் மகிமை களைக் காட்டுகிருர். அவருடைய ஆறுகுணங் களிலும் நம் மனம் லயப்பட்டு அவரைப் பாராட்டுகிறபொழுது நாம் சிறந்த வழிபாடு செய்தவர்களாகிருேம். நம்முடைய வழிபாட் டுக்கென்றே அவர் ஷட்குண சம்பன்னனுக விளங்குகிருர். கடவுள் ஷட்குணசம்பன்னனுக இருக்கும் மகிமையை அறிந்து முறையாக அவரை வழிபடுவதற்கு நாம்கற்றுக்கொள்வோ மாக. (முற்றும்)

# வாசுதேவமனன விளக்கம்

( சுவாமி ஸதானந்தர் )

ஜீவன் முக்தன் சரீரம் உடைத்திருப்பதற் கிடையில் சரீரத்தின் கட்டுப்பாடுகளையும், நியதிகளையும் தாண்டி அதில் கட்டுப்படாமல் யாண்டும் முக்தி நிலையில் இருக்கிறான். இவ் வுலகின் எந்தச் சுக துக்கங்களிலும், நிந்தை ஸ்துதியிலும், சரீரத்தின் எந்த உபாதியிலும் கட்டுப்படாமல் அவன் வாழ்வதை மற்றவர்கள் பிரத்யக்ஷமாகப் பார்க்கிறார்கள். பந்த பாசங் களிலும், இடையறாது துன்பங்களிலும் உழ லும் சாதாரண மக்களுக்கு அத்தகைய ஜீவன் முக்தனின் ஜீவிதம், சான்னித்தியம், வாழ்க் கைச் செயல்கள் ஊக்கமும், ஆறுதலும் அளிக் கின்றன. சுகர், நாராயண பிராந்தன், சதா சிவ பிரமேந்திரர் போன்றவர்கள் இவ்வுல கில் சரீரத்தில் வாழ்ந்தார்கள். ஆனால் அவர் கள் மனது இப்பிரபஞ்சத்தின் எந்த நியதியி லும், எந்தத் துவந்துவத்திலும் கட்டுப்பட வில்லை. அவர்கள் யாண்டும் தங்கள் சொரூப உணர்வில் நிலைபெற்றிருந்தார்கள். இனி சூக்ஷ்மமான கேள்வி ஒன்று எழுகிறது. விதேக முக்தி நிலையில் உள்ள ஜீவனின் நிலையையும் செயல்களையும் யாரும் பார்த்ததில்லை, பார்க்க வும் முடியாது. கடலில் கலந்துபோன நதி போன்றும், கடலில் விழுந்த மழைத்துளி போன்றும்,விதேக முக்தி என்பது வியக்தியை இழந்த நிலையாகையால், ஜீவாத்மா பரமாத்மா வுடன் இரண்டறக் கலந்துபோன நிலையாகை யால் அந்நிலையில் அதன் அனுபவத்தை, அதன் செயல்களைப் பிறர் எப்படி அறிய முடியும்? இது நாம் விளங்கிக்கொள்ள முடியாத ஒரு நிலை. தனியொரு வியக்தி இருந்தால் அல் லவா அனுபவம் இருக்க முடியும்! விதேக முக்தனுக்குச் சரீரம் இல்லையே தவிர சொரூப சுகம் உண்டு. சொரூப சுகம் என்பது சுஷுப்தியில் ஏற்படும் ஆனந்த அனுபவம் போன்றது. அதைப் பிறர் அறிய முடியாது, தானே அறியக்கூடியது. விதேக முக்தியில் ஆனந்த அனுபவம் இல்லை என்றால் ஆத்மா வின் சொரூப லக்ஷணத்துக்கே குறை ஏற் படும். சத்-சித்-ஆனந்தப் பொருளை அடைந்த ஜீவனுக்கு ஆனந்த அனுபவம் இல்லாது எப்படி இருக்க முடியும்? இதை வைத்து சுஷுப்தி அவஸ்தையையே முக்திநிலை என்று முடிவு கட்டலாகாது. சுஷுப்தியில் அக் ஞானம் அழிந்து போவதில்லை. தூங்கி எழுந்தவுடன் நாம் பழைய ஆளாகவே இருக்கிறோம். தூங்கி எழுந்ததும் சரீரப் பிரக்ஞை வருகிறது. இந்த இரண்டும் பூரண மோக்ஷத்தில், விதேக முக்தியில் இல்லை. ஆகையால் சுஷுப்தி அவஸ்தை மோக்ஷம் அன்று. பூரண ஞானிதான் முக்தி அடையமுடி யும். ஞானத்தின் விளைவு முக்தி. ஞானத்தின் சிகரம், முடிவு முக்தி. ஞானத்தின் பரிணமம் முக்தி. அது முடிந்த நிலை. அதற்குமேல் பரிணமம் இல்லை. ஞானமே முக்தி. ஞானிக்கு மறுபிறப்பும் இல்லை. ஆகவே சாஸ்திரப் பிர மாணம், யுக்திப் பிரமாணம் மூலம் விதேக முக்தியே பரம சுகமானது. சரீரம் பெற்ற காரணத்தினாலேயே துக்கம் ஏற்படுகிறது என்று முடிவாயிற்று. இனி அனுபவ பிரமா ணத்தைப் பார்ப்போம். சுஷுப்தி அவஸ்தை ஒரு ஆச்சரியமான நிலை. அதில் பேதங்கள், துவந்துவங்கள் எல்லாம் அற்றுப்போகின்றன. அங்கு மனதின் செயல் இல்லை, சரீர உணர்வு இல்லை. ஆனால் ஆனந்தமாய் தூங்கியதற்குச் சாக்ஷியாய் ஒரு பொருள் எப்போதும் விழித் திருக்கிறது. அதனால் அது யாண்டும், யாவ ருக்கும் அந்நிலை சுகமாய், இன்பமாய், ஆனந்த மாய் இருக்கிறது. சொப்பனத்திலும் விழிப் பிலும் சரீர சம்பந்தம் இருப்பதால் ஆங்குத் துக்கம் தோன்றிவிடுகிறது. துக்கம் அனுப வத்துக்கு வந்துவிடுகிறது. ஜீவனுக்குச் சரீர சம்பந்தத்தால்தான் துக்கம் உண்டாகிறது. ஆத்மா தன் இயல்பிலேயே, சொரூபத்தி லேயே ஆனந்தமயமானது என்பதற்கு உறக் கம் பிரத்யக்ஷப் பிரமாணமாகிறது.

துக்கத்துக்குக் காரணமான இந்தச் சரீரம் எப்படி உண்டாயிற்று? பூர்வ கர்மாக்களுடன் கூடிய பஞ்ச பூதங்கள்தான் சரீரம் தோன்றக் காரணமாகின்றன. இப்பிரபஞ்சம் முழுவதும் பஞ்சபூதங்களால் ஆனது. அதில் மானுட சரீர மும் சேர்ந்தது என்று கேள்விப்பட்டிருக்

கிறோம். 'பூர்வ கர்மாக்களுடன் கூடிய' என்று அடைமொழி போட்டுச் சொல்வதின் கருத்தென்ன? பஞ்ச பூதங்களில் பூர்வ கர்மாக்கள் எப்படிச் சேர்ந்திருக்க முடியும்? பஞ்சபூதங்கள் ஜடப்பொருள்கள். சூக்ஷ்மப் பொருள் ஸ்தூலப் பொருளாக மாறுகிறது. ஸ்தூலப்பொருள் சூக்ஷ்மப் பொருளாக மாறவல்லது. ஸ்தூலப் பொருள்களைவிட சூக்ஷ்மப் பொருளுக்கு வலிவும் வியாபக சக்தியும் அதிகம். சூக்ஷ்மப் பொருள் ஜடப்பொருளை இயக்குகிறது. ஜடப் பொருள் படிப்படியாகச் சேதனப் பொருளாக மாறி அமைகிறது. ஜடப்பொருள் அறிவும் உணர்வும் இல்லாதது. சேதனப் பொருள் அறிவும் உணர்வும் உள்ளது. ஜடப்பொருளைச் சேதனப் பொருள் இயக்குகிறது. விதவிதமான ஜடப் பொருள்களைச் சேதனப்பொருளே உருவாக்குகிறது; தோற்றத்துக்குக் கொண்டு வருகிறது. இவையெல்லாம் இயற்கையின் நடைமுறை — தத்துவங்கள் — உண்மைகள். பூர்வ கர்மாக்கள் என்பது ஜீவனின் வினையின் பயன்கள். வினைக்கும் கர்மம் என்று சொல்லுவதுண்டு. வினைப்பயனுக்கும் கர்மம் என்று சொல்லுவதுண்டு. இடத்தை அனுசரித்துப் பொருள்படுத்தவேண்டும். இவ்விடத்தில்கர்மம் வினைப் பயனைக் குறிக்கிறது. பஞ்ச பூதங்கள் சேர்ந்து உடல் தோன்றுகிறது. மரணமடையும் போது உடல் பிரிந்து பஞ்ச பூதங்களில் கலந்துவிடுகிறது. பூஜை அறையில் மணமுள்ள பத்தி எரிந்துகொண்டிருக்கிறது. ஜன்னல் வழியே பூஜை அறைக்குள்ளே வரும் சுத்தக் காற்று அம் மணத்தை ஏற்று வெளியே வருகிறது. வெளியில் இருப்பவர்களுக்கு அம்மணம் இன்பத்தைஊட்டுகிறது. தூரப்போகப்போகக் காற்று மணமற்றதாக ஆகிறது. ரயில்களும் பஸ்களும் ஏராளமான புகையை வெளிவிடுகின்றன. சிறிது நேரத்தில் அவை கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிடுகின்றன. காற்றில் குளிர்ச்சி இருக்கிறது, வரட்சி இருக்கிறது, தூசி இருக்கிறது. நீருக்கு அதுபடியும் பூமியின் நிறமும் சுவையும் ஏற்படுகின்றன. நீர் வளம், நிலவளத்துக்கு ஏற்பப் பயிர்பச்சைகள் செழிப்புற்று இருக்கின்றன.

अन्नाद्भवन्ति भूतानि पर्जन्यादन्नसम्भवः ।
यज्ञाद्भवति पर्जन्यः यज्ञः कर्मसमुद्भवः ॥

உணவினின்று உயிர்கள் உண்டாகின்றன. மழையினின்று உணவு உண்டாகிறது. யக்ஞத்திலிருந்து மழை வருகிறது. யக்ஞத்துக்குப் பிறப்பிடம் கர்மம் (*3-14*). நாம் செய்யும் செயல்கள் யாவும் கர்மங்கள் எனப்படுகின்றன. நற்கருமங்களுக்கு யக்ஞம் என்று பெயர். நற்கர்மங்களின் விளைவாக இயற்கை முழுவதும் நன்மை செய்கிறது, துணையாக இருக்கிறது, உதவுகிறது. தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பது பழமொழி. நல்வினைக்கு நல்ல பலனும் தீயவினைக்குத் தீய பயனும் உண்டாகின்றன. இது பிரபஞ்சம் முழுவதற்கும் உண்மை.

குழந்தைகள் சதா விளையாட்டும், மகிழ்ச்சியும் இயல்பாகவே உள்ளவர்கள். அவர்கள் இருக்கும் பள்ளிக்கூடத்துக்குப் போய்ப்பாருங்கள். அங்கே நம்மை அறியாது மகிழ்ச்சி உண்டாகிறது. தேவாலயங்களுக்கு மக்கள் தெய்வ உணர்வுடன் வருகிறார்கள். தெய்வ எண்ணங்களே எண்ணப்படும் அங்குச் சென்று பாருங்கள். அருளையும் சாந்தியையும் அங்கு உணர முடியும். குடியும் கூத்தும் உள்ள ஹோட்டலுக்குச் சென்றுபாருங்கள். அங்கிருந்து எப்போது வெளியேறலாம் என்று தோன்றும். அவ்விடத்தின் எண்ணம் அப்படிப் பட்டது, அவ்விடத்தின் தன்மை அத்தகையது. அங்கு எண்ணப்பட்ட எண்ணங்கள் எங்கே போகும்? மனிதனது எண்ணங்கள், உணர்வுகள் அழிவதில்லை. மனிதனது சம்ஸ்காரங்கள் அழிவதில்லை; வினைப்பயனும் அழிவதில்லை. நல்ல எண்ணங்கள் மற்றவர்களுக்கு நல்ல எண்ணம் எண்ணத் தூண்டுதல் தருகின்றன. கெட்ட எண்ணங்களும் அப்படியே கெட்ட எண்ணங்கள் எண்ண தூண்டுதல் தருகின்றன. எண்ணங்கள் மறைவதில்லை; எண்ணங்கள் உயிருடன் சஞ்சரிக்கின்றன. மானுடரின் வினைப்பயன்களே அவனது மறுபிறப்பை நிர்ணயிக்கின்றன. வினைப்பயனை அனுபவித்துத் தீர்ப்பதற்கு ஏற்ற சூழ்நிலையில், அதற்கேற்ற சரீரத்துடன் அது பிறக்கிறது. மானுடனுக்குக் காரண சரீரம் (அக்ஞானம்) சூக்ஷ்ம சரீரம் (அந்தக்கரணம்) ஸ்தூல சரீரம் (பருஉடல்) என்று மூன்று சரீரங்கள் உள்ளன. சூரியனுடைய ஒரு கிரணம்,

கடலில் ஒரு அலை, நெருப்பின் ஒரு பொறி போன்று பரம்பொருளின் ஒரு கிரணமாக, பொறியாக, அலையாக ஜீவன் இருக்கிறன். அந்நிலையும் அக்ஞானத்தால் மூடப்பட்டதாக இருக்கிறது. அது காரணசரீரம் எனப்படு கிறது. அது பல உயிர்வகைகளாகப் பிறந்து, அதிக இந்திரியங்கள் பெற்று, அதிக அறிவைப் பெற்று, படிப்படியாக மேலான உயிராகப் பரிணமித்து வருகிறது. அது மானுட நிலைக்கு வந்ததும் தன் வினைக்குத் தானே கர்த்தா என் கிற கர்த்ருத்வ புத்தி அதற்கு வந்துவிடுவதால் வினைப்பயனும் அதைத் தொடர ஆரம்பிக் கிறது. பிறகு வினைப்பயனை அனுபவிக்கப் பிறவி எடுக்கிறது. அப்படிப் பல பிறவிகள் எடுத்து 'எல்லாம் அவன் செயல்; எல்லாம் அவனே; அவனன்றி ஓரணுவும் அசையாது; எல்லாம் நன்மைக்கே' என்கிற உண்மைகளை உணர்ந்து, தன் நிஜசொருபத்தை உணர்ந்து அது கடவுளுடன் இரண்டறக் கலக்கிறது. ஆகையால் சரீரம் தோன்றுவதற்குப் பஞ்ச பூதங்கள் மட்டும் காரணமன்று; பஞ்சபூதங்கள் மட்டும் காரணமென்றல் எல்லா இடங்களிலும் பஞ்சபூதங்கள் இருக்கின்றனவே, அங்கெல் லாம் சரீரம் உண்டாகக் காணுமே என்கிற கேள்வி வரும். புருஷன், ஸ்திரீ இவர்களின் சுக்கில, சோணித சேர்க்கையினுல்தான் சரீரம் (குழந்தை) ஏற்படுகிறது. ஆக அதுதான் சரீரத் துக்குக் காரணம் என்று சொல்லக்கூடாதா? எல்லா ஸ்திரீ புருஷ சங்கமத்திலும் குழந்தை பிறப்பதில்லை. இவ்வுலகில் மகப்பேறு இல் லாத எத்தனையோ பெற்ருேரைப் பார்க் கிருேம். ஆகையால் அதுமட்டும் காரணமன்று. பூர்வ கர்மாவுடன் கூடிய பஞ்சபூதங்களே சரீ ரத்துக்குக் காரணமாகும் என்பது முடிவு.

பஞ்சபூதங்கள், காலம், தேசம் இவை எல் லாச் சரீரங்களுக்கும் பொதுவானவை. இதில் வித்தியாசமில்லை. ஆனல் சரீரங்களுக்குள் பல வித்தியாசங்களும், வாழ்க்கை அமைப்புகள், சூழ்நிலைகள், சந்தர்ப்பங்களில் பலவித்தியாசங் களும் ஏற்படுவதற்குக்காரணம் அவரவர்களின் விசித்திரமான பல்வேறு கர்மாக்கள்தாம். மண் என்பது பொதுவாக உள்ள போதிலும் குயவனுடைய பலவகையான செய்கைகளால், கைத்திறமையால் பல வடிவங்கள் உள்ள பாண்டங்களும், பிரதிமைகளும் உண்டாகின் றன. இந்த உதாரணத்தில் இரண்டு கார ணங்கள் சொல்லப்படுகின்றன. ஒரு காரியத் திற்கு இந்த இரண்டு காரணங்களும் தேவை யாகின்றன. பானை செய்வதில் மண் உபா தான காரணம் என்றும், குயவன் நிமித்த காரணம் என்றும் சொல்லப்படுகின்றன. இந்த இரண்டும் சேர்ந்தால்தான் பானை என் கிற காரியம், பொருள் கிடைக்கும். சரீரம் உண்டாவதில் பஞ்ச பூதங்கள் உபாதான காரணம், பூர்வகர்மம் நிமித்த காரணம் ஆகும். அனுபவித்துத் தீர்க்கவேண்டிய கர்மபலன் இருக்கிற வரையில் பிறவிகள் உண்டா கிக்கொண்டிருக்கும். சொப்பனவஸ்தையிலும், விழிப்பு நிலையிலும் கர்மம் இருப்பதால் சரீர சம்பந்தம் உண்டாகிறது. கர்மம் இல்லா விடில் சரீரம் உண்டாகாது. சுஷுப்தியில் கர்மம் இல்லாததால் சரீரமும் இல்லை. மண் இருந்தாலும் குயவனின் வேலை ஏற்படாவிடில் குடம் உண்டாகாது. அதுபோலவே ஈசுவர னல் சிருஷ்டிக்கப்பட்ட பஞ்சபூதங்கள் இருந்த போதிலும் ஆத்ம ஞானத்தால் கர்மாவுக்கு நாசம் ஏற்பட்ட பின்பு ஞானிக்குச் சரீரம் உண் டாவதில்லை.

இப்பொழுது நல்ல கேள்வி ஒன்று எழு கிறது. நமது சாஸ்திரங்களில் கர்மத்தைப் பற்றிச் சொல்லும்பொழுது "தான் செய்த கர்மம் நல்லதாயினும் கெட்டதாயினும் அதன் பலனை அவன் அனுபவித்தே தீரவேண்டும். அனுபவிக்கப்படாமல் கல்பகோடி காலமானு லும் அந்தக் கர்மபலன் நாசமாவதில்லை" என்று சொல்லப்படுகிறது. ஞானத்தை உபதேசிக் கையில் "ஞானக்கினியில் எல்லாக் கர்மங்களும் சாம்பலாகிவிடுகின்றன" என்று சொல்லப் படுகிறது. முரண்படுகிற இந்த வேத வாக்கி யங்களில் எது சரி? இதை எப்படி முடிவு செய்வது?

நியூட்டன் முதன்முதலில் பூமியின் ஆகர்ஷண சக்தியைக் கண்டு பிடித்தார். அதைப் பற்றி ஆராய்ந்து, தாம் கண்டறிந்த உண்மைகளைத் தாம் கண்டறிந்தவாறு எழுதி வைத்தார். பின்னல் ஐன்ஸ்டீன் கண்ட பல உண்மைகள் நியூட்டனின் கோட்பாடுகளைத் தவறு என்று ஆக்கிவிட்டன. ஒரு காலத்தில் பூமி தட்டை

யானது என்று கருதி வந்தார்கள். பின்னல் அது உருண்டையானது என்று கண்டு பிடிக்கப்பட்டது. புதிய உண்மைகள் கண்டு பிடிக்கப்படும் போது பழைய நடைமுறை உண்மைகள் அடிபட்டுப் போகின்றன. ஜீவன், ஜகத், பரம் ஆகியவைகளைப் பற்றிய உண்மைகளும், கடவுள் கொள்கைகளும் இங்ஙனம் வளர்ந்து வந்துதான் இப்போதுள்ள, இனி மாற்றத்துக்கு இடமில்லாத, முடிவான உண்மைகளாக விளங்கி வருகின்றன. நமது சாஸ்திரங்களில் "பிரபலவசனம், துர்பல வசனம் என்று இரண்டு விதங்கள் உண்டு. பிரபலம் சித்தாந்த வசனம் (அதுதான் முடிவு, உறுதி, ஏற்றுக்கொள்ளத் தக்கது என்று பொருள்). துர்பலம் பூர்வபக்ஷ வசனம் (முன்னல் இருந்த அபிப்பிராயம், கொள்கை அது. வேறு புதிய உண்மைகளைக் கண்டறிந்தவுடன் அது சரியல்ல என்று ஆகிவிடுகிறது. பூர்வ பக்ஷம் என்றால் அது முடிவு அன்று, ஆக்ஷேபனைக்கு உரியது. மேலும் ஆலோசித்து முடிவு செய்யவேண்டும் என்று பொருள்) என்று சொல்லப்பட்டிருக்கிறது. अहिंसा परमो धर्मः । அஹிம்ஸை எல்லாவற்றிலும் மேலான தர்மம் என்ற வேத வாக்கியம் இருக்கிறது. यागे पशुवधः कर्तव्यः யாகத்தில் பசுவதை செய்யப்படவேண்டும் என்று வேறொரு வேதவாக்கியம் இருக்கிறது. உலக நடைமுறைக்கு இரண்டாவது கொள்கை அவசியம் வேண்டியதாய் இருக்கிறது. உயிர் வாழ்க்கை மரணம் என்னும் அஸ்திவாரத்தின் மேல் கட்டப்பட்டிருக்கிறது. உயிர் வாழும் ஒவ்வொரு நாளும் மரணத்தை நோக்கிச் சென்றதாகிறது. ஆயுளில் ஒருநாள் குறைந்து விட்டது என்று ஒரு பொருள். பிற உயிரை எவ்விதத்திலும் ஹிம்சிக்காது எந்த உயிரும் ஒரு கணமும் உயிர் வாழ முடியாது என்றும் இதற்குப் பொருள். உலக நன்மையின் பொருட்டு, மற்ற உயிர்களின் நலத்தை முன்னிட்டுக் கெட்டதை அழித்தாகவேண்டும். யாகம் என்றால் நல்ல காரியம், பல பேருக்குரிய உலக காரியம் என்று பொருள். பசுவதை என்றால் பசு என்று மட்டும் அர்த்தமன்று, எல்லா ஜீவர்களையும் குறிக்கும். உலக நன்மையின் பொருட்டுத் தன்னையும் தன்னிடத்துள்ள எல்லா நல்லதையும் ஆகுதியாகப் படைக்கவேண்டும் என்று ஒரு பொருள். உலக நன்மையின் பொருட்டுக் கெட்டதை அழித்து விடவேண்டும் என்றும் பொருள். ஆகையால் நமது நித்திய வாழ்க்கையில் இரண்டாவது வேத வாக்கியம் பிரத்யக்ஷ உண்மையாக, அவசியமானதாக மிளிர்கிறது. அதேபோல "காகமானவை கோடி கூடி நின்றாலும் ஒரு கல்லின்முன் எதிர் நிற்குமோ, கர்மமானது கோடி முன்னே செய்தாலும் நின் கருணைப் பிரவாக அருளைத்தாகமாய் நாடினவரை வாதிக்கவல்லவோ?" என்ற வாக்கியம் எவ்வளவு நம்பிக்கையையும் அருள் நாட்டத்தையும் தூண்டவல்லது பாருங்கள். கர்மபலனுக்கு மிக்க பலம் உண்டு. அது அனுபவிக்காமல் தீராது. அது உண்மையே. பாபத்தில் மூழ்கிக் கிடப்பவனை அது பயமுறுத்த வல்லது. வால்மீகி, கிரீஷ்சந்திர கோஷ் ஆகிய இவர்கள் பாபவாழ்க்கை வாழ்ந்தவர்கள். ஆயினும் விசுவாசம், சிரத்தை, சொன்ன சொல் தவறாமை என்னும் குணங்களினால் பழவினைகள், புதுவினைகள் யாவற்றையும் மாய்த்துவிட்டு அதே ஜன்மத்தில் ரிஷிகள் ஆனார்கள். வெகு காலமாக இருளடைந்துள்ள ஒரு அறையில் தீபம் ஒன்றைக் கொண்டு போனால் உடனே இருள் போய் வெளிச்சம் உண்டாகாதா? என்கிறார் ஸ்ரீ ராமகிருஷ்ணர். தன் விமோசனத்துக்கு ஒரு வழி சொல்லுங்கள் என்று ஏங்கி வந்த ஆத்ம சாதகன் ஒருவனுக்கு ரிஷியின் புத்திரன் மூன்று தரம் ஸ்ரீ ஹரியின் நாமத்தை உச்சரிக்கச் சொன்னார். பிறகு அப்பாவிடம் இவ்விரதத்தைச் சொன்னார். அதற்கு ரிஷி "குமாரா, நீ எவ்வளவு விசுவாசம் கெட்டவனாய் இருக்கிறாய். ஒரு தரம் ஸ்ரீ ஹரியின் நாமத்தைச் சொன்னால் போதாதா?" என்று கடிந்து கொண்டார். இதெல்லாம் உண்மை. நமக்கு விசுவாசம் வேண்டும். ஆகையால் பூர்வகர்மாக்கள், கர்ம பலன் மலை போன்று இருந்தாலும் ஞானமடைந்தவுடன் நசித்துப் போகும். கர்மா இல்லாவிடில் ஜன்மம், மறுபிறப்பு இல்லை. பிறப்பு இறப்பு இல்லாவிட்டால் துக்கம் இல்லை. துக்கம் இல்லாத இடத்தில் ஆனந்தானுபவம் உண்டு. அது நமது நிஜ நிலை ஆகிறது. இதுதான் தீர்மானமான விஷயம்.

# சம்பந்தர் வாக்கு

(வித்துவான் ஆதி. பாலசுந்தரன்)

மதுரை மாநகருக்கு நான்மாடக்கூடல், திரு ஆலவாய், கடம்பவனம் ஆகிய வேறு பெயர்களும் உண்டு. இறைவனைப் போற்றிப் புகழ்ந்து பாடுவதையே கடமையாகக்கொண்டு, தலங்கள்தோறும் சென்று அடியார் பெருமக்களின் உள்ளத்திலே ஆன்ம ஒளி ஏற்றி வருகின்ற அடியவரான திருஞானசம்பந்தப் பெருமான் மதுரை மாநகருக்கு எழுந்தருளி வருகின்றார். சொக்கலிங்கப் பெருமானை வழிபாடு செய்கிறார். அப்போது பாடியருளிய திருப்பதிகம் இது.

"வேத வேள்வியை நிந்தனை செய்து உழல்
ஆதம் இல்லி அமணொடு தேரரை
வாதில் வென்று அழிக்கத் திருஉள்ளமே
பாதி மாது உடனுய பரமனே
ஞாலம் நின்புகழே வேண்டும்தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே."

— உமையம்மையை இடப்பாகத்தில் வைத்துள்ள பரமனே! திரு ஆலவாயில் எழுந்தருளியிருக்கின்ற எங்கள் ஆதிப் பிரானே! வேதத்தையும், வேள்வியையும் பழித்துப் பேசி அதனல் ஒருபயனும் அடையாமல் அலைந்து திரிகின்ற சமணர்களையும், பௌத்தர்களையும் நான் வாதம் செய்து வென்று அழிப்பதற்கு உன் திருஉள்ளம் சம்மதமா? எம்பெருமானே! இந்த உலகம் முழுவதும் உன்னுடைய புகழே பரவ வேண்டும் எனப் போற்றுகின்றார்.

"வேத வேள்விகளைப் பழித்துப் பேசி, எவ்விதப் பயனும் அடையாத சமணர்கள், பௌத்தர்கள்" (அமணர்-சமணர். தேரர்-பௌத்தர்.) என்கிறார் சம்பந்தர். வேத வேள்விகளைப் பழித்துப் பேசுதல், வைதிக சமயத்தை வெறுத்துப் பேசுதல் ஆகிய செயல்களைச் சமணர்களும், பௌத்தர்களும் செய்து வந்தனர்.

சம்பந்தப் பெருமான் மதுரை மாநகரத்திற்கு வருகின்ற சமயத்தில், பாண்டிய நாட்டில் எத்தகைய சூழ்நிலை நிலவியது என்பதை இங்கு நினைவு படுத்திக் கொள்ளுதல் நலம்.

"பாண்டி நாடே பழம்பதி" எனவும், "தென்னுடைய சிவன்" எனவும் மணிவாசகர் கூறுகிறார். பாண்டிய நாடு பழமையான நாடு; சிவன் தென்னட்டின் பழமையான கடவுள்; சைவ சமயமே தொன்று தொட்டுப் பாண்டிய நாட்டுமக்கள் மேற்கொண்டொழுகிய சமயம். இத்தகைய பெரும் சமயத்தின் மீது பற்றுக்கொண்டு வாழ்ந்த பாண்டிய நாட்டு மக்களின் மனத்தைப் படிப்படியாகச் சமணர்களும், பௌத்தர்களும் மாற்றிக்கொண்டிருந்தனர். தங்களுடைய நெறியை மக்கள் ஏற்றுக்கொள்ளுவதற்குப் பெரிதும் முயன்றனர்.

வேதங்களையும், ஆகமங்களையும் ஒப்புக்கொள்ளாதவர்கள் இறைவன் ஒருவன் இருக்கிறான் என்பதையும் ஒப்புக்கொள்ளாதவர்கள் ஆகிறார்கள். இவர்களுக்கு "நிரீசுரவாதிகள்" எனப்பெயர். சமணர்களுக்கும், பௌத்தர்களுக்கும் வேத நெறிகளிலும், ஆகம உண்மைகளிலும் நம்பிக்கை கிடையாது. எனவே, கடவுளையும் ஒப்புக்கொள்வதில்லை. இவர்களும் "நிரீசுரவாதிகள்" ஆவார்கள். ஆகவே, வேதத்தை அடிப்படையாகக்கொண்டு விளங்கும் வைதிக சமயமான சைவத்தை எதிர்த்தார்கள்.

இவர்கள் வேதங்களின் மீதும், வைதிக சமயத்தின் மீதும் வெறுப்புக்கொண்டு அவற்றைப் பழித்துப் பேசினார்கள். வேள்வி முறைகளை நிந்தனை செய்தனர்.

"பற்று ஆர்வம் நீக்கி நிருமலன் பாதம் சேரின்
அன்பு விற்று உண்டு போகிச் சிவகதி அடைய
[ லாமே."

— இவை சமண சமயக் காப்பியமான சீவக சிந்தாமணிப் பாடலின் அடிகள். உயிர் "சிவகதி" அடையும் என்று வைதிக சமயம் கூறும். அந்தப் பாஷையிலேயே சமணர்களும் "சிவகதி" என்று சொன்னார்கள்.

இவ்வாறு சமண வைதிக சமயங்களுக்கிடையே பூசல்கள் நிகழ்ந்துகொண்டிருந்த சமயத்தில் சம்பந்தர் மதுரை வந்து சேர்கிறார். வைதிக சமயத்தின் பழம்பெருமையை நிலைநாட்டுவதற்காக, சமண சமயத்தாருடன் வாதம் பண்ணவேண்டிய நிர்ப்பந்தம் சம்பந்தருக்கு ஏற்பட்டது. அவ்வாறு வாதம் புரிந்து

சைவத்தின் பெருமையை நிலைநிறுத்தவேண்டும் என்ற எண்ணமும் சிவபிரான் திருவருளினல்தான் சம்பந்தருக்கு ஏற்பட்டது.

சமண சமயத்தவரோடு வாதம் புரிந்து வென்று அழிப்பதற்குச் சிவபெருமானின் திருவுளச் சம்மதத்தை வேண்டுகிருர் சம்பந்தர்.

அவர் அவ்வாறு ஏன் வேண்டிக்கொள்ள வேண்டும்? "எல்லாச் சமயங்களிலும் சொல்லப்படுகின்ற கடவுள் சிவபெருமான் ஒருவனே ஆவான். அப்படியானல் சமணசமயத்திற்கும் அவனே தலைவன் ஆகிருன்; ஆகவே, சமண சமயத்தை, வாதம் செய்து வென்று ஏன் அழிக்க வேண்டும்?" என்று சம்பந்தர் எண்ணிக் கொண்டு இவ்வாறு வேண்டினர் என்று பெரியவர்கள் இதற்கு விளக்கம் சொல்லுகிருர்கள்.

அப்படியானல், சிவபெருமான் ஒருவனே கடவுள் என்பது உண்மையா? அவனே வெவ்வேறு வடிவங்களைக் கொண்டு, வெவ்வேறு மதங்களின் தலைவனுகக் காட்சி தருகிருன் என்பதும் உண்மையா? இவற்றிற்கு ஆதாரங்கள் உண்டா? என்பதையும் இங்கே நினைத்துப் பார்த்தல் மிகவும் பொருத்தமாகும்.

இந்து சமயத்துக்கு ஆதாரமான வேதங்களில் பல தெய்வ வழிபாடு சொல்லியிருப்பது போலவே, ஏக தெய்வ வழிபாடும் சொல்லப்படுகிறது.

"இருப்பது ஒரு தெய்வமே; அந்த ஒரு தெய்வந்தான் வெவ்வேறு வடிவங்களில் காட்சி தருகிறது" என்று வேதம் கூறுகிறது.

"யார் யார் எந்த எந்த வடிவமாக அக்கறையுடன் வழிபட விரும்புகிருர்களோ, அவரவர்க்கு அவரவருடைய சோர்வு இல்லாத அக்கறைக்கு அந்த அந்த வடிவமாக நானே தோன்றிக் காட்சி தருகிறேன்" என்பது பகவத்கீதை.

இவை இரண்டும் சம்ஸ்கிருத மொழியிலே சொல்லப்பட்டவை.

தமிழ்மொழியிலே தமிழ் அறிஞர்கள் இந்தக் கருத்தைக் கூறியிருக்கிருர்களா? கூறியிருக்கிருர்கள். சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழ்ச் சான்ருேர் தொல்காப்பியர் என்பவர். அவர் தம்முடைய தொல்காப்பியம் என்ற நூலில் தெய்வம் என்பதற்கு விளக்கம் கொடுக்கிருர். அதாவது, "தேவுக் கொளல் பொருட்டே" என்று சூத்திரம் அமைக்கிருர். தேவு என்ற சொல் அடி (Root) யிலிருந்துதான் தேவன், தேவர், தேவி என்ற சொற்கள் உண்டாயின. தேவு என்ற சொல் அடியிலிருந்துதான் தெய்வம் என்ற சொல்லும் தோன்றியது. தொல்காப்பியர் சொல்லுகின்ற தேவு என்ற சொல்தான் தெய்வம் என்று ஆயிற்று.

சரி, அப்படியானல், தெய்வம் என்ற சொல்லுக்கு நம் முன்னேர்கள் என்ன விளக்கம் சொல்லுகிருர்கள்?

"தெய்வம் என்பது கொள்ளுவதற்கு உரிய வடிவத்தை உடைய கடவுளைக் குறிக்கும்" என்கிருர்கள்.

அதாவது, எங்கும் நிறைந்து விளங்கும் கடவுளை யார் யார் எந்த எந்த வடிவத்தில் காண விரும்புகின்ருர்களோ அந்த அந்த வடிவத்தில் காண்பதற்குக் காட்சி தருவான்.

"ஒரு தெய்வந்தான் பல்வேறு வடிவங்களில் காட்சியளிக்கிறது" என்று வேதம் சொல்லுகின்ற கருத்தையும், "அவரவர் நினைக்கின்ற வடிவங்களில் நானே காட்சி தருகிறேன்" என்று பகவத்கீதை சொல்லுகின்ற கருத்தையும், "தேவுக் கொளல் பொருட்டே" என்று கூறுவதன் மூலம் தொல்காப்பியனுர் விளங்க வைத்திருக்கின்ற கருத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள். நம்மையறியாமலே ஒரு மகிழ்ச்சி ஏற்படுகிறது.

திசைகளில் பேதம் இல்லை என்பது புலனுவதோடு, உண்மையை எடுத்து மொழிவதில் சான்ருேர்களிடையே ஒருமித்த கருத்தே நிலவியது என்பதும்புலனுகிறது. மூலப்பொருளைச் சிவன் என்றும், திருமால் என்றும், பிரம்மன் என்றும், சக்தி என்றும் இன்னும் இவை போன்ற பெயர்களைக் கொண்டு அந்தந்த மதத்தினர் அழைக்கின்றனர். சைவர்கள் மூலப் பொருளைச் சிவன் என்று போற்றுகின்றனர்.

"எல்லாத் தேவதைகளையும் வழிபடுவதை விட்டுப் பரமேச்வரன் ஒருவனே வணங்கத் தக்க—வழிபடத்தக்க—தெய்வம்" என அதர் வசிகை உபநிடதம் கூறுகிறது.

"மனமானது பரமேச்வரனது திருவடித் தாமரைகளை அடைந்து நிலைத்து நிற்பதுதான் பக்தி என்று சொல்லப்படும்" என்று சிவா

னந்தலஹரியில் ஆதிசங்கரர் கூறுகிருர்.

"ஏக ஏவ ருத்ரோ ந த்வீதியாய தஸ்தே" என்கிறது வேதம். இவ்விளக்கங்கள் எல்லாம் மூலப்பொருளுக்கு உரியவை. இங்ஙனம் மூலப் பொருளேச் சிவனுக வைத்துச் சங்க காலத்தில் வாழ்ந்த தமிழ்ச் சான்ருேர்கள் பாடியிருக்கிருர் களா? ஆம். தமிழ்ச் சான்ருேர்களும் அவ் வாறே மூலப்பொருளேச் சிவனுகப் பாடியிருக் கிருர்கள்.

"நீல மணிமிடற்று **ஒருவன்**" என்று புற நானூறு (பா-91) கூறுகிறது. நீல நிறம் பொருந்திய கழுத்தை உடைய சிவபெருமான் நீலகண்டன். ஒருவன் என்ற சொல்லுக்குத் தனக்கு நிகர் இல்லாத ஒப்பற்ற தலைவன் என்பது பொருள்.

"நீள் நிமிர்சடை முது **முதல்வன்**"—நீண்ட சடைமுடியை உடைய ஒப்பற்ற இறைவன்—புறநானூறு (பா-166) கூறுகிறது.

"நீலமேனி வால் இழை பாகத்து **ஒருவன்**" —நீலநிறம் பொருந்திய உமாதேவியை இடப் பாகத்திலே உடைய ஒப்பற்ற சிவன் என்று அகநானூறு (கடவுள் வாழ்த்து) கூறுகிறது.

சிவபெருமானே எல்லா உயிர்களேயும் காப் பாற்றுவதற்குப் பாதுகாப்பாளனுய் அமைந் தவன் என்னும் கருத்தை, "எல்லா உயிர்க்கும் **ஏமம் ஆகிய** நீர் அறவு அறியாக் கரகத்துத் தாழ்சடை பொலிந்த அருந்தவத்தோன்" என்ற புறநானூற்றுப் (கடவுள் வாழ்த்து) பாடலால் அறியலாம்.

இங்கே எடுத்துக்காட்டப்பட்ட உதாரணங் களில் இருந்து, வேதங்களிலே சொல்லப்படு கின்ற "ஒரு தெய்வ வணக்கம்" பற்றிய கருத் துக்களும், மூலப்பொருளேச் சிவனுகப்போற்றப் பட்டுள்ள கருத்துக்களும் சங்கத் தமிழ்ச் சான் ருேர்களின் சிந்தனைகளிலும் நிரம்பியிருந்தது வெளியாகிறது.

இங்ஙனமே ஒவ்வொரு தெய்வத்துக்கும் உரிய பெருமைகளே அந்தந்தச் சமயத்தினர் விரிவாக எடுத்துரைப்பதை அந்தந்தச் சமய நூல்களேப் படித்துத் தெரிந்து கொள்ளலாம். எல்லாத் தெய்வங்களும் மூலப்பொருளின் பல்வேறு தோற்றங்களாகும். ஆனல் ஒவ் வொரு சமயத்தினரும் தங்கள் தெய்வமே மூலப் பொருள் என்று கூறும் கருத்தை அவர்கள் நூல்களில் காணலாம். "காக்கைக்குத் தன் குஞ்சு பொன்குஞ்சு" என்று கூறுவது போன்று ஒவ்வொரு மதத்தினரும் தங்கள் மதத்துக்குரிய தெய்வத்தை ஒப்பற்ற தெய்வ மாகக் கருதுவது அவர்களது இயல்பு. அதன் படி இங்கு சம்பந்தர் சிவபெருமானே ஒப்பற்ற தெய்வமாகக் கருதிய கருத்துக்குப் பல நூல் களிலிருந்து ஆதாரங்கள் காட்டப்பட்டன.

இறைவனே நோக்கி, "சமண சமயத்தை வாதில் வென்று அழிப்பதற்கு உனக்குத் திரு உளச்சம்மதமா?" என்று சம்பந்தர் கேட்கிருர்.

சிவபெருமானுக்குக் கோபம் வந்துதான், சமண சமயத்தை வாதில் வென்று அழிக்கத் திருவுள்ளம் சம்மதிக்கிருரா என்ற ஐயப்பாடும் சம்பந்தருக்கு ஏற்பட்டதாகக் கருதலாம்.

சிவபெருமான் உருத்திரன், மகாகோபக் காரன். பொறுக்க முடியாத தீமைகளேக் கண்டால் சினம்கொண்டு அழிப்பான்.

சமணர் செய்யும் சிறுமைகண்டு சிவபெரு மான் சினம்கொண்டிருப்பாரோ என்று சம்பந் தர் கருதியிருக்கக் கூடும். அல்லது சமணர் களின் தகாத செயல்களே அறிந்து சம்பந்தருக் குக் கோபம் வந்திருக்குமா? அப்படியும் இருக் கலாம். ஏன்?, சான்ருேர்கள், தங்களுடைய கண்ணுக்கு எதிரே நடக்கக்கூடிய தீமையைக் கண்டு பொறுத்துக் கொண்டிருக்கமாட்டார் கள். தக்கநடவடிக்கை யெடுத்துத் தீமை யைக் களேயவே சான்ருேர்கள் முற்படுவர்.

எனவே, சிறுமையான செயல்களேக் கண்டு பொங்கும் சினம் காரணமாக, "வாதில் வென்று அழிக்கத் திரு உள்ளமே" என்று சம்பந்தர் வேண்டிக் கொள்ளுவதாகவும் கூற லாம்.

"ஞாலம் நின்புகழே மிக வேண்டும்"—இவ்வுலகம் முழுவதும் உனது பெருமையே பரவ வேண்டும் என்று தமது விருப்பத்தை ஞானசம்பந்தர் கூறுகிருர். சிவம் என்ற சொல்லுக்கு ஒளி என்று பொருள். ஒளி உலகம் முழுவதும் பரவியிருக்கத்தானே செய் யும். மேலும், உலகம் முழுவதும் சிவ வழி பாடே பரவியிருந்தது என்பதற்கான சில சான்றுகள் கிடைத்துள்ளன.

அமெரிக்காவில் கொலறடோ ஆற்றின் கரை யில் அநேக கோவில்களேயும், சிவலிங்கங்களே

யும் அமெரிக்கத் தொல் பொருள் ஆய்வுத் துறையினர் கண்டறிந்துள்ளனர். [சிவன் ந. சி. கந்தையா.]

"ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் நடனத்தைக் காட்டுகின்ற படம் ஒன்றின் கீழே 'சிவ நடனம்' — Siva Dance – என்று எழுதப்பட்டுள்ளது; நடன வேடம் புனைந்திருப்பவரின் நெற்றியில் மூன்றாவது கண் தீட்டப்பட்டுள்ளது. (Native Tribes of Central Australia by Spencer and Grillen.)

இச்சான்றுகளில் இருந்து உலகம் முழுவதுமே ஒரு காலத்தில் இந்து சமயம் வியாபித்து நின்றதை அறியலாம். "ஞாலம் நின் புகழே மிக வேண்டும்" என்று சம்பந்தர் கூறுவதையும் நம்மால் விளங்கிக்கொள்ளமுடிகிறது.

சமண சமயத்தை வாதில் வெல்லுதல் போன்ற உலகக் கிருத்தியங்களில் சம்பந்தர் ஏன் ஈடுபட வேண்டும்? என்ற எண்ணம் நமக்கு ஏற்படக்கூடும்.

"ஒரு கையைக் கொண்டு உலகக் கிருத்தியங்களைச் செய்யுங்கள். அடுத்த கையில் இறைவனைப் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள். உலகக்கிருத்தியங்கள் முற்றுப்பெற்றன பிறகு இருகரங்களையும் கொண்டு இறைவனைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கலாம்" என்ற ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருள் வாக்கே இதற்கு ஏற்ற விடையாகும்.

"நீற்று மேனியர் ஆயினர் மேலுற்ற
காற்றுக் கொள்ளவும் நில்லா அமணரைத்
தேற்றி வாதுசெயத் திரு உள்ளமே ...".

—திருநீறு பூசிய சைவர்கள் மீது பட்டு வீசும் காற்றடிக்கும் இடத்திலும் கூட நில்லாத சமணர்கள்...... என்கிறார் சம்பந்தர். சைவத்தின்மீதும், சைவர்களின்மீதும் சமணர்களுக்கு அத்தகைய வெறுப்பு உணர்ச்சி இருந்து வந்தது.

சமணர்களிடையே, "கண்டு முட்டு, கேட்டு முட்டு" என்ற வாசகம் நிலவி வந்தது. அதாவது, சமணர்கள் சைவர்களையோ வைணவர்களையோ தங்களுடைய கண்ணால் பார்த்து விட்டால் போதும்; பார்க்கத் தகாத ஒன்றைப் பார்த்து விட்டதாக நினைத்துக் கொண்டு, பார்த்த பாவத்துக்குப் பிராயச் சித்தமாகத் தங்கள் தலையைச் சுவரில் கொண்டு போய் மோதிக் கொள்ளுவார்கள். கண்ட உடனே சுவரில் முட்டிக்கொள்ளுவதால் 'கண்டு முட்டு' என்றனர். சைவம், வைணவம் இவற்றின் பெருமையினைக் காதால் கேட்டு விட்டால் கூட போதும்; சுவரிலே முட்டிக் கொள்ளுவார்கள். இதைக் 'கேட்டு முட்டு' என்பார்கள்.

சமயங்களுக்கு இடையில் எவ்வித வேறுபாடுகளும் இல்லை. செல்லக்கூடிய நெறி வேறுபட்டதாக இருந்தாலும், அவற்றின் குறிக்கோள் ஒன்றேயாகும். இருந்தாலும், சமயப் பூசல்கள் தவிர்க்க முடியாதவை ஆகிவிட்டன.

எவ்வளவுதான் பூசல் இந்த இருசமயங்களுக்குள்ளே (சமணம்–சைவம்) இருந்தாலும் அடிப்படைக் குறிக்கோள் ஒன்றாக இருப்பதால், காலப்போக்கில் பூசல்களை மறந்தனர். ஒருவர் கருத்தை மற்றவர்களும் ஏற்றுக்கொள்ளத் தொடங்கினர்.

சைவ சமயத்தவர் சிவராத்திரி கொண்டாடுகிறார்கள். அது போலச் சமணர்களும் சிவராத்திரி கொண்டாடுகிறார்கள். ஒரே மாதம், ஒரே பட்சம், ஒரே திதி, ஒரே நட்சத்திரத்தில் இரண்டு சிவராத்திரிகளும் வருகின்றன; ஆனால் சைவர்கள் சிவனை வணங்குகிறார்கள். சமணர்கள் ஆதிபகவானாகிய ரிஷப தேவரை வணங்குகிறார்கள்.

வீடுபேறு அடைவதைச் சைவசமயம் சிவகதி என்கிறது. மோட்சமாகிய வீட்டிற்குச் சிவகதி என்றும், சிவபுரி என்றும், அருகக் கடவுளுக்குச் சிவகதி நாயகன், சிவன் என்றும் பெயர்கள் கூறப்படுவதைச் சமண நூல்களிலே காணலாம். இருவருமே திருக்கயிலாய மலையைப் போற்றுகிறார்கள். சிவனுக்கு ரிஷபம் வாகனமாய் அமைந்தது போல, அருகக் கடவுளுக்கும் ரிஷபம் வாகனமாய் அமைந்துள்ளது. அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாற்றைக் கூறும் சைவ நூல் பெரியபுராணம். அறுபத்து மூன்று சமண அடியார்களின் வரலாற்றைக் கூறுவது ஸ்ரீ புராணம்.

இவ்வாறு இன்னும் பல ஒற்றுமைகள் சமண சைவ சமயங்களுக்கு இடையே அமைந்துள்ளன. இவ்வொற்றுமைகளைக் கருத்தில் வைத்து சமயங்களுக்கிடையிலுள்ள பூசல்களை ஒழித்து அனைவரும் இறைவன் குழந்தைகள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்வார்களாக.

# ஸத் ஸம்பாஷணை

**கேள்வி: (146) *பரபிரம்மத்துக்கும், நாம் வழிபடுகிற தெய்வங்களுக்கும் உள்ள தொடர்பு யாது? தெய்வங்களுக்கு அமைந்துள்ள வாகனங்களைப் பற்றிய தத்துவம் ஏதாவது உளதா?***

வஸ்து ஒன்று. அது நிர்குணபிரம்மம் எனவும், சகுணபிரம்மம் எனவும் கூறப் பெறுகிறது. முக்குணங்களைத் தாண்டியுள்ள நிலை நிர்குணபிரம்மம் எனப்படுகிறது. முக்குணங்களோடு சேர்ந்துள்ள நிலை சகுணபிரம்மம் எனப்படுகிறது. ஒரே வஸ்து ஏககாலத்தில் நிர்க்குணபிரம்மமாகவும், சகுண பிரம்மமாகவும் இலங்குகிறது. ஓர் உபமானத்தைக்கொண்டு பரமஹம்சதேவர் இதை விளக்குகிறார். கடலின் அசைவற்ற அடிப்பகுதி நிர்குண பிரம்மம்; அலைவீசி விளையாடிக்கொண்டிருக்கிற மேல்பரப்பு சகுணபிரம்மம். விபூதிகள் அல்லது போற்றுதற்குரிய மகிமைகளனைத்தும் சகுண பிரம்மத்துக்குரியவைகள்.

சகுணபிரம்மத்தின் வெவ்வேறு அம்சங்களாக நாம் வழிபடும் தெய்வங்கள் அமைந்திருக்கிறார்கள். சைவ சமயத்துக்கு மூலப்பொருளாயிருக்கும் சிவமும், வைஷ்ணவ சமயத்துக்கு மூலப்பொருளாயிருக்கும் விஷ்ணுவும் சாக்த மதம் போற்றுகிற சக்தியும், காணபத்தியம் போற்றுகிற கணபதியும், கௌமாரம் போற்றுகிற குமரக்கடவுளும், சௌரமதம் போற்றுகிற சூரிய நாராயணனும் சகுணபிரம்மத்தின் வெவ்வேறு சொரூபங்களாம்.

சிவனாருக்கு வாகனமாயிருப்பது காளை. அம்பிகை அல்லது சக்திக்கு வாகனமாயிருப்பது சிம்மம். விஷ்ணுவுக்கு வாகனமாயிருப்பது கருடன். கணபதிக்கு வாகனமாயிருப்பது எலி. குமரனுக்கு வாகனமாயிருப்பது மயில். சூரியநாராயணனுக்கு வாகன்மாயிருப்பது பச்சைநிறமுடைய ஏழு குதிரைகள். இப்படிப் பலப்பல வாகனங்கள் அமைந்திருப்பதில் கோட்பாடு ஒன்று உண்டு. உயிர்களனைத்தின் உள்ளத்திலும் தெய்வம் வீற்றிருக்கிறார். மக்கள் உள்ளத்தில் மட்டும் அவர் இலங்குகிறார் என்று நாம் எண்ணலாகாது. உயிர்கள் அனைத்திடத்தும் அவர் வீற்றிருக்கிறார் என்பதை விளக்குதற்குப் பறவைகளும், விலங்குகளும் வாகனங்களாக அமைக்கப் பெற்றிருக்கின்றன. தத்துவத்தை அனுசரித்து இந்த வாகனங்களைத் தீர்க்கதரிசிகள் அமைத்துள்ளார்கள்.

அம்பிகைக்குச் சிம்மம் வாகனமாக அமைந்திருப்பதின் வாயிலாக அவள் பேராற்றல் படைத்தவள் என்னும் கோட்பாடு குறிப்பிடப்படுகிறது. சிவனார் காளை வாகனத்தை உடைத்திருப்பதின் வாயிலாகப் பொறுமையுடன் நெடிது உழைப்பவர்கள் தெய்வத்தை அடையத் தகுதி உடையவர்கள் ஆகிறார்கள் என்னும் கோட்பாடு அடங்கியிருக்கிறது. யானை வடிவினனாகிய கணபதிக்குச் சிறிய எலி வாகனமாய் அமைந்திருப்பதில் கோட்பாடு ஒன்று உள்ளது. பஞ்ச பூதங்களாலாகிய சரீரத்தில் பெரியவை, சிறியவை என்னும் பாகுபாடு இருக்கிறது. எடையில் மேலானது கீழானது என்னும் வேற்றுமையும் இருக்கிறது. ஆனால் ஆத்மாவோ பெரியதுமன்று; சிறியதுமன்று. அது பஞ்ச பூதங்களுக்கு அப்பாற்பட்டதால் அதற்கு எடை கிடையாது. எறும்பின் உள்ளத்தில் வீற்றிருப்பதும், யானையின் இருதயத்தில் வீற்றிருப்பதும் ஒரே பரமாத்மா. அது குணம் குறிகளுக்கு அப்பாற்பட்டது. முருகன் என்னும் சொல் அழகன் எனப் பொருள்படுகிறது. குழந்தையினிடத்துத் தெய்விக அழகும் உடலழகும் சேர்ந்து அமைந்திருக்கின்றன. அழகுக்கு அறிகுறியாகக் குமரன் மயில் வாகனனாக இலங்குகிறான். கருடன் வானத்தில் உயரப் பறக்கிறது. அதற்குப் பின்னணியாக இருப்பது நீலநிறமான வெட்டவெளி. அகண்டாகாரத்தில் விரிந்தோடுகிற வெட்டவெளியும் பரந்த கடலும் நீலநிறம் படைத்தவைகளாகத் தென்படுகின்றன. விஷ்ணு என்னும் சொல் எங்கும் நிறை பொருள் எனப்பொருள்படுகிறது. எங்கும் நிறைபொருள் நீலநிறம்எடுக்கிறது. மஹாவிஷ்ணுவும் நீலநிறம் உடையவராக இலங்குகின்றார். வெட்டவெளியின் நீலநிறத்தைத் தாங்கிக் கொண்டு பறப்பதுபோன்று கருடன் தென்படுகிறது. ஆதலால் அது அவருக்கு வாகனமாக

அமைக்கப்பட்டிருக்கிறது. சூரிய நாராயணனுடைய பச்சைநிறம் படைத்துள்ள ஏழு குதிரைகள் செழுமை வாய்க்கப் பெற்றிருக்கிற ஏழு நிறங்களுக்குச் சின்னங்களாயிருக்கின்றன. சூரிய நாராயணனுடைய வெளிச்சம் ஏழு நிறங்களாக வடிவெடுக்க வல்லது. அக் கோட்பாடு அவருடைய வாகனங்களில் அமைந்திருக்கிறது.

**கேள்வி: (147) மனிதன் ஏக காலத்தில் தன் செயல்களுக்குக் கர்த்தாவாகவும் சாட்சியாகவும் இருக்க முடியுமா?**

ஜீவாத்மன் கர்மசொருபம். தான் செய்கின்ற செயல்களுக்குத் தன்னைக் கர்த்தாவாக எண்ணுகின்றவன் ஜீவாத்மா. ஆசை வடிவினனாக ஜீவாத்மன் இருக்கின்றான். தன்னுடைய ஆசைகளை நிறைவேற்றுவதற்கு அவன் எண்ணிறந்த பிறவிகளை எடுக்கின்றான். அந்தந்த ஆசைக்கேற்ற சரீரங்களையும் அவன் எடுத்துக் கொள்ளுகின்றான். ஸ்தாவரமாயிருக்கிற ஜீவன் அதற்கேற்ற உடலை மரம், செடி, கொடிகளாக எடுக்கிறது. அது ஜங்கமமாகப் பரிணமிக்கிற பொழுது புழு, பூச்சி போன்ற வடிவங்களை எடுக்கிறது. ஆசையில் இன்னும் மேலே போகின்ற பொழுது பறவைகளின் வடிவங்களை அது எடுக்கிறது. அதற்கு அடுத்தபடியாக அது விலங்குகளின் வடிவங்களை எடுத்துக்கொள்ளுகிறது. கடைசியாக அது மானுட நிலையை எட்டுகிறது. உயிர் வகைகளுள் மனிதனுக்குத்தான் ஆசைகள் அதிகம். அதற்கேற்றவாறு அவனுடைய பிறவிகளும் பெருகிக் கொண்டே போகின்றன. பல பிறவிகளில் இன்ப துன்பங்களை அனுபவித்தான பிறகு பிரபஞ்ச வாழ்க்கையில் அவனுக்கு சலிப்புத்தட்டுகிறது. பிரபஞ்ச வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட நிலை ஒன்று இருக்குமாகில் அதை எட்டுதற்கு அவன் எண்ணம் கொள்ளுகிறான். அப்பொழுது அவன் யோகசாதனத்தைக் கையாளத் தகுதியுடையவனாகின்றான்.

யோகசாதனமானது கர்மயோகமாக வடிவெடுக்கிறது. ஜீவாத்மன் தனக்கென செய்யும் செயல்களை ஈசனுக்குரியவைகள் எனக் கருதி தனது மனப்பான்மையை மாற்றிக் கொள்ள வேண்டும். ஈசனுக்காகப் பணிவிடை பண்ணுகிறவனுக்குத் தன்னைக் கர்த்தா என்று எண்ணும் எண்ணம் மறைந்துபட்டுப் போகிறது. செயல் நிகழுதற்கிடையில் அதற்குத் தான் கர்த்தா என்கின்ற எண்ணம் இந்த மனநிலையின் விளைவாகப் படிப்படியாக அடிபட்டுப் போகிறது. ஈசனுடைய கிருத்தியம் ஈசனுடைய அருளால் ஈசனுடைய கருவிகளால் நிறைவேற்றப்படுகின்றன எனக் கருதுகிறவன் தன் செயலுக்குத் தானே சாட்சியாகின்றான். ஈசனுடைய கருவியாகத் தன்னைக் கருதுவதால் செயலுக்குத் தான் கர்த்தா அல்ல என்கின்ற எண்ணமும் செயலை ரசிக்கிற சாட்சியின் நிலையும் ஏககாலத்தில் நிகழ்கின்றன.

உலகக்கிருத்தியங்கள் பலவற்றில் மனிதன் தன்னையறியாது இந்தப்பெரிய நிலையை அடையப்பெறுகிறான். சைக்கிள் வண்டி ஓட்டிப் பழகுகின்றவன் முதலில் அச்செயலுக்குத் தன்னைக் கர்த்தாவாக உணருகிறான். நன்றாகப் பயின்றான பிறகு அச்செயல் தானாக நிகழுகிறது. பாதையில் வண்டிகளைச் செலுத்துகிற சட்டதிட்டங்களும் நன்கு அனுஷ்டிக்கப் படுகின்றன. அச்செயல்களுக்கு அவன் தானே சாட்சியாக இருந்துகொண்டு ரசிக்கிறான். இப்பரிபாகம் இன்னிசைக் கருவிகள் பயிலுகிறவர்களுக்கும் நாளடைவில் வந்து அமைகிறது. திறமை வாய்ந்த மேடைப் பேச்சாளன் முதலில் இன்னின்ன விஷயங்களை இன்னின்ன பாங்கில் எடுத்து விளக்கவேண்டும் எனத் திட்டமிட்டுப் பயிலுகின்றான். அப்படிப் பயிலுகின்றபொழுது தன்னுடைய பேச்சுக்கு அவன் கர்த்தாவாக இருக்கிறான். பேச்சுத்திறமை மேன்மையடையும்பொழுது நல்ல பேச்சுக்கள் பேசுபவனுடைய முயற்சியின்றியே வந்தமைகின்றன. தன் மூலம் நிகழுகிற நல்ல பேச்சுக்களுக்குத் தானே சாட்சியாயிருந்து பிறகு அவைகளை ரசிக்கவும் செய்கிறான் ஆதலால் பயிற்சியின் விளைவாகவும் கர்மயோக பரிபாகத்தின் விளைவாகவும் செயல்களுக்குரிய கர்த்ருத்வம் மறைந்து பட்டுப்போகிறது. பேசுபவன் கேட்பவனுடைய நிலையில் தன்னை வைத்துக்கொண்டு பேச்சை ரசிப்பதும் சாத்தியமாகிறது. இங்ஙனம் கர்மயோகி தன் செயலுக்குத் தானே சாட்சியாக அமைகிறான்.

# ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-106

*639.* अवरदा அவரதா — அரக்கர்களைக் கண்டிக்கிறவள் என்பது இதன் பொருள்.

சதாச்சாரம் படைத்திருக்கிறவர்கள் தேவர்கள் எனவும், சான்றோர்கள் எனவும், நல்லார்கள் எனவும் கருதப்படுகின்றனர். அதற்கு நேர்மாறாக இருப்பவர்கள் அசுரர்கள் எனவும், அரக்கர்கள் எனவும், புல்லியர்கள் எனவும், நீதி வழுவியவர்கள் எனவும் கருதப்படுகின்றனர். மக்களால் அமைக்கப்பட்டிருக்கிற நீதிகளை மீறி நடப்பது சாத்தியம். ஆனால் தெய்வாதீனமாக அமைந்துள்ள நீதிகளை மீறி நடக்க யாருக்குமே இயலாது. அப்படி மீறி நடக்கிறவர்களைக் கண்டுபிடிப்பது எங்ஙனம் என்பது கேள்வி. யாரெல்லாம் எக்காரணத்தை முன்னிட்டாவது அம்பிகையின் நியமனங்களை மீறி நடக்கின்றார்களோ அவர்களுக்கெல்லாம் துக்கம் வாய்க்கிறது. அப்படி வாய்க்கின்ற துக்கமே தண்டனை எனக் கருதப்படுகிறது. தண்டனைக்குச் சின்னமாக அம்பிகையின் ஒரு சொரூபமாகிய காளிகாதேவி இடக்கரத்தில் ஓங்கிய வாளைப் பிடித்திருக்கின்றாள். நெறி பிறழ்பவர்களெல்லாம் தண்டனைக்கு உள்ளாகிறார்கள் என்பதற்குச் சின்னமாக அந்த வாள் அமைந்திருக்கிறது. சில வேளைகளில் சான்றோர்களுக்கும் நல்லவர்களுக்கும் துக்கம் வருகிறது. இந்தத் துக்கம் எனக்கு வருவானேன் என ஆராய்ச்சி செய்து பார்த்தால் அதற்கு விடை கிடைக்கும். இதற்கு நல்லதொரு சான்று அமைந்திருக்கிறது. தசரத ராமனாகிய புருஷோத்தமன்வனவாசத்தைத் துக்கமாகக் கருதவில்லை. அவனுடைய வாழ்க்கையில் ஒரே தடவைதான் அவன் துக்கத்துக்கு ஆளானான். சீதையை இழந்த பிறகு அவளை மீண்டும் பெறும்வரையில் அவன் பெரிதும் துயரப்பட்டான். லட்சுமணன், சுக்ரீவன் ஆகியவர்கள் அவனுக்கு ஆறுதல் சொல்ல வேண்டியதாயிற்று. சீதையை இழப்பதற்கும் அதை முன்னிட்டு ராமன் துயரப்படுதற்கும் முகாமையாக இருந்தது யாது? சான்றோர்கள் பிரபஞ்சத்திலுள்ள பொருள்களனைத்துக்கும் சாட்சியாய் இருந்துகொண்டு அவைகளை அனுபவிக்கலாம். 'தேன த்யக்தேன புஞ்ஜீத' என்பது உபநிஷத வாக்கியம். உரிமை பாராட்டாதிருந்துகொண்டு உலகப் பொருள்களை அனுபவிப்பாயாக என்பது கோட்பாடு. அந்தக் கோட்பாட்டுக்குச் சிறிதுமாறாக மாரீசமானைக் கைப்பற்ற சீதையும் அவள் சொற்படி ராமனும் தீர்மானித்தார்கள். அவர்களுக்கு எச்சரிக்கை லட்சுமணனிடமிருந்து வந்தது. அவனுடைய எச்சரிக்கையைக்கணவனும்மனைவியும்பொருள்படுத்தவில்லை. மானைக் கைப்பற்றத் தீர்மானித்தார்கள். அதன் விளைவாக வந்தது விபத்து. சான்றோர்கள் எல்லார்க்கும் இதில் பாடம் இருக்கிறது. உலகப் பொருள் எதையும் உரிமை பாராட்டாதே. சாட்சியாயிருந்து கொண்டு அதன் மகிமையை ரசிப்பதின் வாயிலாக அதை அனுபவி. உன்னுடையது அல்லாததை உன்னுடையதாக்க முயன்றால் உனக்குக் கேடுவரும். இது இயற்கையின் நியதி. இயற்கைத் தாயாகிய அம்பிகையின் நியதி. தன்னுடையது அல்லாததைப் பலாத்காரமாகத் தன்னுடையது ஆக்குகிறவர்கள் அரக்கர்கள் அல்லது அசுரர்கள். அவர்களுக்குத் தண்டனைக்கு மேல் தண்டனை வருகிறது. தண்டனையைப் பொருள்படுத்தாது தன் உடைமை ஆக்குவது அசுர இயல்பு. அந்த இயல்பின் வேகத்துக்கு ஏற்ப தண்டனையும் வந்துகொண்டே இருக்கும். சான்றோர்களுக்குத் தாற்காலிகமாக அந்த இயல்பு சிறிது வந்து அமைவதுண்டு. அதன் விளைவாக அவர்களும் துக்கப்பட்டேஆகவேண்டும் என்னும் கோட்பாட்டைச் சீதாராமன் தன்னுடைய ஜீவிதத்தின் வாயிலாக விளக்குகிறான். யார் பிசகு செய்தாலும் அவர்கள் தண்டனையை விட்டுத் தப்பித்துக்கொள்ள முடியாது என்னும் கோட்பாட்டை இந்த நாமம் விளக்குகிறது.

*640.* वागधीश्वरी வாகதீச்வரீ — வாக்குகளுக்கெல்லாம் தலைவியாயிருக்கிறவள் என்பது இதன் பொருள்.

பேசும் திறமை மக்களுக்குச் சொந்தமானது. ஆனால் மக்கள் எல்லாரும் தெளிவாகப் பேசுவதில்லை. சொல்லைத் திரும்பத் திரும்பக் கேட்டு அதை உச்சரிக்கும் திறமை கிளிப்பிள்ளைக்கு வருகிறது. ஆயினும் அதனிடம் தெளிந்த

உச்சரிப்பு இல்லை என்பது வெளிப்படை. மக்கள் எல்லாரும் பேசுகின்றார்கள் எனினும் பேச்சுத் தெளிவு சிலர்க்கே அமைகின்றது. பேச்சுத் தெளிவு பண்பாட்டுக்கு அறிகுறி. சொல் சுவை, பொருள் சுவை ஆகிய இரு சுவைகளும் வாக்கில் அமைந்திருக்கவேண்டும். மக்களுள் இந்த இரண்டு விதப் பண்புக்கும் எடுத்துக் காட்டாயிருப்பவர் வாகீச்வரன் அல்லது சொல் வேந்தன் என்னும் பெயர் பெறுகிறார். அப்பர் சுவாமிகளிடம் இந்தத் தெய்விகப் பண்பு இனிது அமைந்திருந்தது. ஆதலால் அவர் திருநாவுக்கரசு என்னும் பெயர் பெற்றுள்ளார். தம்முடைய நாவுக்கு அவர் உத்தரவு போட்டார். பேசுவதென்றால் சிவனுடைய பெருமையைப் பேசு. இல்லையேல் பேச்சற்று இரு என்பது நாவுக்கு அவர் போட்ட உத்தரவு. அந்த உத்தரவுப்படி நாவும் நடந்து கொண்டது. சொல் சுவையும், பொருள் சுவையும் சேர்ந்து அமைந்திருப்பது அவரது தேவாரத்தில் வெளியாகிறது. வாகதீச்வரியாகிய அம்பிகையின் அருளால் அவருக்கு அது வாய்த்தது. சொல் சுவையும், பொருள் சுவையும் தன்னிடத்து அமைந்திருக்க வேண்டும் என்று ஆத்ம சாதகன் ஒருவன் அம்பிகையிடம் பிரார்த்திக்கலாம். அத்தகைய பிரார்த்தனை காமியப் பிரார்த்தனை ஆகாது. சொல் சுவையும், பொருள் சுவையும் சேர்ந்து அமையப் பெற்றிருப்பவர்கள் அத்திறமையை அம்பிகையின் வழிபாட்டுக்கென்றே பயன்படுத்தவேண்டும்.

*641.* **ध्यान गम्या** த்யான கம்யா — தியானத்தினால் அடையப்பெறுபவள் என்பது இதன் பொருள்.

அஷ்டாங்க யோகத்தில் தியானம் என்னும் பயிற்சி ஏழாவது இடம் பெறுகிறது. தியானத்திலேயே கண்ணும் கருத்துமாயிருப்பது தியான யோகம் என்னும் பெயர் பெறுகிறது. விரும்பிய பொருள் ஒன்றில் மனது முழுதும் செல்லுமாகில் அது தியானமாகிறது. நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்று இக்கோட்பாட்டை நன்கு விளக்குகிறது. அது வருமாறு :

ரிஷிகேசத்தில் கங்கைக் கரையோரத்தில் மாலை நேரத்தில் சாது ஒருவர் தியானத்தில் அமர்ந்தார். சந்தியா நேரம் இரவாக வடிவெடுத்தது. வடிவங்களைப் புலப்படுத்துதற்குக் கண்ணுக்குச் சிறிது சிரமம். அங்ஙனம் இருள் சூழ்ந்திருந்தது. நடந்து போன ஒருவன் தியானம் பண்ணிக்கொண்டிருந்த சாதுவின் மீது மோதியதைப் பொருள்படுத்தாது போனான். மன்னிப்புக் கேட்பது அல்லது உணர்வது அவனுடைய கடமையாயிருந்தது. சாதுவானவர் திடீரென்று எழுந்து நின்று 'தியானம் பண்ணிக்கொண்டிருந்த என்மீது ஏன் மோதினாய்?' என்று சீறினார். அதற்கு மற்றவன் பதில் விடுத்ததாவது: 'என் காதலியின் எண்ணத்தில் நான் மூழ்கியிருந்தேன். ஆதலால் தங்கள்மீது மோதியது என் கருத்தில் படவில்லை. தியானத்தில் மூழ்கியிருந்த தாங்கள் அதைப் பற்றி எண்ணுவானேன்? இந்நிகழ்ச்சியில் ஆழ்ந்த தியானம் எது? அரை குறை தியானம் எது என்பன வெளியாகின்றன. பரவஸ்துவைப்பற்றித் தியானம் பண்ணலாம். அல்லது உலகப்பொருளைப் பற்றித் தியானம் பண்ணலாம். மனம் குவிவதற்கேற்ப தியானம் தலைத்தரமாகிறது. பிறகு ஆத்ம சாதகன் பரம்பொருளையே குறித்துத் தியானம் பண்ணவேண்டும். விஷயாதிகளில் அவனுடைய மனது செல்லலாகாது.

மற்றொரு நிகழ்ச்சி. காசியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த அவதூதர் ஒருவர் அப் புண்ணிய க்ஷேத்திரத்துக்குப்படாதது எது என்று குளக்கரையில் மீன் பிடிப்பதற்குத்தூண்டில் போட்டு அதைப் பார்த்துக் கொண்டிருந்த செம்படவன் ஒருவனைக் கேட்டார். அவன் மீனைப்பிடித்தான பிறகு என்ன பகர்ந்தீர்கள் என்று கேட்டான். அவனுக்கு விடைகொடுத்து விட்டு அவதூதர் எண்ணலானார். நான் தியானத்தில் அமரும்பொழுது இந்தச் செம்படவன் செய்தது போன்று ஒருமை மனதாய் இருக்க வேண்டும்.

தியானம் வலுக்க வலுக்க ஆத்மசாதகனுக்கு உடல் உணர்வுபோய்விடுகிறது. எண்ணிய பொருள்மயமாய் அவன் உள்ளம் வடிவெடுக்கிறது. அம்பிகையைக் குறித்து இப்படித் தியானம் பண்ணுகிறவர்களுக்கு அவளுடைய அருள் வாய்க்கிறது என்னும் கோட்பாடு தியான கம்யா என்னும் நாமத்தில் அடங்கியிருக்கிறது. தியானம் முதிர்ந்தால் அது

சமாதியாக வடிவெடுக்கிறது. அங்ஙிலயில் ஆத்மசாதகன் தன்னுடைய ஜீவ வியக்தியைத் துடைத்துவிட்டுப் பரவஸ்துவில் ஒன்றுபடுகிறான்.

642. **अपरिच्छेद्या அபரிச்சேத்யா**— அளவில் அடங்காதவள் என்பது இதன்பொருள்.

எது கால, தேச, வர்த்தமானத்துக்கு உட்பட்டிருக்கிறதோ அது அளவில் அடங்குகிறது. பிரகிருதியானது கால, தேச, வர்த்தமானத்தில் அடங்கியிருக்கிறது. எது ஒருகாலத்தில் இருந்து மற்றொரு காலத்தில் இல்லாது போகிறதோ அது மெய்ப்பொருள் ஆகாது. பிரபஞ்சமானது சிருஷ்டியிலும், ஸ்திதியிலும் தோற்றத்தில் இருக்கிறது. சம்ஹாரம் அல்லது பிரளயத்தில் அது தோற்றத்தில் இல்லாது போகிறது. ஆகையால் அது மெய்ப்பொருள் ஆகாது. ஆனால் அம்பிகையோ சர்வகாலமும் தன்மயமாய் இருக்கிறாள். காலத்தில் அவள் கட்டுப்பட்டவள் ஆகாள். ஆதலால் அவளைக் காலத்தைக்கொண்டு அளக்க முடியாது. அவளுடைய சங்நிதான விசேஷத்தால் காலம் என்னும் அளவை தோற்றத்துக்கு வருகிறது, பிறகு மறைந்து பட்டுப் போகிறது. அடுத்தபடியாக எப்பொருள் ஓரிடத்தில் இருக்கவும், மற்றோரிடத்தில் இல்லாமலும் போகிறதோ அது இடம் என்னும் அளவைக்கு உட்பட்டதாகிறது. அம்பிகையைக் குறித்து அவள் இன்னிடத்தில் இருக்கிறாள் மற்று இன்னிடத்தில் இல்லை என்று பாகுபடுத்த முடியாது. இடம் என்னும் பாகுபாடு பிரகிருதிக்கு உரியது. பிரகிருதியில் அடங்கியிருப்பதை இன்னிடத்தில் இருக்கிறது என்று அறுதியிட்டுச் சொல்ல நமக்கு இயலுகிறது. அன்னை பராசக்தியானவள் இடத்தைத் தன்பால் தோன்றவும் அது அடிபட்டுப் போகவும் அனுமதி தருகிறாள். அதற்குச் சாட்சியாகவும் அவள் இலங்கிக் கொண்டிருக்கிறாள். ஆகையால் இடத்தில் அவள் கட்டுப்பட்டவள் ஆகமாட்டாள். இனி வர்த்தமானம் என்பது காரண காரியமாயுள்ள இயற்கையின் செயலாம். வானத்தில் இலங்குகின்ற வானவில்லானது ஒரு காரணத்தை முன்னிட்டுத் தோற்றத்துக்கு வருகிறது. காரணம் ஒடுங்குமிடத்துக் காரியமாகிய வானவில்லும் ஒடுங்கிப் போகிறது. அதே கோட்பாடு இப்பிரபஞ்சத்துக்கும் அதில் அடங்கியிருக்கிற பொருள்களுக்கும் உரியதாகிறது. ஜீவதத்துவமும் ஒரு காரணத்தை முன்னிட்டுத் தோற்றத்திலிருக்கிறது. அக்காரணம் அகலுங்கால் ஜீவ வியக்தியும் ஒடுங்குகிறது. ஜாக்ரத, சொப்பன அவஸ்தையில் ஜீவ வியக்தி வியவஹாரம் பண்ணுகிறது. சுஷுப்தியில் ஜீவ வியக்தி தோன்றுவதில்லை. ஆதலால் அது மெய்ப்பொருள் ஆகாது. அன்னை பராசக்தியோ வர்த்தமானம் எதிலும், நியதி எதிலும் அடங்கியவள் ஆகமாட்டாள். ஆதலால் அவளை வர்த்தமானத்தைக் கொண்டு அளக்க முடியாது. ஆகையால் அவள் அபரிச்சேத்யா என அழைக்கப்படுகிறாள்.

அம்பிகையின் சொரூபத்தை அறிந்து கொள்ளுதற்குப் பஞ்சேந்திரியங்கள் உதவமாட்டா. கண்கொண்டு பார்க்கிறோம். பார்க்கப்படுபவைகள் யாவும் பிரபஞ்ச சம்பந்தமானவைகள். நெடுந்தூரத்துக்கப்பாலிருக்கும் நட்சத்திரங்களை Telescope தூரதிருஷ்டி கண்ணாடியைக் கொண்டு ஆராய்ச்சி பண்ணுகிறோம். அந்த நட்சத்திரங்களும் பிரபஞ்சத்துக்குரியவைகள். பார்க்கமுடியாத நுண்ணிய பொருள்களை மைகிராஸ்கோப் நுண்பொருள் ஆராய்ச்சி கருவிகொண்டு ஆராய்கிறோம். அதுவும் பிரபஞ்சத்தைச் சார்ந்தது. அம்பிகையைக் காண்பதற்கு ஊனக்கண் உதவாது. சாதனத்தின் வாயிலாக ஞானக் கண்ணை வரவழைப்பது ஒன்றே அவளைக் காண்பதற்கு உற்ற உபாயமாகிறது. அம்பிகை நாத சொரூபிணி. ஆனால் நம்முடைய ஊனக்காதுகொண்டு இந்த நாதத்தைக் கேட்க முடியாது. ஒலிபெருக்கி, Stethoscope முதலிய கருவிகளைக்கொண்டு கேட்கிற ஓசைகளெல்லாம் பிரபஞ்சத்துக்குரியவைகள். அம்பிகையைக் குறித்துச் செய்கிற ஸ்தோத்ரங்கள், பகருகின்ற நாமங்கள் மூலமாக அவளைப் பற்றி உத்தேசமாக ஏதோ சில கருத்துக்களை நாம் பெற்றுவருகிறோம். ஆனால் அவள் நாதமயமாயிருப்பதை நம்மால் இந்தக் காதுகொண்டு கேட்கமுடியாது. பக்தியின் மூலமாகப் பண்பட்ட மனது அவள் நாத சொரூபம் என்பதை ஏகதேசம் கிரஹிக்கிறது. ஆக காதுக்கும் சாதாரண மனதுக்கும் எட்டாதவளாக இருப்பதால் அபரிச்சேத்யா எனப்படுகிறாள்.

# கண்டொன்று சொல்லேல்

(சுவாமி துருவானந்தர்)

பக்தர்களுக்குப் பெயர் போனது பாரத நாடு. இறைவனுடைய பக்தியில் அன்னவர்கள் ஆழ்ந்து சென்றதால் அவர்களை ஆழ்வார்கள் என்று உலகம் அழைக்கிறது. அத்தகைய பக்தர்கள் வரிசையில் என்னுடைய பெயரையும் அடியார்கள் சேர்த்துள்ளனர். மீரா என்ற பெயர் படைத்த அந்த அடியாள்தான் நான். சிறுமி மீராவாக இருந்த நான் எங்ஙனம் பிருந்தாவனக் கண்ணனோடு ஐக்கியமாகி பக்தை மீராவாக மாறினேன் என்பதை உங்களுக்குச் சொல்லுகிறேன்.

உதயபூர் என்ற ராஜ்யத்தைப் பூநாயகன் என்ற அரசன் ஆண்டுவந்தான். அவருக்கு வாழ்க்கைத்துணையாக வாய்த்தவர் சந்திரமுகி. இவர்கள் இருவரும் தெய்வபக்தி மிகுந்தவர்கள். நெடுநாட்கள் மகப்பேறின்றி இருந்தனர். பெரியோர்களின் அறவுரைப்படி விரதமும், தானதர்மங்களும், சீலமுள்ள வாழ்க்கையையும் என் பெற்றோர்கள் கடைப்பிடித்தனர். ஹரியின் நாமத்தைச் சதா ஜபித்துக்கொண்டும் குழந்தைக்காக நோன்பும் நோற்றனர். இறைவன் அருளால் நான் அவர்களுக்குப் பெண் குழந்தையாகப் பிறந்தேன். எனக்கு மீரா என்று பெயரிட்டுச் சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தனர். சிறுமியாக இருந்த என்மீது தெய்விக அழகு பொலிந்தது என்று என்மீது அனைவரும் அன்பு காட்டினர். இது போன்ற ஒரு குழந்தை நமக்குப் பிறக்கக்கூடாதா என்று ஒவ்வொரு பெற்றோரும் ஏங்கினர்கள். பொருள் ஒன்றைப் பெறுவதற்கு அதற்கு ஏற்ற விலை கொடுத்தாக வேண்டும். சான்றோர்கள் தமக்கு மக்களாகப் பிறக்க வேண்டும் என விரும்பும் ஒவ்வொரு ஆணும், பெண்ணும் அதற்கேற்ற நன் முயற்சியில் ஈடுபட்டாக வேண்டும். பகவானைக் குறித்துப் பிரார்த்தனை பண்ண வேண்டும். பிறருடைய கஷ்டத்தைக் கண்டு இரங்கி தன்னால் ஆன உதவி செய்ய வேண்டும். ஆக நல்ல குழந்தைகள் வேண்டுவோர் இத்தகைய உயர்ந்த தவத்தைச் செய்யத்தான் வேண்டும். இந்த உண்மைகள் தெரிந்திருந்தும் அவற்றைக் கடைப்பிடிக்க முடியாதவர்களைத் தான் உலகெங்கும் காணுகின்றோம். கல்கத்தாவில் ஒரு புவனேசுவரியும், போர்பந்தரில் ஒரு புத்லிபாயும் இது போன்ற இன்னும் சிலரும் அந்நன்னெறிகளைக் கடைப்பிடித்ததாலேயே விவேகானந்தர், காந்தி போன்ற மகான்கள் சமீபகாலத்தில் தோன்றினர்.

விளையாட்டு வினையாகும் என்ற பழமொழி ஒன்று உண்டு. சிறுமியாக இருந்த எனக்குத் தோழிகள் பலர் இருந்தனர். வாழ்க்கையில் விளையாட்டுப் பருவம் மறக்கமுடியாத பருவம். சிறுமிகள் ஒவ்வொருவரும் தமக்கு விருப்பமான விளையாட்டுகளை விளையாட விரும்புவார்கள். அந்த விளையாட்டுகளில் அவர்களுடைய மன இயல்பை ஓரளவு அறிந்து கொள்ளமுடியும். அவ்விளையாட்டுகளில் பெரும் பகுதி தாய், தந்தை, உற்றார் உறவினரைப் பார்த்து விளையாடும் குடும்ப விளையாட்டாகும். நானோ இவற்றில் கருத்தைச் செலுத்தாது கண்ணன் பொம்மையைக் கையில் வைத்து எனக்குத் தெரிந்த பாடலைப் பாடுவது, அவனுக்கு உணவு ஊட்டுவது, உறங்க வைப்பது இப்படியாக என்னுடைய விளையாட்டெல்லாம் பகவத் சிந்தனையாக உருமாறியது.

ஆண்டுகள் கடந்தன. மணப்பருவத்தை எய்தினேன். சுதந்தரமாக ஆடிப்பாடி அங்குமிங்கும் சென்று வந்த எனக்குப் புதிய ஆணை பிறந்தது. கன்னிமாடம் ஒன்றுதான் எனக்குக் கதியாக இருந்தது. வயது வந்த பெண் இனி சிறுமிபோல ஆடுவதும் பாடுவதும் கூடாது. அப்படிச் செய்தால் என்னை யாரும் மணந்து கொள்ள முன் வரமாட்டார்கள் என என் பெற்றோர் எனக்கு அறவுரை கூறினர். கூண்டில் அடைபட்ட பறவை போன்று தவித்தேன். இன்றிருந்து நாளை அழியப் போகும் சரீரம் படைத்த மனிதனை மணக்க நான் விரும்பவில்லை. ஆயர்பாடி அச்சுதனை நாடினேன். குன்றைக் குடையாகப் பிடித்துக் கோபாலர்களைக் காத்த கோவிந்தனை மணவாளனாகப் பெற விரும்பினேன். எனது மனநிலையை யாரே உணர வல்லவர்! விவாகத்தை விரும்பாத என்னை எல்லாரும் வெறுத்தனர்.

பக்தியாலும், பஜனையாலும் மூழ்கியிருந்த என்னை அந்தக் கிரிதாரி மேலும் சோதித்தான். பக்தியில் உருகி உருகி மேலான பிரேமை பக்தியை எட்டினேன். புறவுலகுக்குப் பைத்தியம் போன்ற நிலையைக் காட்டும் மனநிலை அது. ‘தவமிருந்து பெற்ற இவள் பைத்தியமாக மாறினளே’ எனக் கண்ணீர் விட்டனர் பெற்றோர். பக்தியில் மேலே செல்லக்கூடிய உன்னத நிலையை உணர்ந்துகொள்ள முடியாதிருந்த பாமர இதயம் படைத்திருந்த என் தந்தை நான் இன்னும் உயிரோடு இருந்தால் குல கௌரவம் நாசமாகும் என எண்ணி எனக்கு விஷம் கொடுத்துக் கொன்றுவிடத் தீர்மானித்தார். அன்னை தன் திருக்கரத்தால் எனக்கு விஷம் கொடுத்தாள். அதை என் நாயகன் கண்ணனுக்கு அர்ப்பணித்தேன். ஆலஹால விஷம் அமிர்தமாக எனக்குச்சுவைத்தது. உடல் உணர்வை மறந்து பாடி ஆடினேன். விஷம் என்னை ஒன்றும் செய்யாததைக் கண்ட பெற்றோரும் அரண்மனை வாசிகளும், வியப்பும் அச்சமும் கொண்டனர். பக்திமிருந்த என் பெற்றோர் பகவான் அருள் எனக்குப் பூரணமாக இருப்பதை அறிந்து, வியந்து என்னை என் போக்கில் விட்டு விட்டனர். மீண்டும்பகவானுடைய பக்தியால்பித்துப்பிடித்துப் போனேன். என்னுடைய பஜனையில் இந்து, முஸ்லிம் வேறுபாடு இன்றி அனைவரும் கலந்துகொண்டு அருள் பெற்றுச் சென்றனர். துஷ்டர்கள் சிலர் என்னைப்பற்றி இல்லாததும், பொல்லாததுமாகக் கூறி அவதூறு கிளப்பினர். உற்றார் உறவினர் என்னைக்கடிந்தனர். பெண்ணைப் பிறந்த நான் மண்ணைப் போகும் வரை எண்ணிறந்த துயரங்களை அடைய வேண்டுவது தானு? எனது பிறவியைக் குறித்து நானே சலித்துக்கொண்டேன். எனக்கு ஒரே துணையாக இருந்த கண்ணனைக் குறித்துக் கதறினேன். ‘ஹே பீதாம்பரதாரி! என்னை ஏன் ஒரு பெண்ணைப் படைத்தனை? பிறவியிலும் பெண்பிறவி இழிந்தது என்றல்லவ்வோ கீதையில் உரைத்தனை! இனியும் நெடுநாள் வாழ விரும்பவில்லை. அடைந்தால் உன்னை அடைவேன். இல்லையேல் உயிர் துறப்பேன்’ எனக் கண்ணீர் உகுத்துக் கதறினேன். எனது கண்ணீர் முத்து முத்தாக அவனுடைய திருவடியில் விழுந்து அதை நனைத்தது. அதில் அவனுடைய சியாமளவடிவம் சிரித்துப் பேசியதாவது: ‘மீரா! அழாதே. உன்னை ஆட்கொள்வதற்கே இத்தகைய சோதனைகள் மூலம் உன்னைப் பக்குவப்படுத்துகிறேன். பிறவியில் உயர்வு தாழ்வு பாராட்டுவதே தவறு. மங்கையாய்ப் பிறப்பதற்கும் மாதவம் செய்திடல் வேண்டுமம்மா. மனதைத் திடப்படுத்தி அஞ்சாமல் சாதனையில் ஈடுபடு. நீ இன்னும் சில கர்மங்களை முடிக்க வேண்டியுள்ளது. உன்னைத் தேடிவரும் வரனை ஏற்றுக்கொள். உரிய காலம் வரும். பொறுத்திரு.’’

இங்நிலையில் மேவார் நாட்டை ஆண்ட கும்பராணு என்ற அரசன் என்னை மணம் புரிய விரும்பி தூது அனுப்பினன். ஏற்கனவே இரு மனைவிகளையுடைய அவ்வரசன் பக்தனும், சிறந்த சங்கீதரசிகனுமாவான். பெற்றோர்க்கு அளவிலாத மகிழ்ச்சி. அரசகுடும்பங்களுக்கிடையே இம் மணவைபவம் சிறப்பாக நடைபெற்றது. பிறந்த வீட்டை விட்டு வந்த நான் புகுந்த வீட்டில் பதிவிரதா தர்மத்தை விடாது, மனைவி ஒருத்திக்குள்ள பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொண்டேன். பஜனை, வழிபாடு முதலியவைகளையும் விடாது நிகழ்த்தினேன். அரசனுக்கு என்மீது தனி அன்பு இருந்தது. மூத்த அரசியர் இருவர்க்கும் அது பிடிக்கவில்லை. இத்துடன் எனது கணவருடைய தங்கையும் தம்பியும் அவர்களுடன் சேர்ந்தார்கள். கைகேயிக்கு மந்தரை உபதேசித்தது போன்று அவர்கள் அவ்வரசியர் இருவருடன் சேர்ந்து கொண்டு புதிய வதந்திகளை ஜோடித்துப் பரப்பி வந்தனர். குழந்தை மனம்படைத்த நான் பொறுமையை அணிகலனைப் பெற்றேன். நிகழ்வது நிகழட்டும் என்று கண்ணனைப் பற்றிய சிந்தனையிலேயே இருந்து வந்தேன்.

பஜனை நாள்தோறும் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஒரு ஏகாதசியன்று பஜனை முடிய நள்ளிரவு ஆயிற்று. அனைவரும் பிரசாதம் பெற்றுச் சென்றுகொண்டிருந்தனர். துறவி வேடம் போட்டிருந்த இருவர் அங்கு வந்தனர். எல்லாரும் போன பிறகு என்னைச் சந்தித்துப் பேசிவிட்டுப் போகலாம் என இருந்தனர். எனது கானத்தின் இனிமையில்

சொக்கிப் போன இருவரும் ஒரு முத்து மாலையைப் பரிசளித்தனர். ஏற்க மறுத்த என்னிடம் பிருந்தாவனத்திலிருந்து தாங்கள் வருவதாகவும் கிருஷ்ணன் அம்மாலையை எனக்குக் கொடுத்துவிட்டுவரச்சொன்னதாகவும் கூறினர்கள். பிற ஆடவர்களிடம் முன் பின் பேசியறியாத நான் பிருந்தாவனக் கண்ணன் கொடுத்த மாலை எனக் கேட்டதுமே குழந்தைபோன்று வாங்கி அதனை என் கழுத்தில் அணிந்தேன். இதற்கிடையே வாயிலருகில் குதிரை ஒன்று கனைக்கும் சத்தம் கேட்டது. வந்தவர்கள் அவசர அவசரமாக அவ்விடமிருந்து நழுவ ஆரம்பித்தனர். அவர்கள் இருவரையும் ஒருவர் உளவு அறியவந்தது போன்ற நிலையும் அங்குத் தென்பட்டது. துறவிகள் இருவரும் புறப்பட்டதும் உளவு அறிய வந்தவனும்குதிரையில் தப்பி விட்டான். கண்ணனைப் பற்றியசிந்தனை வலுப்பெறவே பூஜை அறைக்குள் சென்று தாளிட்டு எனது நாயகன் கண்ணனுக்கு அமுது படைத்து விட்டு நானும் சிறிது அருந்தலாம் என எண்ணினேன். 'நாதா! எத்தனை நாட்கள் உன்னை விட்டுப் பிரிந்து வாழ்வது? என்னை ஏற்றுக்கொள்' என்று கூறிக் கண்ணனுக்கு அமுது படைக்கும் பொழுது கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது. என்றுமில்லாமல் இன்று திடீரென்று நள்ளிரவில் கதவு பலமாகத் தட்டப்பட்ட காரணத்தை அறியும் முன் அவரே கடும் சொல்லைச் சொல்லிக் கதவைத் தட்டினர். கதவைத் திறந்தேன். உருவிய வாளுடன் பற்களை நற நற வென்று கடித்துக் கொண்டு கோபக் கனலுடன் பார்த்தார். காரணம் அறியாது நான் திகைத்தேன். 'இப்போது நீ யாருடன் பேசிக் கொண்டிருந்தாய். அவர்கள் யார்? உண்மையைச் சொல். இல்லையென்றால் உன்னை இந்த வாளுக்கு இரையாக்கி விடுவேன்' என்று கர்ஜித்தார். இந்தச் சுடு சொல்லைக் கேட்டவுடன் இடி ஓசைகேட்ட நாகம் போன்று பதறினேன். இதுவரை யாரிடமும் கேட்டறியாத பழிச்சொல்லைச் சொந்தக் கணவனிடமிருந்து கேட்டதால் மனம் பொறுமல் மயங்கிக் கீழே விழுந்தேன். அதன் பிறகு என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது. மயக்கம் தெளிந்தது. விழித்துப் பார்த்தேன். பாதாள சிறையில் கிடந்தேன். நிராதரவாய் இருந்த என்மீது சிறைக்காவலாளி அனுதாபம் கொண்டு நடந்ததைச் சொன்னன்.

எனது பஜனையையும் பக்திப்பாடல்களையும் கேள்வியுற்ற முகலாய சக்கரவர்த்தி அக்பரும், கவிஞர் தான்சேனும் அதை ரசிக்க எங்கள் தலைநகருக்கு வந்திருந்தனர். அவர்கள் மாறுவேடம் போட்டுக்கொண்டிருந்ததையும், பேசிக்கொண்டிருந்ததையும் மறைந்திருந்து பார்த்திருந்த என் கணவரின் சகோதரர் என் கணவரிடத்தில் எடுத்துரைத்து மாறுவேடதாரிகள் இருவரையும் கையும் மெய்யுமாகப் பிடிக்கச் சொன்னர். என் மீது அபாண்ட பழிசுமத்தினர். அவர் கண்டது ஒன்று; கணவரிடம் சொன்னது ஒன்று. கண்டொன்று சொல்லேல் என்ற நீதியை மறந்தார். உறவினர் அனைவரும் ஒருமுகமாகச் சேர்ந்து பொய்யைத் திரும்பத் திரும்பச் சொல்லவே அதை மெய்யென எண்ணினர் என் துணைவர். என்னைக் கொன்றுவிடத் தீர்மானித்து தான் என்னைத் தேடி வந்தார். அதன் பிறகு நடந்ததை நானே அறிந்து மயங்கி வீழ்ந்தேன்.

"சிறையில் அடைக்கப்பட்டிருந்தவர்களைச் சிம்மாசனத்தில் இருக்கச் செய்தாய். சிம்மாசனத்தில் இருந்த என்னைச் சிறையில் வைத்துப் பார்த்து ரசிக்கிருய். நீயும் சிறையில் தானே பிறந்தாய். என்னை இந்த உடல் என்ற சிறையிலிருந்து எப்பொழுது விடுவிப்பாய்"? என்று அழுது புலம்பினேன். இரண்டொரு நாளில் எனக்கு விடுதலை கிடைத்தது. காரணம் அறிந்தேன். நான் சிறையில் வைக்கப்பட்ட செய்தியறிந்து மக்கள் அழுதனர். அக்பரும் அறிந்தார். மீராவை விடுவிக்காவிடில் உனது நாட்டின் மீது படைஎடுப்போம் என்று அக்பர் கடிதம் எழுதினராம். விடுதலை கிடைத்த இன்பத்தில் பிருந்தாவனம் நோக்கி ஓடினேன். சில நாட்கள் அங்கு பக்தி வெள்ளத்தில் மூழ்கி கண்ணனேடு இரண்டறக்கலந்தேன்.

எனது வரலாறு முழுமையையும் கேட்டீர்கள். என் மனம் கண்ணனுடைய திருவடியையே உறுதியாகப் பற்றியிருந்ததால் எனக்கு ஏற்பட்ட சோதனைகள் மாயமாய் மறைந்தன. நீங்களும் அவனுடைய அருளைப் பெற அவனைப் பிரார்த்தியுங்கள்.

# முக்குணங்கள்

குணத்தில் கட்டுப்பட்டு இருப்பது பிரகிருதி. குண அதீதத்தில் இருப்பது பரம் பொருள். பிரகிருதி என்பது முக்குண மயமாக இருக்கிறது. அக்னியையும் அதன் உஷ்ணத்தையும் பிரிக்க முடியாது. அக்னியும் உஷ்ணமும் ஒன்றேயாம். அங்ஙனம் பிரகிருதியும் குணமும் ஒன்றேயாம். தமோகுணம், ரஜோகுணம், சத்வகுணம் என்று மூன்று குணங்கள் இருக்கின்றன. முக்குணங்களையும் முப்பாழ் என்று அழைப்பது உண்டு. குணத்துடன் இருப்பது பிரகிருதியின் இயல்பு. இயல்பை வெல்லுவது கஷ்டம். பிரகிருதியில் கட்டுண்டு கிடப்பவர்கள் குணத்தை வெல்லுவது கஷ்டம். ஆத்மா குணத்திற்கு அப்பாற்பட்டது. ஆத்மா எந்தக் குணத்திலும் கட்டுப்படாதது. ஆத்மாவைச் சார்ந்திருப்பவர்கள் குணத்தில் கட்டுப்படாதவர்களாக இருக்கிறார்கள். ஆத்மீக உணர்வு ஓங்க ஓங்க குணத்தை வெல்லும் ஆற்றல் உண்டாகிறது. பிரகிருதியைச் சார்ந்திருக்கும்பொழுது குணத்திற்குக் கட்டுப்பட்டவராய் இருக்கிறோம். உடல் பிரகிருதியின் அம்சமாகும்.எனவேசரீரப் பற்று உடையவர்கள் குணத்திற்குக் கட்டுப்பட்டவர்களாய் இருக்கிறார்கள். இயல்பில் சூத்திரர்களாக இருப்பவர்கள் தமோகுண வசப்பட்டவர்களாகிறார்கள். இயல்பில் க்ஷத்திரியர்களாகவும், வைசியர்களாகவும் இருக்கிறவர்கள் ரஜோகுண வசப்பட்டவர்களாகிறார்கள். இயல்பில் பிராமணர்களாக இருக்கிறவர்கள் சத்துவகுண வசப்பட்டவர்களாகிறார்கள். தமோகுண வசப்பட்டவர்கள் செயலற்று ஜடம் போன்று கிடப்பார்கள். சோம்பல் உற்று இருப்பதிலும் தூங்கிக்கொண்டு இருப்பதிலும் இன்பம் பெறுவார்கள். ரஜோகுண வசப்பட்டவர்கள் ஆசைக்கு அடிமைப்பட்டு, பரபரப்பு மிகுந்தவர்களாய் வெறிபிடித்தவர்கள் போன்று செயல்புரிவார்கள். பேர் புகழில் நாட்டம் உடையவர்களாக இன்பத்திலும் துன்பத்திலும் உழன்று கிடப்பார்கள். சத்துவ குணம் ஓங்கப் பெற்றவர்கள் அமைதியாக மனதை நடுநிலையில் வைத்துச் சத்காரியங்களை நிராசையோடு செய்துகொண்டுஇருப்பார்கள்.

தூய கண்ணாடியோடு சத்துவகுணத்தை ஒப்பிடலாம். தூய கண்ணாடியின் வாயிலாக நன்கு வெளிச்சம் வெளிப்படுவது போன்று சத்துவகுணம் ஆத்மப் பிரகாசத்தை நன்கு விளக்குகிறது.சத்துவகுணம் ஓங்கப்பெற்றவன் உலக விஷயங்களையும் தெளிவாக உணருகின்றான். உலக விஷயங்களை அறியும்பொழுது அவற்றின் மூலம் இன்பமும் கிடைக்கிறது.அவ்வின்பத்தை அனுபவிப்பதற்கேற்றவாறு உலகப்பற்று வளருகிறது. மேலும் அதைப்பற்றிய உண்மையை அறியவேண்டும் என்ற ஆராய்ச்சி உலக ஞானத்தை வளர்க்கிறது. ஆகையால் சத்துவகுணம் ஓங்கப்பெற்றவன் மனதைப் பிரவிருத்தியில் திருப்புவானாகில் உலக சுகத்தை அனுபவிக்கவேண்டும் என்ற பற்றும், உலகத்தை அறிய வேண்டும் என்ற அறிவுப்பற்றும் ஏராளமாக உண்டாகின்றன. எனவே பிரவிருத்தியில் செல்லும்பொழுது சத்துவகுணம் பெற்றவனுக்கும் பந்தம் மிகவலிவுவாய்ந்ததாக அமைகிறது. அந்தப் பந்தத்தைத் துடைப்பது மிகவும் கஷ்டம். சத்துவகுணத்தில் உண்டாகும் பிரகிருதி சுகமானது ஆத்ம சுகத்திற்கு ஒப்பானதாக அமைவதோடு அது நுண்ணறிவை வளர்க்கிறது. எனவே அந்தச் சுகத்திற்கும் அறிவுக்கும் அப்பால் செல்வதற்கு மனிதனுக்கு விருப்பம் உண்டாவதில்லை.

ரஜோகுணம் உள்ளத்தில் துக்கத்துக்கு ஏதுவான ஆசையை வளர்க்கிறது. ரஜோகுணம் படைத்தவன் பிரவிருத்தி மார்க்கத்தில் செல்வானானால் தான் அடையாத பொருளின் மீது அடையவேண்டும் என்று பெருவேட்கை கொள்கின்றான். தான் பெற்றுள்ள பொருள்களை விட்டுப் பிரிய முடியாதபடி அவற்றைத் தானே அனுபவிக்க வேண்டுமென்று விரும்புகின்றான். ரஜோகுணம் படைத்தவன் கர்மத்தில் பற்றுதலையும், கர்மத்திற்குத் தான் கர்த்தா என்னும் கர்த்ருத்துவத்தையும் வளர்த்து கர்மத்தில் கட்டுண்டு போகிறான். விறகுக்கட்டை எரிகின்ற நெருப்பை வளர்ப்பது போன்று ரஜோகுணம் வினைப்பற்றை வளர்க்கிறது.

தமோகுணம் அக்ஞான இருளில் இருந்து

உண்டாகிறது. தமோகுணத்தால் விவேகம் மறைக்கப்படுகிறது. ரஜோகுணம் சத்துவ குணத்தைக் கெடுக்கிறது. தமோகுணம் சத்துவம், ரஜஸ் ஆகிய இரண்டையும் கெடுக்கிறது. தமோகுணம் மேலிடுகிறபொழுது உணர்ச்சி அற்று, அறிவற்று ஜடம்போன்று மனிதன் ஆகிவிடுகின்றான். முயலகன் என்னும் அரக்கன் மீது சிவபெருமான் தாண்டவம் புரிவது ஒரு தத்துவத்திற்கு விளக்கமாக இருக்கிறது. முயலகன் என்னும் அரக்கன் தமோகுணத்தின் பிரதிநிதி ஆகின்றான். சிவபெருமான் முயலகன் மீது தாண்டவம் புரிவதன் மூலம் தமோகுணத்தை அழித்துத் தள்ளவேண்டும் என்பதைப் புகட்டுகின்றார். அஃதே போன்று மகிஷாசுரன் மீது அம்பிகை தாண்டவம் புரிவதும் தமோகுணத்தை அழித்துத் தள்ள வேண்டும் என்பதைப் புகட்டுகின்றது. இந்திரியங்கள் வாயிலாக உள்ளிருக்கும் ஆத்மப் பிரகாசம் ஒளிர்கிறது. சத்துவகுணம் மேலோங்கப் பெற்றவர்களுக்கு ஆத்மப்பிரகாசம் இந்திரியங்கள் வாயிலாக அதிகம் ஒளிர்கின்றது. இந்திரியங்களைக் கையாளுவதில்சத்துவகுணம் ஓங்கப்பெற்றவர்கள் தெளிவும் திறமையும் உள்ளவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் இந்திரியங்கள் மூலம் மெய் அறிவை வளர்க்கின்றார்கள்.

ரஜோகுணம் பிறர் பொருள்களையெல்லாம் தன்னுடையவை ஆக்கிக்கொள்ளத் தூண்டுகிறது. புதிய புதிய கர்மங்களை ஆரம்பிப்பதில் ரஜோகுணம் படைத்தவன் ஊக்கமுடையவனாக இருக்கின்றான். அப்படித் தான் துவக்கிய கர்மத்தில் வெற்றி கிட்டும்பொழுது மகிழ்ச்சி அடைகிறான். தான் துவக்கிய கர்மத்தில் தோல்வி உண்டாகும்பொழுது மனச்சோர்வும் கவலையும் கொள்கின்றான். கர்மம் செய்யவேண்டும் என்ற மனோவேகம் உடையவனாக இருக்கின்றான்.

தமோகுணம் ஓங்கப்பெற்றவன் மனதில் இருள் சூழ்ந்திருக்கிறது. விவேகம் அவனுக்கு இருப்பதில்லை. செயல் இன்றி சோம்பல் உற்றுக் கிடக்கின்றான். கவனக்குறைவு உடையவனாகவும் இருக்கின்றான். அவன் மூலம் ஏராளமான தவறுகள் நிகழ்ந்து விடுகின்றன.

சத்துவகுணத்தை வளர்ப்பவன் வாழ்க்கையை உயர்த்துபவன் ஆகின்றான். அவன் தெய்வநிலையை எட்டிவிடுகின்றான். சத்துவ குணம்வாய்க்கப்பெற்றவனுக்கு விவேகம் நன்கு வேலை செய்வதால் மேன்மைப்படுத்துகின்ற செயலில் தன்னை ஈடுபடுத்துகின்றான். பேர் புகழுக்கோ, போகத்திற்கோ அவன் கர்மம் செய்வதில்லை. அவன் செய்கின்ற கர்மம் அவன் உள்ளத்தை வளர்ப்பதற்குத் துணை புரிகின்றது. தனக்கும், பிறர்க்கும் நலம் தருகின்ற செயலை அவன் ஊக்கத்துடன் செய்கின்றான். அத்தகைய செயலின்மூலம் அவன் தன்னைப் படிப்படியாக உயர்த்திக்கொண்டே இருக்கின்றான். மனதைப்பண்படுத்தும் செயலாகச் சத்துவகுணம் ஓங்கப் பெற்றவர்களின் செயல் அமைகிறது.

ரஜோகுணம் படைத்தவன் ஏராளமான செயல்கள் செய்வான். ஆனால் அச்செயல்களால் அவன் எவ்வித முன்னேற்றமும் அடையான். தன் செயலின் மூலம் தனக்குத் துன்பத்தை வரவழைத்துக் கொள்வது அவனுடைய இயல்பு. துன்பம் வரும் பொழுது தான் செய்தது தவறு என்பதை உணர்கின்றான். அப்படி உணரும் பொழுது சிறிது விவேகம் வருகிறது. அவன் தன் செயலின் மூலம் சிறிது சிறிதாக விவேகம் பெற்றுத் தன்னைத் திருத்தி அமைத்துக்கொள்வதற்கு நெடுங்காலம் எடுத்துக் கொள்கின்றான். ரஜோகுணம் படைத்தவன் கர்மப்பற்றை வளர்த்து உலக ஆசையையும் வளர்த்துக்கொள்கின்றான். தான் கொண்டுள்ள ஆசை குற்றமுள்ள ஆசை என்பது அவனுக்கு விளங்குவதில்லை.

தமோகுணம் படைத்தவன் எந்த விதமான முன்னேற்றமும் அடையமாட்டான். அவன் ஏற்கனவே உள்ள நிலையிலிருந்து மேலும் கீழ் நிலைக்குச் சென்று கொண்டிருப்பான். ஜடம் போன்று செயலற்றுக் கிடப்பதன் மூலம் எத்தகைய முன்னேற்றத்தை அடைய முடியும்? எந்தவிதத்திலும் தமோகுணம் உதவாது. தமோகுணத்தை ரஜோகுணத்தாலும், ரஜோகுணத்தைச் சத்துவகுணத்தாலும் வெல்லுதல் வேண்டும். ஆத்ம சாதகன் தமோகுணத்தில் இருந்துகொண்டு சத்துவகுணத்தில் இருப்பதாகக் கற்பனை செய்துகொண்டு தன்னைக் கீழ்மைப்படுத்திக் கொள்ளல்ஆகாது. தமோகுணம் முற்றிலும் அஞ்ஞானமயமானது. சத்துவகுணம்

ஞானத் தெளிவை உண்டு பண்ணுகிறது. பலர் அக்ஞானத்தில் இருந்துகொண்டு ஞானம் உடையவர்களாகத் தங்களை எண்ணிக்கொள்கின்றனர். ஒவ்வொரு சாதகனும் தான் எந்நிலையில் இருக்கிறான் என்பதை எடை போட்டு வைத்திருக்கவேண்டும். அகம் தெளிவுடனும், சாந்தத்துடனும், மகிழ்ச்சியுடனும் இருப்பது தான் சத்துவகுணத்தின் அறிகுறியாகும். சிந்தனை சத்துவகுணத்தில் இருப்பவர்களுக்குத் தெளிவுடையது ஆகின்றது. தமோகுணம் வசப்பட்டவர்களுடைய உள்ளத்தில் தெளிவான சிந்தனை தோன்றாது. மேலாம் கருத்துக்களைச் சிந்திப்பதற்குத் தமோகுணம் படைத்தவர்களுக்கு இயலாது. சத்துவகுணத்தை வளர்ப்பது ஆத்ம சாதனையின் குறிக்கோள். தீவிரமாகச் செயல் புரிவதன் மூலம் தமோகுணத்தை வென்று பயனில் பற்றற்றுச் செயல்புரிவதன் மூலம் ரஜோகுணத்தை வென்று சத்துவகுணத்தை வளர்ப்பது வாழ்வின் முன்னேற்றத்திற்குத் துணைபுரிகிறது.

பூமிக்கடியில் எவ்வளவு செல்வம் இருந்தாலும் அது உள்ளே மறைந்து கிடக்கும் வரையில் நம் வாழ்க்கைக்கு அது பயன்படுவதில்லை. அங்ஙனம் நம்மிடத்தில் எவ்வளவு ஆற்றல் இருந்தாலும்நம்மிடத்துத் தமோகுணம் ஓங்கும் பொழுது அவ்வாற்றல் பயன்படுவதில்லை. கும்பகர்ணனிடத்தில் ஏராளமான ஆற்றல் இருந்தது. ஆனால் அவன் தமோகுண வசப்பட்டுத் தூங்கிக்கொண்டு இருந்தமையால் அவனுடைய ஆற்றலை ராவணன் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. அவனுடைய ஆற்றல் அவசியம் தேவைப்பட்டபொழுது ராவணன் கும்பகர்ணனைத் தூக்கத்தினின்றும் எழுப்பினான். நம் நாட்டில் ஆத்மீகச் செல்வம் ஏராளமாக இருக்கிறது. ஆனால் நம் நாட்டவர்கள் தமோகுணத்தில் மூழ்கிக் கிடப்பதால் அவ் ஆத்மீகச் செல்வத்தைப்பயன்படுத்த முடியாதவர்களாக இருக்கிறார்கள். நம் ஆத்மீகச் செல்வத்தை நாம் பயன்படுத்துவதற்கு நாம் தமோகுணத்திலிருந்தும் விடுபட்டு எழுந்திருக்க வேண்டும். சுவாமி விவேகானந்தர் எழுந்திருங்கள் என்று கூறி நம்மைத் தமோகுணத்தினின்றும் எழுப்புகின்றார். நம் நாடு தமோகுணத்திலிருந்து எழுந்திருக்கும் பொழுதுதான் நம் நாட்டின் ஆத்மீகச் செல்வத்தை நாம் நன்கு பயன்படுத்த முடியும்.

ஆசைக்கு வசப்பட்டு ஆற்றலைத் துஷ்பிரயோகம் பண்ணுவது ரஜோகுணத்தின் தன்மையாகும். ராவணன் பேராற்றல் படைத்தவன். அவன் காமத்துக்கு வசப்பட்டுத் தம் ஆற்றலை எல்லாம் விரயம் செய்தான். ரஜோகுணம் படைத்தவர்கள் ராவணன் போன்று காமம் உடையவர்களாகத் தங்கள் ஆற்றல்களை எல்லாம் தவறான வழியில் செலவழிக்கின்றார்கள். ஆற்றலைத் தவறான வழியில் செலவழிக்காமல் இருப்பதற்கு நாம் விழிப்புடன் இருக்கவேண்டும். சுவாமி விவேகானந்தர் விழித்திருங்கள் என்று நமக்கு உபதேசம் செய்வதன் மூலம் ரஜோகுணத்தை வெல்ல வேண்டும் என்று நம்மைத் தூண்டுகின்றார். ரஜோகுணம் படைத்தவன் அகங்காரம் உடையவனாக அனைத்தையும் தானே அனுபவிக்கவேண்டும் என்ற ஆசை உடையவனாக இருக்கின்றான். அவன் காமத்துக்கு வசப்பட்டு இருக்கும் பொழுது அவன் யாருடைய புத்திமதியையும் ஏற்றுக் கொள்வதில்லை. ராவணன் சீதையின் விஷயத்தில் காமத்துக்கு வசப்பட்டவனாக இருந்தமையால் அவன் யாருடைய புத்தியையும் ஏற்றுக் கொள்ளவில்லை. ராமனே அவனுக்குப் புத்திமதி கூறியும் அவன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. காமத்துக்கு வசப்பட்டு விவேகத்தை இழந்து விடாது விழிப்புடன் இருக்கவேண்டும் என்பதைத்தான் விழித்திருங்கள் என்று சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார்.

சான்றோரை அணுகி அவருக்குத் தொண்டு புரியவேண்டும். விபீஷணன், சத்துவகுணத்தின் பிரதிநிதியாவான். அவன் ராவணன் போக்குச் சரியில்லை என்பதை அறிந்ததும் அவனை விட்டு விலகி ராமனிடம் சரண் புகுந்தான். இறுதி வரையில் ராமனுக்கு அவன் தொண்டு புரிந்தான். சத்துவகுணம் ஓங்கப் பெற்றவர்கள் உலகத்தை விட்டுப் பிரிந்து ஞானம் பெறும் வரையில் தெய்வத்துக்குத் தொண்டுபுரிய வேண்டும் என்பதைக் 'கருதிய காரியம் கைகூடும் வரை உழைமின்' என்று சுவாமி விவேகானந்தர் அறிவுறுத்துகிறார். எழுமின், விழிமின், செந்நெறி சார்மின் என்று சுவாமி விவேகானந்தர் கூறும் அறிவுரையை நாம் கடைப்பிடிப்போமாக!

# குறிப்புகள்

**பாதயாத்திரை – 5**

1973ஆம் ஆண்டு முதல் ஆண்டுக்கு ஒரு பாதயாத்திரையாக நிகழ்ந்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு ஜில்லாவில் இது நடைபெறுகிறது. இவ்வாண்டு தென் ஆற்காடு மாவட்டத்தில் ஆரம்பித்து தென் ஆற்காடு மாவட்டத்தில் முடிக்கப்பெற்றது. ஆசிரியத் துறையில் உள்ளவர்களுக்குக் கோடை விடுமுறையை நல்லமுறையில் பயன்படுத்துவதற்கு இத்திட்டம் துணைபுரிகிறது. இவ்வாண்டு பாதயாத்திரையில் மாணவர்கள், ஆசிரியத்துறையில்உள்ளவர்கள்,வியாபாரத்துறையில் உள்ளவர்கள்,விவசாயத்துறையில் உள்ளவர்கள்–ஐம்பதுபேர் கலந்துகொண்டு பயன் அடைந்தனர்.

பாதயாத்திரிகர்கள் மே மாதம் 9ஆம் தேதி இரவு திருவண்ணமலை "மீனாட்சி கல்யாண மண்டபத்தில்" ஒன்று கூடினர். மே மாதம் 10ஆம் தேதி காலை பஸ்மூலம் மணலூர்பேட்டை சென்று பக்தர் ஒருவர் வீட்டில் காலைச் சிற்றுண்டி எடுத்துக்கொண்டு அங்கிருந்து பஸ் மூலம் காலை சுமார் 10-15 மணிக்குத் திருவரங்கத்தை அடைந்தனர். திருவரங்கத்தில் இருந்துதான் இவ்வாண்டு பாதயாத்திரை துவங்கியது. திருவரங்கம் என்னும் க்ஷேத்திரம் தென் பெண்ணையாற்றின் தென்கரையில் அமைந்துள்ளது. ஆங்கு ரங்கநாதர் ஆதிசேஷன்மீது சயனித்துள்ளார். மூலவரின் தோற்றம் ரம்மியமாக அமைந்துள்ளது. கிருஷ்ணாரண்யம் என்பது இந்தக்ஷேத்திரத்திற்கு மறுபெயர். கோயில் மிகப் பழமையானது. கட்டடங்கள் பழுதுபட்ட நிலையில் உள்ளன. வடநாட்டு அன்பர் ஒருவர் இந்தக்ஷேத்திரத்திற்கு ஒன்றரை லட்ச ரூபாய் அளவில் பொருளுதவி செய்து திருப்பணி செய்துள்ளார். இன்னும் திருப்பணி செய்யவேண்டிய நிலையில்தான் ஆலயத்தின் நிலைமை இருக்கிறது. பாதயாத்திரிகர்கள் அனைவரும் அக்கோயிலை அடைந்ததும் பூரண கும்பம் வைத்து வரவேற்கப்பட்டனர்.

மனம், வாக்கு, காயம் என்னும் முக்கரணங்களால் வழிபாடு செய்து பாதயாத்திரையைப் புனிதயாத்திரையாகச் செய்வது பாதயாத்திரையின் முக்கிய கொள்கையாகும். திருவரங்க க்ஷேத்திரத்தை அடைந்ததும் காலை 10-30 மணி சுமாருக்குப் பாதயாத்திரிகர்கள் அனைவரும் உழவாரப் பணியில் வழிபாட்டைத் துவக்கினர். உற்சாகத்துடனும், மன மகிழ்ச்சியுடனும் இரண்டு மணிநேரம்உழவாரப்பணியில் ஈடுபட்டு ஆலயத்தைத் துப்புரவு செய்தனர். அனைவர் மனமும் உழவாரப்பணியில் முழுதும் ஈடுபட்டிருந்ததால் காலம் போனதை யாரும் கருத்தில் வாங்கவில்லை. பகல் 12-30 மணிக்கு உழவாரப்பணியை முடித்துக்கொண்டு ஆலயத்தின் அருகில் ஓடிக்கொண்டிருக்கும் தென் பெண்ணையாற்றில் புனித நீராடினர். பகல் 1 மணி முதல் 2-00 மணிவரையில் ஆலயத்தில் அமைதியான இடத்தில்அமர்ந்துபஜனையும் வழிபாடும் செய்தனர். இவ்வாலயத்தின் அர்ச்சகர் ஆண்டவனின் உண்மையான திருத்தொண்டராக இருந்தார். யாத்திரிகர்களின் திருப்பணியும், வழிபாடும் அவர் உள்ளத்தை முற்றும் கவர்ந்தன. உணர்வு வசப்பட்டவராக யாத்திரிகர்களுக்கு ஆலய தரிசனம் செய்து வைத்தார். இரண்டு மணிக்கு வழிபாடு முடிந்தது. திருவரங்கப் பெருமான் தம் பக்தர் ஒருவர் மூலம் யாத்திரிகர்கள் அனைவருக்கும் பெரிய விருந்து ஆயத்தப்படுத்தி வைத்திருந்தார். அன்போடும் பணிவோடும் ஏழு மைலுக்கு அப்பால் இருந்து திரு அமுது செய்து யாத்திரிகர்கள் இருக்கும்இடம் தேடித்திருஅமுது எடுத்துக்கொண்டு வந்து யாத்திரிகர்களை உபசரித்துப் பெரிய விருந்து படைத்தார். அவ் அன்பர் திருவரங்கப் பெருமானின் ஆலயக் கட்டடத் திருப்பணியை முன்நின்று நடத்துபவர் ஆவார். வாழ்க்கையில் பொதுநலத்தொண்டு செய்யும் அன்பர்களுடைய உள்ளம் நல்ல உள்ளமாக இருக்கும் என்பதை அவ்வன்பர் செயலின் மூலம் விளக்கிக்காட்டினர். அவ்வாலயக் கட்டடத் திருப்பணியில் ஈடுபட்டுள்ள மற்றொரு அன்பர் யாத்திரிகர்களுக்கு அன்று காலைச் சிற்றுண்டியும், மாலைச் சிற்றுண்டியும் தந்து தமது அன்பை வெளிப்படுத்தினர். உணவுக்குப்பின் மாலை 4 மணி வரையில் யாத்திரிகர்கள் ஓய்வு எடுத்துக்கொண்டனர். மாலை நான்கு மணிக்கு நண்பகலில் திருஅமுது படைத்த

அதே அன்பர் யாத்திரிகர்கள் அனைவருக்கும் இளநீர் கொடுத்து உபசரித்தார்.

மாலை 4-30 மணிக்குத் திருவரங்கத்தில் இருந்து புறப்பட்டு,

ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்
ஆதிசக்தி மஹாசக்தி பராசக்தி ஓம்

என்னும் நாம ஜபத்துடன் மணலூர்பேட்டையை நோக்கி பாதயாத்திரை ஆரம்பம் ஆயிற்று. உழவாரப்பணியில் சரீரத்தின்மூலம் பகவத் சேவை செய்த யாத்திரிகர்கள் நாம ஜபம் ஜபிப்பதன்மூலம் வாக்கால் இறைவழிபாடு செய்தனர். பாதயாத்திரையில் மனம் தெய்வச் சிந்தனை செய்யவும், நா தெய்வ நாமத்தை உச்சரிக்கவும், சரீரம் நடக்கின்ற செயலைச் செய்யவும் ஈடுபடுவதால் முக்கரணங்களும் புனித செயலில் ஈடுபடுவன ஆகின்றன. தென்பெண்ணையின் வடகரையில் ஐந்துகிலோ மீட்டர் நடந்து மாலை 5-15 மணிக்கு யாத்திரிகர்கள் மணலூர்பேட்டை என்னும் ஊரை அடைந்தனர். அவ்வூர் மக்கள் பூரணகும்பம் கொண்டு பாதயாத்திரிகர்களை வரவேற்று உபசரித்தனர். அங்கிருந்து ஆறு மணிக்குப் புறப்பட்டுப் பதினேரு கிலோமீட்டர் நடந்து சென்று தச்சம்பட்டு என்னும் ஊரை இரவு ஒன்பது மணிக்குப் பாதயாத்திரிகர்கள் அடைந்தனர். வழிமுழுவதும் பாதயாத்திரையின் பொழுது தொடங்கிய,

ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்
ஆதிசக்தி மஹாசக்தி பராசக்தி ஓம்

என்னும் திருநாமம் ஜபிக்கப்பட்டது. ஆங்கு அன்பர் ஒருவர் பாதயாத்திரிகர்களை வரவேற்றுப் பெரிய விருந்து அளித்தார். இரவு உணவுக்குப்பின் அங்குள்ள மக்களுக்கு நல் வாழ்வு எப்படி வாழவேண்டும் என்பது எடுத்துக் கூறப்பட்டது. இறைவனுடைய நாமத்தின் மகிமையை எடுத்துக்கூறி அந்நாமத்தை விசுவாசத்தோடு ஓதுகிறவர்களுக்குக் கடவுள் எப்படி உதவுகிறார் என்பதைக் கதை மூலம் விளக்கி அவர்கள் அனைவரையும்,

ஹரேராம ஹரேராம ராம ராம ஹரே ஹரே

என்ற நாமத்தை ஓதும்படி புகட்டி அவர்கள் அனைவருக்கும் பிஸ்கட் பிரசாதமாக வழங்கப்பட்டது.இரவு பத்து மணிக்கு அவ்வூரில் உள்ள அரசினர் உயர்நிலைப்பள்ளியில் பாதயாத்திரிகர்கள் அனைவரும் தங்கி ஓய்வு எடுத்துக் கொண்டனர்.

11—5—77 அதிகாலையில் எழுந்திருந்து பாதயாத்திரிகர்கள் அனைவரும் ஸ்நானம் செய்து கொண்டு அரைமணி நேரம் வழிபாடு செய்தனர். 4-45 மணிக்குத் தச்சம்பட்டிலிருந்து,

ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே
ஹரேகிருஷ்ண ஹரேகிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

என்ற நாமஜபத்துடன் பாதயாத்திரையைத் தொடர்ந்தனர்.வழியில் காலை ஏழரைமணிக்குப் புத்தியந்தலுக்கு அருகிலுள்ள தென்னந்தோப்பில் பாதயாத்திரிகர்கள் அமர்ந்து அன்பர் ஒருவர் ஏற்பாடு செய்திருந்த சிற்றுண்டியை எடுத்துக்கொண்டனர். அங்கிருந்து எட்டரை மணிக்குப் புறப்பட்டு ஒன்பதரை மணிக்குத் திருவண்ணமலையை அடைந்தனர். ஆங்கு பூர்ணகும்பத்துடனும் மேளவாத்தியங்களுடனும் பாதயாத்திரிகர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. ஒருமணிநேரம் ஓய்வுக்குப் பின் ரமணாச்ரமம் சென்று ரமணர் இருந்த இடம், தவம் பண்ணிய இடம், மற்றும் ரமணர் சம்பந்தமான விபரங்களை அறிந்துகொண்டதோடு தியானத்திற்காக அமைக்கப்பட்டுள்ள ஹாலில் பாதயாத்திரிகர்கள் அமர்ந்து சிறிது நேரம் தியானம் செய்தனர். பகல் ஒருமணிக்குப் பாதயாத்திரிகர்கள் திருவண்ணமலையில் உள்ள மீனுக்ஷி கல்யாண மண்டபத்துக்கு வந்துசேர்ந்தனர். பாதயாத்திரிகர்கள் அனைவருக்கும் அம்மையார் ஒருவர் மதிய உணவு ஆயத்தப்படுத்தி வைத்திருந்தார்கள். பராசக்தியே மானுடவடிவம் எடுத்து வந்தது போன்று அன்போடு அவர்கள் பாதயாத்திரிகர்களாகிய குழந்தைகளை மதிய உணவும், இரவு உணவும் முகமலர்ந்து, மனம் குளிர்ந்து கொடுத்து உபசரித்தார்கள். மதிய உணவுக்குப் பின் 4-45 மணிக்குப் பாதயாத்திரிகர்கள் அனைவரும் ஒழுங்குப்பாட்டுடன் சிவ நாமத்தை ஓதிக்கொண்டு அண்ணமலையார் ஆலயத்துக்குத் தரிசனத்துக்குச் சென்ருர்கள்.

ஆலய வழிபாடு எப்படி நிகழவேண்டுமென்பதை மக்களுக்கு விளக்கிக் காட்டுகின்ற முறையில் பலிபீடத்துக்கு முன் பாதயாத்திரி

கர்கள் அனைவரும் வீழ்ந்து வணங்கி சிவ நாமத்தை ஓதிக்கொண்டு ஆலயத்துக்குள் வலம்வந்தனர். ஆங்கு அப்பன்சந்நிதியில் ஒரு மணிநேரம் ஐக்கிய வழிபாடும், அம்மை சந்நிதியில் ஒருமணிநேரம் ஐக்கிய வழிபாடும் செய்து மக்களுக்கு வழிபாடு செய்யும் முறையை விளக்கிக் காட்டினர். ஆலயத்துக்குள் அமைதியாக விருந்து, மற்றவர்களுடைய வழிபாட்டுக்கு இடையூறு இல்லாமல் வரிசையாகச் சென்று, சந்நிதியை மறைக்காமல் நின்று தரிசனம் செய்து ஆலயத்தினுள் நடந்துகொள்ள வேண்டிய முறையைப் பாதயாத்திரிகர்கள் வழிபாட்டுக்கு வந்தவர்களுக்குச் செயல் மூலம் விளக்கிக் காட்டினர். ஆலயத்தில்வழிபாடுசெய்கிறவர்கள் அருளை வளர்ப்பதற்கு எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைப் பாதயாத்திரிகர்கள் ஆங்குத் தங்கள் வழிபாட்டின் மூலம் விளக்கிக் காட்டினர். இரவு ஒன்பதுமணிக்கு வழிபாட்டை முடித்துக்கொண்டு மீனாக்ஷி கல்யாண மண்டபத்துக்கு வந்து உணவு எடுத்துக்கொண்டு அன்றிரவு யாத்திரிகர்கள் அங்கேயே தங்கி ஓய்வெடுத்துக் கொண்டனர்.

12—5—77 பிராம்மமுகூர்த்தத்தில் பாதயாத்திரிகர்கள் அனைவரும் எழுந்திருந்து ஸ்நானம் செய்துகொண்டு காலை பிரார்த்தனையைச் செய்துவிட்டுக் காலை 4-30 மணிக்குத் திருவண்ணமலையிலிந்து புறப்பட்டு,

சிவாய நமஓம் சிவாய நம:
சிவாய நமஓம் நமசிவாய

என்னும் நாம ஜபத்துடன் பாதயாத்திரிகர்கள் தங்கள் மூன்றும் நாள் பாதயாத்திரையைத் தொடங்கினர். அங்கிருந்து பத்துகிலோ மீட்டர் நடந்துசென்று காலை ஆறேமுக்கால் மணிக்கு ஊசாம்பாடி என்னும் கிராமத்தை அடைந்தனர். பூரண கும்பத்துடனும், மேள வாத்தியங்களுடனும் அவ்வூர் மக்கள்பாதயாத்திரிகர்களை வரவேற்றனர். பாதயாத்திரிகர்கள் அனைவருக்கும் அவ்வூர் அன்பர் ஒருவர் காலை அமுது ஆயத்தம் செய்து கனிவோடு படைத்தார். அவ்வூர் ஆரம்பப்பள்ளியில் பொதுமக்களுக்கு அரைமணிநேரம் அறவுரை வழங்கப்பட்டது. அங்கிருந்து காலை ஒன்பது மணிக்குப்புறப்பட்டு நான்கு கிலோமீட்டர் நடந்து சென்று துரிஞ்சாபுரம் என்னும் கிராமத்தைப் பாதயாத்திரிகர்கள் காலை 9-40 மணிக்கு அடைந்தனர். அவ்வூர் மக்கள் பூரணகும்பத்துடனும், மேள வாத்தியங்களுடனும்பாதயாத்திரிகர்களைஅன்போடு வரவேற்றனர். காலை 10-30 மணி வரையில் ஓய்வு எடுத்துக்கொண்டு 10-30 மணியிலிருந்து 11-30 மணிவரையிலும் அவ்வூர் முத்தாலம்மன் கோவிலைத்துப்புரவு செய்யும் நிர்மாண வேலை செய்தனர். ஆங்குப் பாதயாத்திரிகர்கள் செய்த பனியைக்கண்டுஅம்பாள் உள்ளம் பூரித்திருப்பாள் என்பதில் ஐயமில்லை. அம்பாளுக்கு அத்தகைய பணிவிடை செய்து பாதயாத்திரிகர்கள் அம்பாளின் திருவருளுக்குப் பாத்திரமானார்கள். நண்பகல் 12-30 மணியிலிருந்து 1-00 மணி வரையிலும் பாதயாத்திரிகர்களுக்கு மதிய அமுது ஆயத்தம் பண்ணி வைத்திருந்த அன்பர் வீட்டில் ஐக்கிய வணக்கம் செய்தனர். ஐக்கிய வணக்கத்துக்குப் பின் அவ் அன்பர்படைத்த அமுதைஏற்றுக் கொண்டனர். மதிய உணவுக்குப் பின் மாலை 4-30 மணி வரையிலும் பாதயாத்திரிகர்களுக்கு ஓய்வு தரப்பட்டது. 4-30 மணிக்கு அவ்வூரிலேயே மற்றொரு அன்பர் பாதயாத்திரிகர்களுக்கு மாலைச் சிற்றுண்டி அளித்தார். மாலை 5-15 மணிக்குப் பாதயாத்திரிகர்கள் அனைவரும் அவ்வூருக்கு அருகிலுள்ள புஷ்பகிரி பாலசுப்பிரமணிய ஆலயத்துக்கு வழிபாட்டுக்குச் சென்றனர். ஆங்கு ஒருமணிநேரம் ஐக்கிய வழிபாடும், பொது மக்களுக்கு அறவுரையும் செய்யப்பட்டன. சிறு குன்றின் மீது அவ் ஆலயம் அமைந்திருந்தது. இரவு 8-15 மணிக்கு வெட்டவெளியில் அக்குன்றின் மீது அமர்ந்து இரவு உணவு எடுத்துக்கொண்டது மனதுக்குப் பேரின்பத்தை ஊட்டியது. அங்கிருந்து 8-15 மணிக்குப் புறப்பட்டு நாம ஜபத்துடன் 5 கிலோ மீட்டர் நடந்து சென்று இரவு 9-45 மணிக்கு நூக்காம்பாடி என்னும் கிராமத்தைப் பாதயாத்திரிகர்கள் அடைந்தனர். அவ்வூரில் அமைந்துள்ள திரௌபதியம்மன் கோவிலில் பொதுமக்களுக்கு ராமாயணத்திலுள்ள வாழ்க்கைப்பற்றிய உண்மைகளை எடுத்து விரிவாகச் சொல்லப்பட்டது. அன்றிரவு திரௌபதியம்மன் கோவிலிலேயே பாதயாத்திரிகர்கள் அனைவரும் தங்கி ஓய்வெடுத்துக்கொண்டனர்.

13—5—77 அன்று பிராம்மமுகூர்த்தத்தில் பாதயாத்திரிகர்கள் எழுந்திருந்து ஸ்நானம் செய்து பிரார்த்தனை முடித்துக்கொண்டு 4-45 மணிக்கு,

ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்
ஆதிசக்தி மஹாசக்தி பராசக்தி ஓம்

என்ற நாமத்துடன் நான்காவது நாள் பாதயாத்திரையைத் தொடங்கினர். ஒன்பது கிலோமீட்டர் நடந்துசென்று விஸ்வநாதபுரம் என்னும் ஊரைக் காலை 6-45 மணிக்குப் பாதயாத்திரிகர்கள் அடைந்தனர். அங்கு அன்பர் ஒருவர் பாதயாத்திரிகர்களுக்குச் சிற்றுண்டி வழங்கினார். அங்கிருந்து காலை 8-20க்குப் புறப்பட்டு 4 கி. மீ நடந்துசென்று காலை 9-15 மணிக்குப் பாதயாத்திரிகர்கள் அவலூர்பேட்டை அடைந்தனர். ஆங்கு பாதயாத்திரிகர்களுக்குப் பூரண கும்பத்துடன் இன்னிசை வாத்தியங்கள் இசைக்க வரவேற்புக் காத்துக்கொண்டிருந்தது. ஒழுங்குப்பாடானமுறையில் தெய்வீக உணர்வு எழும்படியாக ஒரு மணி நேரம் வரவேற்பு நிகழ்ந்தது. வரவேற்புக்குப்பின் பாதயாத்திரிகர்களும், ஊர் மக்களும் சேர்ந்து ஒரு மணி நேரம் ஐக்கியவழிபாடு சிறந்த முறையில் செய்தனர். மதிய உணவுக்குப் பின் அவ்வூரிலுள்ள சித்தகிரி என்னும் குன்றுக்கு மாலை6-00 மணிக்குப் பாதயாத்திரிகர்கள் நாமஜபத்துடன்சென்றனர். ஆங்கும் பாதயாத்திரிகர்களும், ஊர்மக்களும் சேர்ந்து உருக்கமான முறையில் ஒரு மணி நேரம் ஐக்கிய வழிபாடு செய்தனர். வழிபாட்டுக்குப் பின் சுமார் ஐந்நூறுபேர் அமைதியான முறையில் ஒருவர்பின் ஒருவராகச் சென்று சுப்பிரமணிய சுவாமி தரிசனம் செய்தது அற்புதமாக இருந்தது. ஆலயங்களில் மக்கள் வழிபாடு அந்த முறையில் செய்வார்களானால் ஆலயத்தின் அருள்நிலை ஓங்கும். எத்தனை பேர் ஆலயத்துக்கு அத்தகைய நல்ல மனப்பான்மையுடன் வருகிறார்களோ அதற்கேற்ப ஆலயத்தில் அருள் ஓங்குவதாகிறது. வழிபாட்டுக்குப் பின் நாமஜபத்துடன் அக்குன்றிலிருந்து அன்பர்கள் கீழே இறங்கி வந்தனர்.

ஒவ்வொரு ஆண்டும் ஏழை மக்களோடு தொடர்பு கொண்டு அவர்களுக்கு உணவும், உடையும் கொடுத்து நல்வாழ்வுக்கு வழிகாட்டி அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவது பாதயாத்திரையின் திட்டங்களுள் ஒன்றாகும். அதற்காக ஆண்டுக்கு ரூபாய் ஆயிரம் அன்பர் ஒருவர் அன்பளிப்பாகத் தருகிறார். இவ்வாண்டு ஏழை மக்களுக்கு உடைக்காகவே அத்தொகை முழுவதும் பயன்படுத்தப்பட்டது. சுமார் ஆயிரம் ஹரிஜனங்களுக்கு,

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண
கிருஷ்ண ஹரே ஹரே

என்ற மகாமந்திரத்தைப் புகட்ட அவர்களும் திரும்பச் சொன்னார்கள். அவர்கள் அனைவருக்கும் நல் உணவு வழங்கப்பட்டது. ஒருவர் பின் ஒருவராக வரிசையாகச் சென்று வரிசையாக அமர்ந்து உணவு பரிமாறும் வரையில் "ஹரே ராம" என்னும் நாமத்தைச் சொல்லி உணவு பரிமாறி முடிந்த பிறகு தெய்வத்துக்கு அர்ப்பணம் செய்து பிறகு உணவு உண்டனர். பாத யாத்திரிகர்கள் அவர்களை ஒழுங்குப்படுத்தி, அவர்களுக்கு உணவு பரிமாறி, வரிசை வரிசையாக எழுந்திருந்து போகும்படி அவர்களுக்கு வழிகாட்டித் தந்து, அவர்கள் உண்ட பின் அவர்கள் உண்ட இலையை யாத்திரிகர்களே எடுத்து, உண்ட இடத்தை சுத்தம் செய்து நர சேவையை நாராயண சேவையாகச் செய்தனர். இச்செயலின்மூலம் மக்களுடைய உள்ளத்திலுள்ள உயர்வு தாழ்வு என்ற மனப்பான்மை நீங்கி உயர்ந்தோர் தாழ்ந்தோர்க்கிடையில் தெய்வீக இணக்கம் ஏற்படுகிறது. இவ்வாண்டு சுமார் ஆயிரம் ஏழை மக்களுக்கு உணவும், ரூபாய் ஆயிரத்துக்கு உடையும் ஒரே அன்பர் மூலம் வழங்க இறைவன் ஏற்பாடு செய்தார். மக்களுக்குப் பரந்த மனப்பான்மையும், உண்மையான சமூகத்தொண்டும், கடவுள் பக்தியும் ஓங்குவதற்கு உதவிசெய்யும்பொருள் அருளாகமாற்றப்படுகிறது. பொதுவாக மக்கள் பொருளைப் பெருக்குவதற்குத்தான் தெரிந்திருக்கிறார்கள். பொருளை அருளாக மாற்றுவதற்கு உபாயம் என்ன என்பதை இவ்வரிய தொண்டு வழிகாட்டுகிறது. பொருள் பலருக்குத் தேடத் தெரியும்; அதை முறையாகச் செலவழிக்கத் தெரியாது. பொருளைத் தேடுவதில் குற்றமில்லை. அதை அருளாக மாற்றுவதற்குரிய அருள் மனப்பான்மையைப் பெறுவது நல்லார்களுடைய செயலாகும்.

இந்த அரிய நிகழ்ச்சியுடன் எங்களுடைய பாதயாத்திரை முடிவுக்கு வந்தது. பாதயாத்திரிகர்கள் அனைவரும் ஒன்றுகூடி பாத யாத்திரையில் அவர் அவர்களுக்கேற்பட்ட அனுபவத்தையும், மனபரிபாகத்தையும் வெளியிட்டு மகிழ்வடைந்தனர். அடுத்த ஆண்டு மே மாதம் மதுரை ஜில்லா காமயகவுண்டன்பட்டியிலிருந்து பாதயாத்திரை துவங்க முடிவு செய்யப்பட்டது. அதை யொட்டி சபரிமலை யாத்திரையும் செய்ய முடிவு செய்யப்பட்டது. எனவே அடுத்த ஆண்டு பாதயாத்திரையில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள் சபரிமலை யாத்திரை செல்லும் அன்பர்கள் போன்று நாற்பத்தெட்டு நாட்களுக்கு விரதம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதும் முடிவு செய்யப்பட்டது. பிறகு மங்களம் பாடி பாதயாத்திரை 13—5—77 இரவு 12 மணியுடன் முடிவுற்றது.

பாத யாத்திரையில் ஆலய வழிபாடு என்ற துண்டு பிரசுரங்களையும், 'நன்னெறிகளும், அருள் வாக்குகளும்' என்ற தலைப்பில் புஸ்தகங்களையும் அச்சிட்டு ஆங்காங்கு சந்தித்த மக்களுக்கு வழங்கி ஆலயவழிபாட்டை முறையாகச் செய்வதற்கும், நல்வாழ்வுக்கும், வழிகாட்டித் தந்தது இவ்வாண்டு பாத யாத்திரையில் செய்த மற்றொரு பணியாகும். நல்ல மனப்பான்மை உள்ளவர்கள் தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்து வந்து ஒன்று சேருவதற்கு இப்பாத யாத்திரையின்மூலம் வாய்ப்புக் கிட்டுகிறது. நல்ல திட்டத்தை உருவாக்கிச் செயலுக்குக் கொண்டு வருவதற்கு அப்படி அவர்கள் ஒன்று கூடுவது துணைபுரிகிறது. இப்பாத யாத்திரையில் கலந்து கொள்பவர்களுக்குச் சில விதிமுறைகள் உண்டு. அவ் விதிமுறைகளை அவர்கள் கடைப்பிடிப்பதன் மூலம் மனதை ஓரளவு வென்று பழகுகிறார்கள். சில நல்ல பழக்கங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் கெட்ட பழக்கங்களிலிருந்து விடுபடுகிறார்கள். கிராம மக்களோடு தொடர்பு வைப்பதற்கும், ஏழை எளியவர்களோடு நல்லிணக்கம் கொள்வதற்கும் பாத யாத்திரிகர்கள் பயிற்சி பெறுகிறார்கள். பிரார்த்தனை, ஆலய வழிபாடு, மக்களுக்குப் பணிவிடை செய்தல், தெய்வச் சிந்தனையில் சதா ஈடுபட்டிருத்தல் ஆகிய ஸத்கர்மங்களில் நாள் முழுவதும் பாதயாத்திரிகர்கள் ஈடுபட்டிருக்கத் திட்டம் உள்ளதால் மனம் பண்படுவதற்கு இத்திட்டம் துணைபுரிகிறது. பாதயாத்திரை முழுவதும்தெய்வத்தொண்டன் என்னும் உணர்ச்சி மேலோங்கி இருப்பதால் அகங்காரம் அழிவதற்கு அது துணைபுரிகிறது. ''அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கிவிட்டு விட்டால் இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே'' என்பது தாயுமானவர் வாக்கு. அன்பர் பணி செய்வதில் வரும் இன்பம் குற்ற மற்ற இன்பமாகிறது. உடலுக்கும் உள்ளத்துக்கும் அவ்வின்பம் புத்துணர்ச்சியையும், புது ஊக்கத்தையும் ஊட்டுகிறது. உடல் உறுதி பெறுவதற்கும், உள்ளம் தூய்மை அடைவதற்கும், மக்களிடையே பக்தி பரவுதற்கும், நல்லவர்களிடையே இணக்கம் ஏற்படுவதற்கும் இப்பாத யாத்திரை மிகவும் பயன்படுகிறது. அன்னதானமும், கல்வி தானமும், அருள் தானமும் இப்பாதயாத்திரையின்போது சிறப்பாக நடைபெறுகின்றன. மக்கள் பக்திமான்களாக ஆவதற்கும், தூய்மையுடையவர்களாக ஆவதற்கும், சேவை மனப்பான்மை உடையவர்களாக ஆவதற்கும், யக்ஞமும் தானமும் ஓங்குவதற்கும் இப்பாத யாத்திரை பயன்பட்டு வருவதாகுக.

# செய்திகள்

**நிகழ்பவை**

ஜூன் மாதம் 15-ஆம் தேதி முதல் ஆகஸ்டு மாதம் 15-ஆம் தேதி முடிய பருவ அந்தர் யோகம் குற்றாலம் ஐந்து அருவி ஸ்ரீ ராம கிருஷ்ண ஆச்ரமத்தில் நடைபெறும். இதர விபரங்களுக்கு தர்மசக்கரம் வைகாசி இதழைப் பார்த்துத் தெரிந்து கொள்க.

ஜூலை மாதம் 17ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை அன்று ராமநாதபுரம்ஜில்லா அருப்புக் கோட்டை ஸ்ரீ அமுதலிங்கேச்வரர் அமுதவல்லி அம்பிகை ஆலயத்தில் இரவு 7 மணியிலிருந்து 8-45 மணிவரை **ஸ்ரீமத் நித்தியானந்த** சுவாமிகள் அந்தர்யோக முறையில் அருளுரை வழங்குவார்கள்.

# ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
## இயற்றிய நூல்கள்

| | |
|---|---|
| திருவாசகம்-மூன்ரும் பதிப்பு பிரசார விலை | ரு. 14-00 |
| ஸ்ரீமத் பகவத்கீதை-பதினெனரும் பதிப்பு பிரசார விலை | ... 12-00 |
| ஞானயோக விளக்கம் | ... 8-00 |
| ராஜயோக விளக்கம் | ... 8-00 |
| கர்மயோக விளக்கம் | ... 7-00 |
| பக்தியோக விளக்கம் | ... 6-00 |
| பரமஹம்சரின் பெருமை | ... 6-00 |
| விவேகானந்த விவரணம் | ... 4-00 |
| ஸ்ரீ-விவேகானந்தர் ஜீவிதம் | ... 4-00 |
| விவேகானந்த உபநிஷதம் | ... 4-00 |
| கடவுளின் வடிவங்கள் | ... 4-00 |
| சந்தேகம் தெளிதல் பாகம்-I | ... 3-50 |
| சந்தேகம் தெளிதல் பாகம்-II | ... 3-50 |
| ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்சரீ ஆரும் பதிப்பு-பிரசார விலை | ... 2-75 |
| தினசரி தியானம்-பதிமூன்ரும் பதிப்பு (பிளாஸ்டிக் உறையுடன்) பிரசாரவிலை | ... 2-75 |
| ஸ்ரீ ராமகிருஷ்ணர் சரிதம் | ... 2-00 |
| தேவரகசியம் (முதலிய கதைகள்) | ... 2-00 |
| ஸ்ரீ சாரதா தேவியாரது சரிதம் | ... 2-00 |
| கண்ணன் என்னும் கடவுள் | ... 2-00 |
| தாயுமானவர் இயற்றிய | |
| கருணாகரக்கடவுள் ஷை | ... 2-00 |
| மௌனகுரு வணக்கம் ஷை | ... 1-50 |
| பரசிவ வணக்கம் ஷை | ... 0-50 |
| சந்நியாசி | ... 1-25 |
| பஜனைப் பாடல்கள் | ... 1-25 |
| குழந்தைகளின் களிக்கூடம் | ... 1-00 |
| இராவணத் தத்துவம் | ... 1-00 |
| சகோதரி நிவேதிதை | ... 1-00 |
| ஹரிச்சந்திரன் (நாடகம்) | ... 1-00 |
| காயத்ரீ | ... 1-00 |
| வாலிமோக்ஷம் (நாடகம்) | ... 1-00 |
| தவப்புதல்வர்கள் (நாடகம்) | ... 1-00 |
| அறம் வளர்த்த நம்பி | ... 0-95 |
| நோய்க்கு இடம் கொடேல் | ... 0-80 |
| நன்மக்களைப் பெறுதல் | ... 0-80 |
| தானவீரன் கர்ணன் (நாடகம்) | ... 0-80 |
| பாண்டவ கௌரவ பெருமை (நாடகம்) | ... 0-80 |
| பாதுகா பட்டாபிஷேகம் (நாடகம்) | ... 0-75 |
| இறை வணக்கம் | ரு. 0-75 |
| *ஆத்ம சக்தி | ... 0-75 |
| செத்தவர்கள் நம்மோடு பேசுகிருர்களா? | ...0-75 |
| *மனிதனது நிஜசொரூபம் | ... 0-70 |
| *சக்தி தத்துவம் | ... 0-70 |
| *சிவ தத்துவம் | ... 0-70 |
| பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம் (நாடகம்) | ... 0-65 |
| பிரஹ்லாதன் (நாடகம்) | ... 0-65 |
| *ஈசன் எங்கும் நிறைந்துள்ளான் | ... 0-60 |
| இந்து மதமும் கிறிஸ்துவ மதமும் | ... 0-60 |
| *ஆலய வழிபாடு | ... 0-60 |
| ஸ்ரீ ராமகிருஷ்ணஷ்டோத்தர சத நாமாவளி: | ... 0-50 |
| சைவன் யார்? | ... 0-50 |
| *சூரிய நாராயணன் | ... 0-50 |
| *முருகக் கடவுள் | ... 0-50 |
| *விஷ்ணு தத்துவம் | ... 0-50 |
| மார்க்கண்டேயன் (நாடகம்) | ... 0-40 |
| தபோபலன் (நாடகம்) | ... 0-40 |
| *கணபதி | ... 0-40 |
| வர்ணச்ரம தர்மம் | ... 0-30 |
| அருள் விருந்து 1 முதல் 25 வரை ஒவ்வொன்றும் | ... 0-30 |
| பரசுராமர் கர்வ பங்கம் (நாடகம்) | ... 0-15 |
| The Bhagavad Gita (8th Imp.) | ... 15-00 |
| The Indian National Education | ... 8-00 |
| Sri Lalithambika Sahasranama Stotram | ...8-00 |
| Ramakrishna Lives Vedanta | ... 5-00 |
| Facets of Brahman or The Hindu Gods | ... 5-00 |
| Daily Divine Digest (with plastic-cover) | ... 4-50 |
| Mahabharata (with plastic cover) | ... 4-50 |
| Ramayana (do) | ... 4-00 |
| The Man Making Message of Vivekananda (with plastic cover) | ... 3-00 |
| The Bhagavad Gita (Small Size) (With plastic cover) | ... 3-00 |
| Sri Vishnu Sahasranama Stotram | ... 2-50 |
| Holy Bible—In the Light of Vedanta | ... 1-50 |
| *Introducing the Gita | ... 1-50 |
| *Key to Higher Life | ... 0-75 |
| *The Teacher | ... 0-60 |
| *The Student | ... 0-45 |

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபாற் கட்டணத்திற்காக ஸ்ரீமத் பகவத்கீதைக்கு ரு. 3-00ம் மஞ்ஜரீக்கு ரு. 2-40ம் தினசரி தியானத்திற்கு ரு. 2-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரு. 2-50 முதல் 3-50 வரை சேர்த்து அனுப்புங்கள்.

*இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை-639 115, திருச்சி Dt.

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Yogananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt